ரிஜிஸ்டர் நெ. M. 2992. "PURATCHI" தனிப்பிரதி விலை ஒரு அணா

# புரட்சி.

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:— ஈ. வெ. கிருஷ்ணசாமி.

மாலை 1. | ஈரோடு, ஸ்ரீமுக-ஸு பங்குனி-மீ 12 உ (25—3—1934) | மலர் 13.

## பாழும் பக்தி.

("மண்வெட்டிக் கூலிதினல் ஆச்சே" என்று பாரதியார் பாடியுள்ள மறவர் பாட்டின் மெட்டு)

(சாமி. சிதம்பரனார்.)

பக்தியெனும் பாழுரையைக் கொண்டே—இந்தப்
பாழும்வினை செய்தலைந்தோம் பண்டே
முத்திபெறும் நல்லவழி யதுவே—என்று
மூடமக்கள் நம்பிநின்றார் பொதுவே. (1)

பக்திகொண்டு போற்றும் பொருட் குணத்தை—நன்கு
பார்த்துணர வேண்டுமென்று நினைப்பின்
சக்தியங்கு பாழடைந்து போகும்—என்று
பகர்வதனுற் பக்திமூடம் அன்றோ (2)

பக்தியென்னும் பாழும்மயக் காலே—இந்தப்
பாரில்உறை மக்களவர் பாலே
புத்திவளர் தன்மை கெட்டு—மாண்டு
போனதென்ப துண்மையுரை யன்றோ (3)

முத்தியென்னும் சொல்லின் பொருள் தோரார்—முழு
மூடர்களாய்க் கூடிநின்று வாழ்வார்
இந்தவுடல் இந்தஉடல் நீங்கிப்—பின்னர்
எய்துவது முத்தியென்று சொல்வார். (4)

மனிதர் சுதந்தரமே முத்தி—இதை
மனம்பதித்துக் கொள்ளுவதே புத்தி
இனியிறந்து வேறுலகஞ் சென்று—முத்தி
எய்திடுவ தென்பதொன்றும் இல்லை. (5)

பாலகர்கள் துன்பப்பசி வாட்ட—மிக்க
பரிதவித்துக் கத்துகுரல் கேட்டும்
சாலவிங்குப் பால்பழந்தேன் சேர்ப்பார்—அதைச்
சாமியென்று கல்லின்தலை வார்ப்பார் (6)

பத்தியென்னும் பெயர்சொல்லிக் கொண்டு—வெறும்
பாழுஞ்செயல் செய்தலைவார் உண்டு
நித்தியமும் உண்ணவழி காணார்—இந்த
நிலத்திருந்து வாடுவோரைப் பேணார். (7)

ஆடைகளும் தேகந்தன்னில் இன்றி—பெண்கள்
ஆண்களுடன் பாலகரும் குன்றி
வாடிநொந்து வெய்யில்குளி ராலே—துன்ப
வாழ்க்கை கொள்ளும் மக்கள்துயர் காணார் (8)

செம்புமரங் கற்சிலைகள் வைத்து—அவை
சிறக்கஅலங் காரங்களும் செய்து
நம்பியவை சாமியென்று வீழ்ந்து—துதி
நவின்றிடுவர் பக்திகொண்டு தாழ்ந்து. (9)

வாழ்வதற்குக் குடிசையொன்றும் காணார்—இங்கு
வாடிநிற்கும் மக்கள்துயர் பேணா
பாழும்பக்தி என்னுமயக் காலே—பெரும்
பணங்களையும் செலவழிப்பார் வீணே. (10)

கோடியென்னும் கணக்கிற்பணம் கொட்டி—பெரும்
கோயில்களும் பலவற்றைக் கட்டி
ஓடிக்காட்டில் பறக்கின்ற வௌவால்—கூடி
உறைந்திருக்கும் இடங்களாகச் செய்வார். (11)

சாணளவு கொண்டதொரு சிலையை—நன்கு
சாத்துபடி செய்துமலை போலே
காணநிற்கும் பெரியதொரு தேர்மேல்—வைத்துக்
கணக்குவழக் கற்றமக்கள் இழுப்பார்.

## குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

ஈ வெ. ரா. சொற்பொழிவு
விலை அணா 2,

அகத்தியர் ஆராய்ச்சி
விலை அணா 2.

இராமலிங்க சுவாமிகள் பாடல்
விலை அணா 2.

சுயமரியாதைப் பாடல்
விலை அணா 2.

கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)
விலை அணா 2.

சுயமரியாதை தாலாட்டு
விலை அணா 2.

சோதிடப் புரட்டு
விலை அணா 2.

பர்னார்ட்ஷா உபந்யாசம்
விலை அணா 1.

இலங்கை உபந்யாசம்
விலை அரை அணா.

கத்தோலிக்கர் வீண் கூச்சல்
விலை அரை அணா.

குடி அரசு புத்தகாலயம் ஈரோடு.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | |
|---|---|
| சிதம்பர ரகசியம் ... | 0—8—0 |
| சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை | 0—4—0 |
| மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை | 0—8—0 |
| பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை | 0—6—C |
| மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோக பயிற்சி முறையும் ... | 2—0—0 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் விலை ... ... | 0—6—0 |
| சுயராஜ்யம் யாருக்கு ... | 0—1—0 |
| சாமிகளின் அடிமைகள் ... | 0—12—0 |
| சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... | 2—0—0 |
| பகுத்தறிவு கீதம் ... | 0—1—0 |

## 'பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகப் புஸ்தகங்கள் நம்மிடம் கிடைக்கும்.

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு [illegible] தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

[illegible] அரசு மாலைகள் [illegible] கார்வையாக முதல்வருஷத்திலிருந்து [illegible] வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் [illegible] பண்ட் செய்து புஸ்தகமாகவைக்கப்பட்டிருக்கிறது

[illegible] கிரயம் ரூ. 4—0—0

[illegible] சேர்ந்தது கிரயம் ரூ. 4—0—0

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.


ஏழு தலைமுறைகளாய்க் கையாண்டனுபவம் வாய்ந்ததும் வைத்திய மகாநாடுகளிலும், கண்காட்சிகளிலும் மதிப்புப் பெற்றதுமான ஔஷதங்கள் எங்களுடையது.

ஆப்ரேஷன் அவசியமில்லை

# நாகபற்பம்.

சாப்பிடுங்கள் (மூலவியாதிக்கு)

எவ்விதமான மூலரோகமாயிருந்தாலும் சரி. எமது பற்பம் குணப்படுத்தும். மூளை தானே கரையும். சீழ்மூலம் ரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதி சீக்கிரம் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம்.

புட்டி 1க்கு ரூ. 4.

## தாளக பஸ்பம்.

(இருமலுக்கு)

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம் கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயினும் சரி எட்டுவிதகாசமும் தீரும்.

புட்டி 1க்கு ரூ. 4.

## அப்ரேக் செந்தூரம்.

(நீரழிவுக்கு)

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்துத் தாகத்தை நிறுத்தி இரத்த விருத்தியைத் தரும்.

டி 1க்கு விலை ரூ. 15. வி. பி. வேறு.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி. S.I.



மணம் நிறைந்தது! குணம் உயர்ந்தது!!

## இதைச் சாப்பிடுங்கள்.

காபி, ஓவல், டீ, கொக்கோ முதலான பானத்திற்குப்பதிலாக அநேகவிதமான மூலிகையின் வேர், பூ, வித்து வகைகளால் தயார் செய்யப்பெற்றுள்ள

## சுகானந்த பானச் சூரணம்.

ஒன்றே யாவராலும் விரும்பத்தக்கது. வெட்டைச்சூடு, நீரழிவு, நீர்க்கடுப்பு, காமாலை, சோகை, அஜீரணம், பலஹீனம் ஆகிய வியாதிகளை அடியோடு போக்கி இரத்த சுத்தி, ஞாபகசக்தி சுறுசுறுப்பு இவைகளை பூரணமாகத்தரத்தக்கது.

காலை மாலை இரண்டு வேளைகளிலும் மற்ற பானங்களைப் போன்றே உபயோகிக்கலாம். இதனை ஒருமுறை வாங்கி சாப்பிடுங்கள்.

1-டப்பியின் விலை அணா 10.

வியாபாரிகட்கு தக்க கமிஷன் உண்டு.

விலாசம்:— தேசஷண்முகமூர்த்தி தமிழ் வைத்தியசாலை
திருக்கோஷ்டியூர், (ராமநாதபுரம் ஜில்லா.)

# ருஷ்யாவின்

## பொருளாதார முன்னேற்றம்.

காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்கள் எழுதியது:—

### சரித்திரம்.

1921 முதல் 1928 வரை, ருஷ்யா, அரசாங்க முறையை அமைப்பதிலேயே கண்ணாக இருந்தது. பொருளாதார முன்னேற்றத்தை ஒருவாறு கவனித்தபோதிலும், "ஜார்" ஏகாதிபத்திய அரசாங்க முறையை பொதுவுடைமைத் தத்துவத்திற்கு ஏற்க சீரமைப்பதே பெரிய காரியமாகப் போய்விட்டது. பொதுவுடைமைத் தத்துவத்தை நம்பும் உத்தியோகஸ்தர்களை நியமித்தும், மற்றவிடங்களில் ராஜீய நிர்வாகத்தில் கலந்து சச்சரவு ஏற்படுத்த இஷ்டமில்லாத நிபுணர்களை வரவழைத்தும், ருஷ்ய போல்ஷ்விக் கட்சியார் ஓர் புதிய அரசாங்க அமைப்பை ஏற்படுத்தினர்.

### பொருளாதார முன்னேற்ற திட்டம்.

பொருளாதார முன்னேற்றத்திற்கு ஒரு அட்டவணையை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் லெனினுடையது என்று பால் விண்டர்டன் ராயல் எகனமிக் சஞ்சிகையில் எழுதுகிறார். லெனினுடைய ஐந்துவருட அட்டவணையில் முக்கியமானது விரைவான பொருளாதமுன்னேற்றம். முதலாளித்துவமே சிறந்தோங்கிய நாட்களில் கூட இந்த வேகம் கிடையாது. தவிரவும் பொது ஜனங்களுக்கு முன் இது மீண்டும், மீண்டும் பிரசாரம் செய்யப்பட்டதால், தேச ஜனங்கள் குதூகலத்துடன் ஒத்துழைத்து அட்டவணையைக் கொண்டு செலுத்த வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. முதலில் ஏற்படுத்தப்பட்ட புள்ளி விவரங்கள் ஐந்து வருடங்களுக்கு முன்னரே அதிகப்படுத்தப்பட்டன.

### ஆச்சரியகரமான மாற்றம்.

சாதாரண விவசாயிகளாக இருந்த ருஷ்ய ஜனங்களை வெகுகுறைந்த காலத்தில் இயந்திர நாகரீகத்திற்கு மாற்றுவதென்றால் பல கஷ்டங்கள் ஏற்பட்டுத்தானிருக்கவேண்டும். ருஷ்யர்களே இவற்றை ஒப்புக்கொள்கின்றனர். ஆயினும் ருஷ்யாவின் முன்னேற்றம் ஆச்சரியமாகத்தானிருக்கின்றது. ஒரு தேசமே புத்துயிர் கொண்டு எழுந்தாற் போல் இவ் வேலையில் புகுந்தது. பிரேயில்ஸ் போர்டு தன் புத்தகத்தில் காஸெக் பெண்கள் ஆடுமாடுகளை ஓட்டி விளையாடிக்கொண்டிருப்பதைவிட்டுவிட்டு ருஷ்யாவில் குதூகலத்துடன் படித்துக்கொண்டும், இயந்திரசாலைகளில் சந்தோஷமாக வேலைசெய்து கொண்டிருப்பதையும் கண்டார். ஆசியாகண்ட கிராமங்களில் பழய ஏர்களை ஓட்டிக் கொண்டிருந்த சிறுவர்கள் சோவியத் விவசாய பண்ணைகளில் சிரித்துக்கொண்டு மோட்டார் ட்ராக்டர்களை ஓட்டுவதற்கு கற்றுக் கொண்டிருக்கின்றனர். சற்று அவசரப்பட்டு விஞ்ஞான சாஸ்திர பயிர்ச்சியில்லாதவர்களை மோட்டார்களையும், அதிக சிக்கல்களுள்ள இயந்திரங்களையும் கையாடச் சொல்லுவதால் ருஷ்யாவில் ரிப்பேர் ஷாப்புகளில் வேலை மிகவும் அதிகமாகி விட்டது. இதறகாக புதிய ஐந்து வருட பிளானில் முதல் சுலோகம் "மெஷின்களைக் கவனியுங்கள்".

### மின்சாரம், இரும்பு, சீமெண்ணை.

பால்விண்டர்டன் ருஷ்யா நான்கு வருடங்களில் மின்சார சக்தி உற்பத்தியில் உலகில் பத்தாவது இடத்திலிருந்து ஆறுவது இடத்திற்குப் வந்து விட்டதென்று கூறிப்பிடுகிறார். பிக் இரும்பு (Pig Iron) உற்பத்தியில் ஆறுவது இடத்திலிருந்து, இரண்டாவது இடத்திற்கு தாவிவிட்டதாம். மெஷின உற்பத்தியில் ருஷ்யா தற்பொழுது உலகிலேயே இரண்டாவதாம். நான்கு வருடங்களுக்குமுன்னர் நான்காவதாக இருந்தது. மண்ணெண்ணை உற்பத்தியில் மூன்றுவது இடத்திலிருந்து இரண்டாவதாகி விட்டது. ருஷ்யாவைப் போல் எந்த தேசத்திலும் விவசாய மெஷின்கள் உற்பத்தி செய்யப்படவில்லையாம். வெகு குறைந்த காலத்தில் ருஷ்யா விவசாய நாகரீகத்திலிருந்து மெஷின் நாகரீகத்திற்கு வந்து விட்டது.

### இயந்திரங்கள் பரவுகின்றன.

இந்த ஐந்து வருட அட்டவணைக்கு முன்னிருந்த ஸ்திதியை சற்று கவனிப்போம். 1928ம் வருடத்தில் நூற்றுக்கு 85 டன் நிலக்கரி கையால் எடுக்கப்பட்டதென்று பால்விண்டர்டன் கூறுகிறார். தற்பொழுது 66 டன் நிலக்கரி மெஷின்களால் எடுக்கப்படுகின்றனவாம். முன்பு இரும்புத் தொழிலிலும், மரத்தொழிலிலும் மெஷின்களை உபயோகிக்கப்படவில்லை. தற்பொழுதோ மெஷின்கள் எண்ணை எடுப்பதற்கும், இரும்பு சுரங்கங்களிலும், மரம் அருப்பதற்கும் உபயோகப் படுத்தப்படுக்தப் படுகின்றன. 1928-32ஹு வரைஇங்கிலாந்திலிருந்தமட்டும் வருடம் 60 லக்ஷம் பவுன் பெருமான மெஷின் சாமான்கள் இறக்குமதியாயின. ருஷ்யாவிலேயே வருடம் 140 கோடி ரூபில் விலை பொருமான மெஷின்கள் 1925ல் செய்யப்பட்டன. 1932ல், 525 கோடி ரூபில் பொருமான மெஷின் சாமான்கள் செய்யப்பட்டன. (Paul Winterton) தவிரவும் 1928 லிருந்து 1932க்குள் ருஷ்யாவில் வருடம் 37½ கோடி ரூபில் பொருமான நிலக்கரியிலிருந்து 66 கோடி ரூபில் பொருமான நிலக்கரி சுரங்கங்களிலிருந்து எடுக்கப்பட்டது. எண்ணை 58 கோடி பொருமானத்திலிருந்து 141 கோடி ரூபில் பொருமானத்துக்கு அதிகரிக்கப்பட்டது. இரும்பு உலோகங்கள் 35 கோடி ரூபிலிலிருந்து 104 கோடி ரூபில் பொருமானத்துக்கு அதிகரிக்கப்பட்டது. 1928ல் ருஷ்யாவில் மின்சாரம் 1,874,000 கிலோவாட்டுகள் தான் உற்பத்தி செய்யப்பட்டன. 1932ல் 4,567,000 கிலோவாட்டுகள் உற்பத்தி செய்யப்பட்டன. பால்விண்டர்டன் ருஷ்யா பலவிதங்களிலும் அபிவிருத்தியடைந்து விட்டதென்று குறிப்பிடுகிறார். உக்ரேனிய ராஜதானியில் கார்கோவ் பட்டணத்தினருகாமையில் ஐந்து வருடங்களில் H. T. Z. என்று பெயரிடப்பட்ட ஓர் ட்ராக்டர் பாக்டரி ஏற்படுத்தப்பட்டதென்றும், இம்மாதிரி பெரும் தொழிற்சாலைகள் ருஷ்யாவில் அநேக இடங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவென்றும் பால்விண்டர்டன் சொல்லுகிறார்.

### குணமும், கவனிக்கப்படுகின்றது.

இந்த புதிய சீரமைப்பில் சாமான்கள் எண்ணிக்கையை மட்டும் அதிகப்படுத்தி அவைகளின் யோக்கியதையை அதிகப்படுத்தாமலில்லையென்றும், முன்பு கைத்தொழில்கள் பீடர்ஸ்பக், மாஸ்கோவை மட்டும் சுற்றி இருந்ததாகவும், தற்பொழுது ருஷ்யா ராஜதானிகள் ஒவ்வொன்றிலும் பெரும் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டு ஜனங்கள் மெஷின் தொழில் முறைக்கு திருப்பப்படுகிறார்களென்றும் பால்விண்டர்டன் சொல்லுகிறார். ரயில் பாதைகளை அதிகப்படுத்தி ருஷ்ய ராஜதானிகளை பிணைக்கப்படுகின்றனவென்றும் கூறுகிறார். 1928ல் ருஷ்ய ரயில் பாதைகளின் நீளம் 76,900 கிலோமீடர்கள். தற்பொழுது 83,400 கிலோமீட்டர்கள்.

விவசாய அபிவிருத்தியும் பின் வாங்கவில்லை. ருஷ்யாவே பெரும் விவசாய தேசம். தவிரவும் ருஷ்யா 1928ல் புதிய பொருளாதார முறையை கையாள ஆரம்பித்தது முதல் டவுன்களில் வேலைசெய்யும் தொழிலாளிகளுக்கு உணவு கொடுக்கவேண்டியதாயிற்று. [2] அதிக விவசாய சாமான்களை உற்பத்தி செய்து வெளி தேசங்களுக்கு அனுப்பி மெஷின்களை இறக்குமதி செய்வது அவசியமாயிற்று. [3] புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கு பருத்தி, சணல் இவற்றை அதிகமாய் ஏற்படுத்தவேண்டியதாயிற்று. [4] கிராமங்களில் உணவில்லாமல் தவித்த அநேகர்களுக்கு உணவும் உடையும் அளிப்பதும் அவசியமாயிற்று.

1928க்கு முன்பு கிராமங்களிலிருந்த அதிக தானியங்களை பலாத்காரமாக போல்ஷ்விக்காரர்கள் பறிமுதல் செய்ய ஆரம்பித்தனர். ஆனதால் கிராமவாசிகள் அடுத்த வருடம் குறைவாக உற்பத்தி செய்தனர். லெனின் இதைத் தடுக்க கிராமத்திலிருந்து தானியங்களை விலை கொடுத்து வாங்க நிச்சயித்தார். விலை கொடுத்து வாங்கியதில் முதலில் கோவாபரேடிவ் சொசைடிகளும், மற்ற சோவியத் ராஜாங்க டிபார்டுமெண்டுகளும் போட்டி போட்டதால் சிறிது கஷ்டம் ஏற்பட்டது. பின்பு ஒரே டிபார்ட்மெண்டே இவற்றை வாங்கவும், விவசாயிகளுக்கு விவசாய மெஷின்களை விற்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

### இயந்திரங்களைக்கொண்டு விவசாயம்.

பழைய விவசாய முறைகளிலி

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

# கடல் கடந்த வாணிபமும், அதனாற்பெறும் பயனும்.

(தோழர் M. K. அழகப்பா.)

இன்று சற்றேறக்குறைய ஒரு நூற்றாண்டுகட்கு முன், வாணிபத்தைக் கைக்கொண்ட வணிகர்களின் வாணிபம் அக்காலத்தில் மிக்க நலிவுற்றிருந்தமையின் காரணமாக அந்நிய நாடுகட்குச்சென்று வாணிபம் செய்யவேண்டுமென்ற பேராவலோடு, ஒருமாதகாலம்வரை பிரயாணஞ்செய்ய வேண்டியிருந்த பாய் கட்டிக்கப்பல் என்றதோணியிற் சென்று முதன்முதல் பர்மாதேசம் புகலாயினர். அக்காலத்தில் நீண்ட நாள் பிரயாணத்தின் காரணமாக தம் மனைவி மக்களை அழைத்துச்செல்லுதல் முடியாமையாகத் தோன்றியமையால் தம் மனைவிமக்களை தாயகத்திலேயே விட்டுப்பிரிய நேர்ந்ததெனத்தெரிய வருகிறது. ஆனால் இக்காலத்திலோ வெகு சுலபமாகப்போய் வரக்கூடியதும், அதிக பத்திரமானதும், குறுகியநாட் பிரயாணத்திற் கேதுவானதுமான சாதனங்கள் பலவிருந்தும் முன்னோர்கள் கண்டபாதை, கைக்கொண்ட கொள்கைஎனக் குரங்குப்பிடியாகப் பிடித்துக்கொண்டு உடனழைத்துச் செல்லுதலை நாகரீகயற்ற, வரம்புக்குமீறிய செய்கை என மனப்பால் குடித்துக் கொண்டிருக்கின்றனர். இவ்வித மனப்பான்மை கொண்ட இச்சமூகத்திலும் சேற்றில் மலர்ந்த செந்தாமறை போன்று, சீர்திருத்தவேட்கை மிக்க சில தோழர்கள் முன்னோர்கள் கண்ட கற்கோட்டையைத் தகர்த்தெரிந்து, தற்கால உலகப்போக்கிற் கொத்தவாறு நாம் நடந்துகொள்ள வேண்டுமென்ற வேட்கை மிகுதியினால் தம் மனைவி, மக்களை அயல்நாடுகட்கு உடனழைத்துச் சென்றிருக்கின்றார்கள். ஆனாலும் பெரும்பாகம் கொண்ட இச்சமூக மக்கள் உடனழைத்துச் செல்லுதலில் கிஞ்சிற்றும் சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை என்றே சொல்லவேண்டியிருக்கிறது.

இவ்வணிகர்கள் பர்மாதேசம் புகுந்ததும் வாணிப முறைமாறி வட்டித்தொழில் என்ற முறையிற் சென்றுவிட்டனர். அக்காலத்தில் அந்நாட்டு மக்கள் யாவரும் கல்வியறிவு, அதிகம் பெற்றிராமையின் காரணமாக வட்டியின் திட்டம் ஓர் வறையறை செய்யப் படவில்லை என்றும் இவர்கள் இட்டதுதான் சட்டமெனவும் தெரியவருவதோடு, 100-க்கு மாதம் 1க்கு 5-முதல் 10-வரையில் சர்வ சாதாரணமாக நஷ்டமதிகமேற்படாத இனங்கட்கு கொடுத்து வாங்கி வந்திருப்பதோடு வட்டிக்கு, வட்டி எனவும் அண்டிமேண்காசு எனவும் ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்களில் ஒன்றாகிய (Merchant of venice) மெர்சண்ட் ஆவ்வெனிஸ் என்ற நாடகப்பாத்திரங்களில் வரும் கடன் கொடுத்த யூதரைப்போன்று விவசாயி, தொழிலாளி, ஏழை, எளியவர்களை வஞ்சித்துப் பெரும்பொருள் திரட்டிவர ஹேதுவாக விருந்தனவென்பது இவர்களது வரலாற்றின் வாயிலாக அறியக்கிடக்கின்றன. முதன்முதல் பர்மாநாடு புகுந்த இவர்கள் வியாபாரம் குணமடையவே, "ஆசைக்கோர் அளவில்லை" என்பதுபோல இதர நாடுகளிலும் குடியேற வேண்டுமென்ற ஆவல் மிகுதியால், பிறகு இலங்கை, மலாய், சைகோன் பகுதிகட்கும் சென்று அந்நாட்டுப் பாஷைகளும் பயின்று தமது வட்டிக் கடை வியாபாரத்தைத் துடர்ந்து நடத்திவரலானார்கள். சிற்சில சமயங்களில் தாம் கடன் கொடுத்த மக்களிடம் ஈவு, இரக்கம், தயவு, தாட்சண்யம் என்பது இன்னதென்றே அறியாது, கர்னகடூரமாக நடந்துகொள்வதும் கண்கூடு. இப்பேர்க்கொண்ட இவர்களிடமகப்பட்ட ஏழை, எளிய மக்கள் என்செய்வார்கள். பாவம்! எல்லாம் கடவுள் செயல் என்று சொல்லி எவனோ கண்ணுக்குப் புலப்படாத ஒருவன் உண்டு என நம்பிக்கைகொண்டு அவன்பேரில் பழியைச் சுமத்துவதைத் தவிர வேறு வழியைக் காணோம். இவ்வாறாக ஊரார் உழைப்பின் பயனை ஒருவிதக் கஷ்டமுமில்லாது ஏழை எளியவர்களின் கூறிய வாளாயுதமாகத் தோன்றும் எழுதுகோலைக் கையிலேந்தியவண்ணம் வட்டிப் புள்ளிகள் போடுவதும் புத்தகத்தில் எழுதுவதுமே பூலோக சுவர்க்கமெனக்கொண்ட இவர்களின் உள்ளத்தில் பணம், பணம் என்ற பாராயணத்தைத் தவிர வேறு உலக விவகாரங்கள் உதயமாகுமா? இத்தகைய பணம்பெரும் பூதத்திற்குஇலக்காகி அல்லும், பகலும் அனவரதமும் பணம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு பணப் பித்துப் பிடித்த இவர்களிடம் நாட்டு மக்கள் நலமுடன் வாழவேண்டுமென்ற நல்லெண்ணமுண்டாகுமா? அல்லது உலக இன்பம் பயக்குமா? வேறு ஆண், பெண் இருபாலர்கட்கும் இயற்கையாகவுள்ள காதல்மணம் மணக்குமா? நாடாறுண்டு வீடாறுமாதம் வாழும் (மனைவி மக்களைத் துறந்து) இத்தகையவர்களிடம் அம்மா இங்கேயும், அய்யா அங்கேயுமாக வாழும்போது கருத்தொருமித்து வாழ வழியுண்டா? இவைகளெல்லாம் ஊமையன் கண்ட கனவையே ஒக்கும். மேலும் இப் பிரமச்சாரிகள் நாட்டு வாசத்தினின்றும் வீட்டுவாசத்திற்குத் திரும்பி இல்லற வாழ்க்கையில் பிரவேசிக்கும்போதே புத்திரன் என்ற கவலை எட்டிப் பிடுத்துக்கொள்ளுகிறது. அப்பால் புரோகிதப் பார்ப்பனன், பஞ்சாங்கப் பார்ப்பனன், சோதிடப் பார்ப்பனன் இவர்களெல்லோரிடமும் ஆலோசனை கேட்கப்படுகிறது. மேற்கண்ட பார்ப்பனர்களின் போதனைபின்படியே கண்ட கண்ட கல் விக்கிரகங்களுக்கு கனகாபிஷேகஞ் செய்வதும் அவைகட்குக் கற்கோவில்கள் கட்டுவதும், கும்பாபிஷேகங்கள் செய்வதும், பிராமணர் கட்குப் பூரி தட்சணைகள் கொடுப்பதும் காடாகக் கிடந்தவிடங்களைக் கோவில்களாக மாற்றுவதும் கண்டவிடங்களில் நாளுக்கு நாள்வளர் பிறைச் சந்திரன் போன்று சோம்பேறிக் கூட்டங்கள் வளர்ந்து வர சத்திரங்கள், சாவடிகள் கட்டுவதும் அதற்குப் பிராமணர்களை ஏகபோக தனி உரிமை அமுல் நடத்த ஆதரவளிப்பதும் இத்தகைய ஒன்றுக்கும் உதவாத வழிகளில் நாட்டு மக்கள் மூடப் பழக்க வழக்கங்கட்கு அடிமையானது போராதென மீண்டும் மீண்டும் அடிமைப் படுகுழியில் கிடந்துழல்வதற்கு உறுதுணையாக விவசாயிகளை, தொழிலாளிகளை, ஏழை எளியவர்களை வஞ்சித்துத் திரட்டிய பாபம் நிவர்த்தியாகிவிடுமென்ற மூடநம்பிக்கையோடு கல்லுக்கும் மண்ணுக்கும் பொருளை வாரி வாரி இறைப்பதும் மக்கள் முன்னேற்ற விஷயங்களில் சிலவிட மனங்கசப்பதும் தமிழ் மொழியிலே இவர்கட்கென்றே பொருக்கி எடுத்த தனிமொழியாகிய "இழவு" என்ற அலங்காரச்சொல்லை மூன்று சொற்களுக்கு மத்தியில் ஒவ்வொரு "இழவு" என்ற சொல்லைப்பிணைத்துக்கொண்டு எடுத்ததற்கெல்லாம் "இதென்ன இழவு" 'பாரிழவு' என்ற பதத்தை உபயோகப்படுத்துவதில் பின்வாங்காத தீரர்களாகவும் மிளிர்வதை புதிதாகப்பார்ப்பவர்கட்கு இது என்ன? புது ஜீவ வர்க்கங்களின் கூட்டமோ? வென ஐயுறுமாறு புதுமையாகப் புலப்படுவதும் வெள்ளிடை மலை.

ஆவ்வாறாக அயல் நாடுளில் ஏகபோக உரிமை கொண்டாடி நிதிதிரட்டிவந்த இவர்கள் ஒருதேசத்து மக்களை அல்ல, பல்வேறு தேசத்து மக்களை ஒருநாளைக்கு அல்லது சிலநாளைக்கு ஏமாற்றலாம். ஏக காலமும் ஏமாற்ற முடியுமா? இன்று வட்டித்தொழில் செய்பவரென்றால் மக்கள் வயிறு பற்றி எரிவதோடு அந்தந்த நாட்டிலுள்ள மக்கள் யாவரும் ஊரைவிட்டுத்துரத்தவும் எத்தனித்துவிட்டார்கள். மக்களின் பொருளாதார நிலையை உலக வியாபாரமந்தம் ஒருபுறம் தாக்கவும் மற்றொரு புறம் கடன் கொடுத்த முதலாளிகள் தாக்கவும் இரண்டுக்குமிடையில் கிடந்து நசுக்குறும் மக்கள் எத்தனை கோடி. இத்தகைய முதலாளிக்கூட்டங்களிலும் அநேகர் தம்மிடமுள்ள முதலுக்கு மேல் கடன்களை வாங்கி, பார்ப்பனர்களில் பகட்டுப்பேச்சிலும், குருட்டு நம்பிக்கையிலும் சிக்கி அவர்கள் கைசூத்ரப்பொம்மைகளாக சொன்ன சொன்ன செலவு செய்யும் சூரர்களாக மாறி கோவில் என்றும், கும்பாபிஷேகமென்றும், ஆடம்பர வைபவ கல்யாணமென்றும் இன்னும் எத்தனையோ வகைகளில் கடன் கொடுத்தவர்கள் தங்களின் பணங்களைக் கேட்கும்போது அந்நிய ராஜாங்கத்தில் அடைக்கலம் புகும் காக்ஷி அதியற்புதமாகவேயிருக்கும். சிற்சிலர் தம்மிடமுள்ள சொற்ப பணங்கள் வைத்துக் கொண்டிருப்பதை பாங்கில் போட்டால் திரும்ப கிடைக்குமோ? கிடைக்காதோ? என்ற அவநம்பிக்கையோடும், தங்கமாக வாங்கி வைத்தால் வட்டி கிடைக்காதே என்ற ஏமாற்றத்தோடும் எந்த வகையில் வைத்துக்காப்பாற்றி எதிர்காலமென்னும் செஞ்சிக்கோட்டையை எவ்வாறு முற்றுகையிடுவது என்ற சிந்தனை செய்து கவலைக் கடலில் மூழ்கித்தத்தளிப்பதுமான காட்சிகளை நோக்குமிடத்து என்னே! காலச்சக்கிரம் சுழலும் சுழாச்சியால் சொற்ப பணமுள்ளவன் பெரும் பணக்காரனுக்கு எஜமானாவதும், முன் அரண்மனையிலிருந்து கொண்டு ஆசி செய்தவன் இன்று ஆண்டியாக மாறுவதும் அகங்கார ஆணவத்தாலும் தம்மிடம் பெரும் பணம் உண்டு என்ற மமதையாலும் கண்ட கண்ட படி நாட்டு மக்கட்கு ஒன்றுக்குதவாதவாறு முன்வாறிவாறி இறைத்துக்கொண்டிருந்தவர்கள் இன்று வாங்கிய கடன் கட்கு வகை செய்ய வழியறியாது திருட்டு விழி விழிக்கின்றதும் அன்றாடம் நடைபெறும் காட்சி. இத்தகைய அல்லோலகல்லோலமான காட்சிகளிலும் பார்ப்பனர்களின் வியாபாரத்திற்கு எவ்வித இடையூறுகளும் ஏற்படாதவாறு அன்று நடந்த விதமே இன்றும் நடைபெற்று வருகின்றனவென்றால் என்னே இவர்களின் மூடமதி! ஆகையால் இத்தகைய கூட்டத்தார் எத்தனை கஷ்ட நஷ்டங்கட்கு ஆளாகி கடல் கடந்து "பெரும் பொருள் திரட்டி" நாட்டுக்கு கொண்டுவந்தபோதிலும் "நாட்டிற்குநல்லதுரை வந்தாலும் தோட்டிக்குப் புல் சுமக்கும் வேலை மாறாது" என்பன போன்று நாட்டிற்கு கடுகளவேனும் நன்மையுண்டாகாது, உண்டாகாதென முடிக்கின்றேன்.

## சென்னை சென்ட்ரல் சுயமரியாதைச் சங்கம்.

ஷை சங்கத்தின் மாதாந்திரக் கூட்டம், எ. கணேசன் தலைமையின் கீழ் 18-3-34-ந்தேதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடந்தேறியது.

# பட்டதினிப்போதும்!

(உ. க.)

சூரிய வெளிச்சம் தங்கு தடையின்றி புகுமாறு பனை ஓலைகளால் போர்த்தப்பட்ட சின்னஞ் சிறு குடிசையே தொழிலாளியின் இல்லம். சப்பாத்துப் புதரே அவன் வீட்டு வெளிமதில். கோவணமொன்றே அவனது ஆடை. வைக்கோல் புல்லே அவனது படுக்கை. குளிர்ச்சியான ஓடைத் தண்ணீரே அவன் கொள்ளும் ஆகாரம். இடையில் அழுக்கடைந்து பல இடங்களில் தைத்து ஒரு சுற்றில் உடுத்தியிருக்கும் ஒரு துணியும், ஆகாரங் கண்டு நெடுநாள் ஆனமையால் ஒட்டிய வயிறும், எலும்புந் தோலுமாய் பிரேதக் களையோடு விளங்கும் பெண்மணியே அவனது ஆருயிர் மனைவி. சூப்பிய கைகால்களும், வயிறு பெருத்து திருச் சடைகளோடு சப்பாத்துப் புதருக்குள் நின்று ஆடுமேய்க்கும் சிறுவனே அவ் வேழையின் செல்வப் புதல்வன். இதுவே இன்றைக்கு விவசாயத் தொழிலாளியின் குடும்பம் இருக்கும் "உன்னத" நிலைமை.

வருஷத்தில் பண்ணையார் கொடுக்கும் சில மரக்கால நெல் தானியமே அக் குடும்பத்தினரின் உயிரை "மேலுலகு"க்கனுப்பாமல் நில உலகில் நிலைநிறுத்தி இருக்கும் அமிர்த சஞ்சீவி. உலகில் அபோகமான செல்வங்கள் பொதுப் படையாக இருந்து சகல ஜீவான்மாக்களும் ஏககாலத்தில் அனுபவித்து சுகிக்கவே பெருகி நிற்கின்றனவென்பது வேதாந்த தத்துவம். ஆனால் அது அனுபவ உலகில் நேருக்கு நேர் முரணாகப்பட்டு ஒரு பகுதியார் ஏராளமான செல்வங்களைத் தமதாகக் கொண்டு மற்றொரு பகுதியார் சதா சர்வ காலமும் துன்ப சமுத்திரத்தில் நீந்தி கரையேற மார்க்கமின்றி உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கின்றனர். இது உலகில் கண்கூடாகக் காணும் காட்சி.

பண்ணையார் வீட்டில் எந்த நட்சத்திரத்தில் சிசு உதயமானதோ, அதேகாலத்தில் அவன் மனைவியும் மகனைப் பெற்றாள். பண்ணையார் வீட்டுக் குழந்தை சிரசு வெளிப்பட்ட போதே அநேக ஆயிரம் வேலி நிலங்களுக்கு அதிபதியாகவும், குவிந்து கிடக்கும் தங்கப் பாளங்களுக்கு சர்வாதிகாரியாகவும் தோன்றியது. தொழிலாளியின் குழந்தையோ அன்றாடம் கஞ்சிக்கு வழியின்றி மூன்று தினங்களுக்கு ஓர் நாள் முறைவைத்து ஆகாரம் உட்கொள்ளும் பரம தரித்திரனாக அவதரித்தது. இதன் காரணம் என்ன? தனது அளவுக்கு ஆயிரக் கணக்குக்குமேல் செல்வத்தைத் தனது கைக்குள் அடக்கிக்கொண்டு ஒரு சிசு பிறக்க, மாதாவின் மாரில் ஒரு சொட்டுப் பால் குடிக்க முடியாது பசியால் அணு அணுவாகத் தனது உயிரைப் போக்கிக்கொண்டு காற்றுகாரத்தை உட்கொண்டு வளரும்படியாய் மற்றொரு குழந்தை உலகில் பிறப்பதற்குப் படித்த கூட்டத்தார் காரணம் கண்டுபிடிக்கவில்லையா? சூக்ஷமமாக விளங்கும் காரணத்தைக் கண்டு அதை அடியோடு விலக்கி உலகில் ஜனித்த சகல குழந்தைகளும் சமமான நிலையில் சுகித்து திடதேகத்தோடு வளர உலக மக்கள் திட்டம் வகுக்கவில்லையா? பகுத்தறிவை நெடுந் தூரத்திற்கு அனுப்பி விட்டுபுத்தகப் பிரேதங்களாக விளங்கும் படிப்பாளர் இதன்பொருட்டுச் சொல்லும் காரண சமாதானமே விசித்திரமானது. அந்தந்தக் குழந்தைகள் சுகபோகங்களோடு ஜனிப்பதற்கு அதனதன் ஜாதகக் கூறு என்றும், "நட்சத்திரப் பலன்" என்றும் சொல்லுகின்றனர். ஒரு குறிப்பிட்ட நட்சத்திர லக்கினத்தில் உலகில் பிறக்கும் எண்ணிறந்த குழந்தைகளின் காலபலன் ஒரே மாதிரியாக இருக்கிறதா? சக்ரவர்த்தி ஸ்தானத்தில் அமருவதற்கு ஏதுவான லக்கினத்தில் உதயமாகும் குழந்தைகள் எல்லாம் இராஜாக்களாகின்றனவா? ஏழையின் வீட்டில் பிறக்கும் சிசுதான் சாகுமட்டும் முதலாளி வீட்டுப் பிள்ளைக்கு அடிமையாக இருந்து பணக்காரன் வீட்டுப் பிள்ளை தின்று வெளியில் போட்ட எச்சிலையில் உண்டு தனது தேக போஷணை ஆற்றி வளர்ந்து முடிவடைகிறது. இங்கே ஜாதகப் பலன் எங்கே?

"எல்லாம் பூர்வ ஜன்மத்தில் செய்த வினை" பூர்வ கர்மாவின் வினையை இந்த ஜன்மத்தில் அனுபவிக்கிறோம் என்று ஞானத்தால் உணர்பவர் கூட்டம் எண்ணிறந்தது. பூர்வ ஜன்மத்தில் செய்த கர்மவினை இன்னதென்று தெரிவதில்லை. ஒரு குற்றத்திற்கு இன்ன தண்டனை என்பதே நாகரீக உலகு அனுஷ்டிக்கும் வழி. குற்றம் இன்னதென்று தெரியாமல் தண்டனையிட்டும் விதிக்கும் நீதிபதி பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இருக்கத் தகுதியானவர் என்று உலகு எண்ணுகிறது. துன்பம் அனுபவிக்கும் காலத்தில் காரணம் புலப்படாமல் பூர்வ ஜன்மத்தில் ஏதாவது குற்றம் செய்த பலன் என்று தமக்குத் தாமே சமாதானம் செய்துகொள்வது பெரும் அசட்டுத் தனமாகவும், பைத்தியக்கார நினைவாகவும் கொள்ளவேண்டுமேயன்றி வேறல்ல. அதோடு இந்த ஜன்மத்தில் அனுபவிக்கும் கஷ்டங்கள் போன ஜன்மத்தில் புரிந்த பாவச் செய்கைகளின் பலன் என்றால், போன ஜன்மத்தில் செய்த கர்மங்கள் மூன்றாம் ஜன்மத்தில் செய்த வினைகளின் பலாபலன் என்றாகிறது. ஆகவே மூன்றாம் ஜன்மத்தின் பயனை இரண்டாம் ஜன்மத்தில் அனுபவித்துவிடுகிறோம். கடைசி ஜன்மமான இந்தப் பிறவியில் அனுபவிக்க வேண்டியவைகள் இல்லை என்றாகிறது. அப்படியிருக்க ஒவ்வொரு பிறப்பிலும் முன் தொடர்பு எவ்வாறு உண்டாகிறது? என்பது அர்த்தமில்லா விஷயமாக முடிகிறது. நிற்க மனிதன் செய்யும் எல்லாக் காரியங்களுக்கும் பூர்வ ஜன்மத்தை இழுத்துக் காரணம் காட்டப்படுவதில்லை. முதலாளி வீட்டிலிருந்து ஏழை தனது தேக தேவையின் நிமித்தம் ஒரு மரக்கால் நெல் எடுத்துக்கொள்வானானால் பூர்வ ஜன்ம வினைப் பயனால் நம் வீட்டுத் தானியத்தை அவன் எடுத்துக் கொண்டுபோகிறான், என்று முதலாளி சும்மா இருந்துவிடுவானா? அது சட்டத்திற்கும், முதலாளிகளால் வகுக்கப்பட்ட ஒழுக்கத்திற்கும் விரோதமெனக் குற்றஞ் சாட்டி அடுத்த ஜன்மத்தில் அந்தப் பயனை அவன் அனுபவிக்க என்று விட்டுவிடாமல் இந்தப் பிறவியிலேயே கொடுமையான தண்டனை விதிக்கப்படுகிறது. தான் தனது சுகத்தைத் தத்தஞ்செய்து தனது நெற்றிவேர்வை நிலத்தில் விழ கஷ்டம் சகிக்க முடியாது கண்கள் கண்ணீர்விட, உழைத்துப் பாடுபட்டுக் காத்திருந்து முதலாளியின் வீட்டுத் தானியக் குதிரில் வண்டி வண்டியாக விளைந்த தானியக் குவியலைத் தொழிலாளி கொட்டுகிறான். பாடுபட்ட தான், காற்றை ஆகாரமாக உட்கொண்டு, அதுவரை உன்னத மாளிகையிலே தங்கக் கட்டிலில் வெல்வெட்டுத் திண்டில் சாய்ந்து கொண்டு அஜீரணத்திற்கு உயர்ந்த லேகியங்களை விழுங்கிக்கொண்டிருந்த முதலாளி தன் உழைப்பால விளைந்த பலனை அனுபவிக்கும்போது இது பூர்வஜன்ம பலாபலன் என்று தொழிலாளி தீர்மானித்துக்கொள்ள வேண்டுமென்றால், பூர்வஜன்மவினை என்னும் வாக்கியங்கள் முன்னெச்சரிக்கையோடு முதலாளி பங்காளர்களான படித்த கூட்டம் ஏழையை ஏமாற்றி அடிமை நிலையில் அவன் என்றென்றும் மீள வழியின்றி அமர்ந்திருக்கச் சிருஷ்டிக்கப்பட்ட கொடிய வாக்கியங்கள் என்று பகுத்தறிவு எடுத்துக் காட்டுவதில் அதிசயமில்லையல்லவா?

"சாக்ஷாத் எம்பெருமான் இட்ட கட்டளைப்படி உலகம் நடக்கிறது, ஆண்டவனின் சிருஷ்டி சூட்சமம் மனிதர்களால் தெரிந்துகொள்ளமுடியுமா? அதை மாற்றி அமைப்பது மனிதனால் சாத்தியமா?" என்று பக்திரசத்தில் தோய்ந்து பரலோகத்திற்கு வழி கண்டுபிடித்து நிற்கும் ஆஸ்திக சிகாமணிகள் கூறுவது மற்றொரு கூற்றாகும். மனிதவர்க்கம் கடவுளின் மேலான படைப்புகளில் தலைமை ஸ்தானம் வகிப்பது; ஏனைய அஃறிணைப் படைப்புகள் மனிதனின் அடிமைகள். உலகில் கடவுள் சிருஷ்டித்திருக்கும் ஒவ்வொரு வஸ்துவும் மனிதன் சுகபோக பாக்கியங்கள் ஆகும். கடவுள் மனிதர்களிடத்தில வேற்றுமையின்றிப் பரிபாலிக்கும் பரமபிதா. இந்நிலையில் ஒரு கூட்டம் கடவுளால் படைக்கப்பட்ட சகல சம்பத்துகளையும் அனுபவிக்க, மற்ற கூட்டம் அச் செல்வத்தில் இம்மியளவும் உரிமையின்றித் திண்டாடித் தவிப்பது மேன்மை தங்கிய கடவுளுக்குச் சம்மதியாயிருக்காது. சுயநலங் காரணமாக ஒரு கூட்டம் சாயுஜ்ய நிலையில் இருக்க, ஏனை

தொடர்ச்சி 18-ம்பக்கம் பார்க்க,

# கோஷாமுறை.

(ஈரோடு அப்துல்லா வரைவது)

நாம் கோஷாமுறையினுல் ஏற்படும் கெடுதல்களைப்பற்றியும், நமது மதபுரோகிதர்களைப்பற்றியும் மதத்திலுள்ள ஆபாசங்களைபற்றி மூடப்பழக்க வழக்கங்களைப்பற்றியும்வரைவதனுல் என்னை வைதீகர்கள் கண்டிக்கலாம். மததுரோகி என்று கூறலாம். கோடாரிக்காம்பு என்றும் சொல்லலாம். நாஸ்திகரென்று கூறலாம். வைதீகர்கள் என்ன கூறினுலும் எனக்கு அக்கரை இல்லை. இந்த 20-வது நூற்றாண்டில் இந்தப்பூச்சாண்டிகளுக்கு நான் அஞ்சப் போவதில்லை என்பதை முதலில் வைதீகர்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்திய நவீன கோஷாமுறை இஸ்லாம் மதத்தில் இல்லை. இது உண்மையான விஷயமாகும். முகம்மது நபிசல் அவர்கள் காலத்திலாவது அல்லது அவருக்குப் பின்வந்த சிலர் காலத்திலாவது இந்தக் கோஷாமுறையில்லை என்பதை சரித்திரம் நன்கு தெரிவிக்கின்றது. அல்லா (ஹ்) வும் பெண்களை இவ்வாறு அறைக்குள் அடைத்து வைக்கும்படி கூறவில்லை. இஸ்லாம் மதத்தில் ஒவ்வொரு குற்றத்திற்கும் இன்ன இன்ன தண்டனை என்று குறிப்பிட்டிருக்கின்றது. ஆனுல் இந்திய கோஷாமுறையைப் பின்பற்றுதவர்களுக்கு யாதொரு விதமான தண்டனையும் விதித்ததில்லை என்பதை வைதீகர்கள் நன்கு அறிந்தவர்களே. பண்டைக்காலத்தில்கூட இந்த கோஷாமுறை இருந்ததாக யாதொரு ஆதாரமும் கிடைக்கவில்லை. இந்தமுறை நடுவில் வந்தது என்றே கூறலாம். நடுவில்வந்த வழக்கமானது மதக்கொள்கையில் ஒன்ருகிவிட்டது. பகுத்தறிவு உள்ளவர் இந்த கோஷா முறையை ஒழிக்க ஒப்புக்கொண்டே தீருவார்கள் என்பதில் சந்தேகமில்லை. எனது சகோதரர்களே! எவ்வளவு நாளைக்கு நமது பெண்களை மூடத்தனமான பழக்கத்தில் வைத்திருக்கப் போகின்றீர்கள்? இன்னம் எவ்வளவு நாளைக்குதான் சூரியவெளிச்சமும், சுத்தமான காற்றும் சுவாசிக்கக் கொடுக்காமல் நல்ல காற்று இல்லாத இருட்டு அறையில் அடைத்துவைக்கப் போகின்றீர்கள். நமது இந்தியநாட்டு முஸ்லீம் மாதர்களைப்பற்றி நினைக்கும்போதெல்லாம் மனம வருந்துகின்றது. இன்றையதினம் துருக்கி தேசத்தில் கோஷாமுறையை ஒழித்துப் பெண்மக்கள் வெளிக்கிளம்பிக் கல்விகற்று முன்னேற்றம் அடைந்து வருகின்ருர்கள். இன்றையதினம் படித்த சில முஸ்லீம்கள் இந்திய கோஷாமுறையை ஒழித்திருப்பதைக் காணலாம். ஆப்கானிஸ்தானத்தில் பெண்கள் எவ்வளவோ முன்னேற்ற மடைந்திருக்கின்ருர்கள் இவர்கள் கோஷா முறையை ஒழித்ததினுல் என்ன குடிமுழுகிப் போய்விட்டது! முன்னேயைவிடக்கல்வியிலும், நாகரீகத்திலும் கைத்தொழிலிலும் முன்னேற்றமடைந்தே யிருக்கிருர்கள். நமதுநாடு என்றைக்கு இந்த ஆபாசமுறையைவிடப் போகின்றதோ தெரியவில்லை. நம்மவர்கள் எவ்வளவு பணக்காரராயிருந்தாலும் வீடுகளை இருட்டு அறைகளைப்போல் கட்டிவிடுகின்ருேம். வீடுகளுக்கு ஜன்னல்கள் வைப்பதில்லை நமது பெண்களை, சூரியவெளிச்சமும், சுத்தக்காற்றும் உள்ளே புகாதபடி செய்து அறைக்குள் அடைத்துவிடுகின்ருேம். வீட்டுக்குள் இப்படி என்ருல் வெளியே போகவேண்டுமானுல் பர்தாவில் முழுதும் மூடிக்கொள்ளாமல் அனுமதிக்கப்படுவதில்லை. இந்தபர்தாவானது உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையில் மூடிக்கொள்ள வேண்டும். பர்தாவில் இருக்கும் சிறு சிறு கண்களின் மூலமாக அதை அணிந்துகொண்டவர்கள் பிறரைப்பார்க்கலாம். அந்தமாதிரி அணிந்துகொள்பவர்கள் வெளியே போகவழியில்லாமலும் சுத்தக்காற்று வருவதற்கு இடம் இல்லாமலும் தாங்கள் வெளிப்பட்ட கெட்ட சுவாசத்தையே மறுபடியும் உள்ளுக்கு சுவாசிக்க வேண்டியவர்களாயிருக்கின்ருர்கள். இந்தவிதமாக கெட்ட காற்றைச் சுவாசித்தால் என் நோய்வராது என்று என் சகோதரர்களை கேட்கின்றேன். இன்றையதினம் மற்ற இந்துப்பெண்களைவிட முஸ்லீம் பெண்கள் நோயும் படுக்கையுமாயிருப்பதைக் காணலாம். என் சகோதரர்கள் விஷயங்களைத் தெரிந்தும் அலக்ஷியமாயிருப்பதைக் காணும்போது வருந்தவேண்டிய தாயிருக்கிறது. இந்தியப்பர்தா முறையினுல் க்ஷயரோக வியாதி உற்பத்தியாகிறது என்று பெரிய பெரிய டாக்டர்கள் கூறி இருக்கிருர்கள். மாதர்கள் அழுக்குப்பிடித்த பர்தாவுக்குள் புகுந்து கொள்ளுவதாலும் காற்று ஓட்டமில்லாத வீட்டில் அடைந்து கிடப்பதனுலும் க்ஷயரோகக் கிருமிகள் ஆனந்தமாகக் கேட்பாரில்லாமல் வேட்டையாடுகின்றன. க்ஷயரோகம் தொத்து வியாதியில் சேர்ந்தவை. நமது நாட்டில் க்ஷயரோகத்தினுல் ஆண்களைவிடப் பெண்மக்கள் ஆறு மடங்கு அதிகமாக வருந்துகிருர்கள் என்று கணக்கு எடுத்துள்ளார்கள்.

இன்றையதினம் நமது நாட்டில் பிற சமூகத்தினர்கள் பலவிதத்தில் முன்னேற்றம் அடைந்து வருகிருர்கள். நாமும் அவர்களைப்போல முன்னேற்றம் அடைவது இந்த நூற்றாண்டிலா அல்லது அடுத்த நூற்றாண்டிலா என்று கேட்கின்றேன். நமது மாதர்கள் தகுந்த கல்வி அறிவுபெற்றுவிட்டார்களானுல் தாங்களே அனுவசியமான இந்தப்பர்தா முறையை ஒழித்து முன்னேற்றமடைந்து விடுவார்களென்பதில் சந்தேகமில்லை. சகோதரர்களே! இனியாவது நமது பெண் குழந்தைகளுக்குத் தகுந்த கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யவேணுமாய்க் கோருகிறேன். நமது மதத்திலிருக்கிற மூடப்பழக்க வழக்கங்களையும் ஆபாசங்களையும் ஒழித்து சமூகத்தை முன்னுக்குக் கொண்டுவரவழி தேடுவீர்களா!

# பெரியோர்கள் சென்ற வழி.

[ஈரோடு ஸ்டார் டைலரிங் ஹால் T. K. பாப்ஜான் எழுதியது]

இவ் உலகம் உண்டான காலந்தொட்டு இன்று வரை இவ்வுலகத்து மக்கள் பல்வேறு மாறுபாடுடைய கொள்கையினராய் வாழ்ந்து வந்தார்கள்.

இவ்வுலக மக்கள் பல்வேறு கொள்கையினராய் இது வரைக்கும், இருந்து வருகிருர்களென்ருல் இதற்குக் காரணம்? அந்தந்தக் காலங்களில் சில சமூகத்தலைவர்களால் எழுதி வைத்துச் சென்றசில சட்ட திட்டங்களின் சூழ்ச்சியே ஆகும், எனலாம்.

இப்பெரியவர்கள் சுயநலங்கருதியோ, பொது நலங்கருதியோ, தம் சமூகத்திற்கும் தமக்கும் மேன்மையைக் கருதியோ எழுதி வைத்துச் சென்ற அச்சட்ட திட்டங்களானது நாளடைவில் சில தலைவர்களால் பரிமுதல் செய்யப்பட்டு, தத்தமக்கு, பயன் படுமாறு திருத்தியமைக்கப்பட்டது மல்லாமல், அக்கொள்கைகளை கடவுளின் வாக்குகளாகவும் மாற்றப்பட்டது.

இப்படி மாற்றப்பட்ட அக்கொள்கைகளை உலகத்து மக்களுக்குபுஸ்தகரூபமாகவும், பிரசார ரூபமாகவும் சொல்லிவந்த காலத்திலே, (மக்களை தமக்கு அடிமைப்படுத்துவான் வேண்டி) தாம் சொல்லுவது யாவும் கடவுளால் சொல்லப்பட்ட நன்னெறிகளென்றும் இதனைதொன்று தொட்டு நடத்தி வருபவர்களாகிய நாம், கடவுளின், உண்மை பக்தர்களென்றும் மக்கட்கு சொல்லியது மல்லாமல், இதனை தவறி நடப்பவர்கள், கடவுளின் கோபத்திற்கு ஆளாவார், அதனுல் நரக மனுபவிக்க நேரிடுமென்று தம் சுயநலத்திற்கேற்றவாறு மக்களை ஏமாற்றி வந்தார்கள். இப்படி ஏமாந்த மக்கள் அந்த கொள்கையில் சிக்குண்டு வருங்காலத்திலே, மக்களை மக்கள் தொடமாட்டேன்? தீண்டமாட்டேன் என்னும் கொடிய, தீண்டாமையும், உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்ற ஜாதித்திமிரும் முதலாளுக்கு, தொழிலாளி அடிமை என்ற அடிமை புத்தியும் ஆண்களுக்கு பெண்கள் அடிமைகளென்ற அகம்பாவமும், (வரண்ட கானகத்தில் அனல் சூழ்வது போல) மக்களை இந்நிலையில் வாட்டி வருகிறது. இப்படி இருக்கும் இந்நிலையில் மக்கள், உண்மையறிய மாட்டாதவராய் தவிக்கிருர்கள்.

எனவே முன்காலத்து பெரியவர்களின் சூழ்ச்சியால் இந்நிலையில் உலக மக்கள் எவ்வித மாறுபாடுடையவர்களாய் இருக்கின்ருர்களோ அதேபோன்று வருமொரு நூற்றாண்டில், தறபோதைய பெரியவர்களின் கொள்கைகளும், சட்ட திட்டங்களும், லக்ஷியங்களும் மேற்சொன்ன மாறுபாடடைந்து, மக்களை பாதிக்கும் என்பதற்கு என்ன சந்தேகமிருக்கிறது.

ஆகவே, பெரியோர்கள் சென்ற வழி வேண்டுமா என்று எழுதும் இக்கட்டுரையைக்கண்டு சில தற்காலத்திய போலி பெரியவர்கள் தங்களின்சூழ்ச்சி குன்றி விடுமென எண்ணி வீறிட்டெழலாம். எழுவதில் பயனில்லை சற்று நிதானித்து யோஜித்தால் அவர்களும் குற்றத்தை ஒப்புக்கொண்டு, சாந்தமடைவார்களென்று நம்புகிறேன்.

மேலும் தற்காலத்திய மதத் தலைவர்கள் செய்யும், சூழ்ச்சிக்கோ எல்லையில்லை.

மனிதி லொன்றும், செய்கையி லொன்றுமாக அவர்கள் செய்துவரும் தற்காலத்திய சூழ்ச்சிகளோ சொல்லற்பாலதன்று. சிறக, அரசியல் தலைவர்களின் சூழ்ச்சியை அறிய வேண்டுமானுல் உதாரணமாக காந்தியார், தாம் செய்யும் ஒவ்வொரு காரியமும், அந்தராத்மாவின் ஆஞ்ஞையின்றி செய்வதில்லை என்றும் தமக்கு மட்டும் அக்காக்ஷியும் கட்டளையும் கிடைக்கிறதென்றும், நம்பத் தகுந்த ஆதாரமின்றி சொல்லுகிருர். அதை நம்பிய சில மடாதிபதிகள், காந்தியைக்கடவுளென்றே மதிக்கிருர்கள. ஒத்துக்கு மத்தளம் சொல்லி பத்தாக்குறைக்கு சில காந்தி பக்தர்கள் அவர் பெயரால் தின்று கொழுப்பவர்கள், காந்தியை கடவுளாகச் செய்ய எண்ணங்கொண்டு, இந்தக் கடவுள்களின் தன்மைக்கொத்தவாறு காந்தியை திருப்பார்க்கடலில் ஆதிசேடன் மீது பள்ளிகொண்டிருந்த கிருஷ்ண பகவானை

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

18-3-34ல் வெளிவந்த "புரட்சி"யில், மேலே குறித்த தலைப்பின் கீழ் சில வினாக்களும், ஐயங்களும் வெளியிடப்பட்டுள்ளன:—

# கூட்டுழைப்பாளர் ஆட்சி.

## தோழர் மு. சு. பூ. அவர்களின் கேள்விகளுக்கு தோழர் செ. தெ. நாயகம் அவர்களின் பதில்.

1. ருஷியாவின் ஆட்சிமுறை மாறியபின், அப்பகுதியிலுள்ள பிரபுக்கள் வெளியேறிச் சென்றனரா, உழைப்பாளிகளாக மாறினரா, என்பது முதற்கேள்வி.

அதற்குப்புள்ளி விவரங்களோடு விடைசொல்ல, நூலாவது, வேறு எழுத்தாவது இப்பொழுது என்னிடமில்லை. மனித வாழ்க்கை இயல்பை நோக்கும்பொழுது, சிலர் வெளியேறியும், சிலர் உழைப்பாளிகளாகவும் இருப்பார்கள் என்றே எண்ணவேண்டும். இரண்டு மூன்றாண்டுவரை வெளியார் மெச்ச, ஆப்கன் நாட்டைத் திறமையுடன் ஆண்ட, அமனுல்லா இப்பொழுது நாடிழந்து ஐரோப்பாவில் காலங்கழிக்கிறார். காலங்கழிக்கிறார் என்றால் வறுமையில் மூழ்கித் துன்பப்படுகிறார் என்பதல்ல. தனக்கு வேண்டிய செலவுக்கு ஒருவித குறைவுமில்லாமல் மனைவி மக்களுடன் வாழ்கிறார். நாட்டிலிருந்து, சூலாயிருந்த தன் மனைவியுடன் உயிர்தப்பி ஓடிவரும் வழியில் பம்பாயில் பெரும் பிரபுக்கள் தங்கும் விடுதியில் தன் மனைவியின் பேறுகாலத்திற்காகத் தங்கினார். பம்பாயில் வந்து சில நாட்களுக்குள் குழந்தை பிறந்தது. அச்சில நாட்கள்கூட ஆப்கன் நாட்டில் இருப்பது ஆபத்துக்கிடமாகும் என்று தெரிந்து ஓடிவந்தார் என்று இதிலிருந்துதெரிகிறது. மகவு பிறந்தபின் பேறு காலத்திற்கு ஊழியம் செய்த தாதியர் முதலானோருக்கு, எறக்குறைய ஒரு மன்னன் வழங்குவது போலவே பொன் நாணயங்களும் விலை மணிகளும் நன்கொடையாக வழங்கினராம். அவர் நாட்டை விட்டு ஓடிவருமுன், நாடு முழுவதும் போர்க்கலகம். அதை எதிர்த்துப் போர் நடத்திக்கொண்டிருந்தவர், கடுஞ்சூலாயிருந்த மனைவியையும் இட்டுக்கொண்டு உயிர்தப்பி ஓடிவந்தவர். தான் ஐரோப்பாவுக்குப் போகும் வழியில், சிலநாள் தங்கின இடத்தில், சிறு பொழுது, சிறு தொண்டு செய்த தாதியருக்குப் பொன் நாணயமும், விலை மணிகளும் நன்கொடை யளித்தாரென்றால், அவைகளுக்குப் பன்மடங்குஅதிகமாகப்பத்திரப்படுத்திக்கொண்டுவந்திருக்கவேண்டும் என்று வெளிப்படுகிறது. இது மாத்திரமல்ல. இப்பொழுது அவர் தன் செலவுக்கு எவ்வித இடையூறும் இன்றி, இவ்வளவு நீடித்த நாட்களாக வாழ்கிறாரே, அதற்கு எது பொருளெனப் பார்த்தால், அவ்வளவு பெரும் பொருளை அவர் உயிர்தப்பி ஓடும்பொழுது கொண்டுபோகவில்லை. அதற்கு இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன், உலக மன்னரெல்லாம் மெச்சத்திறம்பட ஆண்டு வந்த காலத்தில், ஐரோப்பாவிலுள்ள நாடுகளை எல்லாம் சுற்றிப்பார்க்கப் போனார். அப்பொழுது ஐரோப்பிய மன்னர்கள் ஒவ்வொருவரும், தங்களுக்குள் போட்டி போட்டுத் தங்கள் தங்கள் நாட்டிற்கு அவரை வரவழைத்து விருந்திட்டனர். அப்படி அவர் சென்ற நாட்டிலுள்ள பெரும் பாங்குகள் பலவற்றில், பொன் நாணயங்களையும், பொற்பாளங்களையும், விலையுயர்ந்த மணிகளையும், பேழைகளிலிட்டு, அடைக்கலமாக வைத்துவிட்டு வந்ததாக அவர் உயிர்தப்பி ஓடி ஐரோப்பா சேர்ந்தபின் தெரியவந்தது. தன்னுடைய ஆட்சியிலிருந்து துரத்தப்படப் போவது தெரிந்தது, குடிகளுக்கோ, பிறருக்கோ அஞ்சி, குடிகளை வெறுத்து அல்லது தனக்கு பின்னால் உதவப் பணந்திரட்டுவதற்காக, நாட்டில் செலவைக் குறைத்தாரா, என்றால் இல்லவே இல்லை. நாட்டில் புதுப்புது சீர்திருத்தங்களை எல்லாம் நாட்டுமக்கள் முன்னேற்றத்திற்காகப் புகுத்திப் பலவழியில் பணம் செலவிட்டுக் கொண்டிருந்தார். வெளியார் மெச்சத் திறம்பட ஆண்ட தனது ஆட்சிக்கு ஆபத்து வரக்கூடுமென வெளிப்பட ஐயம் ஏற்பட இடமில்லாத காலத்திலேயே. இவ்வளவு பொருள் அப்புறப்படுத்தி வைத்ததிலிருந்து, இப்பொழுது அவருக்கு வந்துள்ள நிலைமையை அவர் அப்பொழுதே எதிர்பார்த்து வெளிக்குத் தெரியாமல் ஒழிப்பிடம் தேடிவைத்திருந்தார் என்று ஏற்படுகிறது. ருஷியாவில் வந்த ஆட்சி மாற்றம் திடீரென ஏற்பட்டதல்ல. பல்லாண்டுகளாக இருந்த கொடுங்கோலான துயரம், நீடித்தகாலமாக உள்ளே குமிறிக் கொந்தளித்துப் புரட்சியாக வெளியாகி ஆட்சிமுறையை மாற்றிற்று. இதற்குக்காரணர்களாகயிருந்து நெருங்கி நோக்கிக்கொண்டிருந்த ருஷிய பிரபுக்கள் எல்லாரும், அல்லது பலர் ஆட்சிமுறை மாற்றத்தின் நெருக்கத்தை உணர்ந்திராமல் இருக்கமாட்டார்கள். அதற்கு வேண்டிய எண்ணமும், ஆற்றலும், அறிவும், வாய்ப்புமுள்ளவர்கள், வேண்டும்பொழுது வெளியேறுவதற்கான வழிகளை அமைத்தே வைத்திருந்திருப்பார்கள். ஆட்சி மாறினும் அதற்கேற்பத்தானும் மாறிக்கொள்ளலாம் என்ற மன உரமும், நாட்டுநட்பும், பரந்த நோக்கமும், அறிவும் படைத்தவர்கள், ஆட்சி மாற்றத்திற்குத் துணைசெய்து உழைப்பாளிகளாக மாறவும் முற்பட்டிருப்பார்கள். உழைப்பாளிகள் என்றால், எல்லாரும் ஒரேமாதிரி மண்வெட்டியும், கூடையும், கோடாரியும் கொண்டு வேலைக்குப் புறப்பட்டார்கள் என்பதல்ல. ஒவ்வொருவரும் அவரவர்கள் உடல் அறிவுகளுக்குத் தக்கவாறே உழைக்க எதிர்பார்க்கப்பட்டிருப்பார்கள். ஒவ்வொரு நாட்டிலும் பலதிறப்பட்ட மக்களுக்கான உழைப்பு இருந்துகொண்டே இருக்கிறது. அவரவர்களுக்குத் தகுந்த உழைப்பை அவரவர்களிடம் வாங்குவதே ஆட்சியின் நன் முறையாகும். முப்பது ஆண்டுகளுக்கு முன் சர் ஜார்ஜ் அர்புத்நட் என்ற பெயருடைய பெரும் பணம் படைத்த ஆங்கில வணியர் ஒருவர் சென்னையில் இருந்தார். சென்னை கடற்கரைச் சாலையில் தென்இந்திய புகைவண்டி நிலையத்திற்கு எதிரேயுள்ள, இப்பொழுது இந்தியன் பாங்குக்குச் சொந்தமான கட்டிடம், அப்பொழுது அவருடைய வியாபார நிலையம். அந்தக்காலத்தில் கடற்கரையிலிருந்து புறப்படுகிற புகைவண்டி புறப்படுமுன், மற்ற இடத்து வழக்கம்போல், ஊதக்கூடாது. ஊதினால் அவருக்குக் காதடைக்குமாம். குறைந்த ஓசையில் மணி அடித்துவிட்டு வண்டி புறப்பட்டு விடவேண்டும். கடற்கரை நிலையத்தில் எரிவண்டியில் நிலக்கரி போடக்கூடாது. அதிலிருந்து எழும்பின புகை இவருடைய வேலைக்கு ஊறு செய்யுமாம். எழும்பூரிலிருந்து புறப்படு முன்னமே நிலக்கரி போட்டுக்கொண்டு புகையை எல்லாம் போக்கிவிட்டு வரவேண்டும். அவ்வளவு செல்வாக்குடன் வாழ்ந்து வந்தார். நாலைந்து தலைமுறையாகச் சென்னையில் பெரும் பணத்துடனும் செல்வாக்குடனும் வியாபாரம் செய்த குடும்பத்தில் தோன்றியவர். அவருடைய வியாபாரக் கூட்டில் தொண்டுசெய்த ராஜா சர் சவலை ராமசாமி முதலியார் சத்திரம், கால்நடைகளுக்குத் தண்ணீர்த் தொட்டி, மருத்துவசாலை முதலியவற்றைப் பல இடங்களில் கட்டுவதற்கு லக்ஷக்கணக்கான ரூபாய் செலவு செய்தாரென்றால் வியாபாரக் கூட்டின் முதலாளியினுடைய பண நிலைமை எப்படி இருக்குமென உணரலாம். அந்த வியாபாரக் கூட்டில் ஐரோப்பியர் இந்தியர் உள்பட பல்லாயிர மக்கள் பல இலக்ஷக்கணக்கான தொகை வட்டிக்குப் போட்டிருந்தார்கள். அப்பொழுது மதராஸ் பாங்க் என்ற பெயருடன் இருந்த இம்பீரியல் பாங்கில்கூட பொதுமக்கள் பணம் அவ்வளவு கிடையாது. பல தலைமுறையாகப் பெரும் செல்வாக்குடன் நடந்து கொண்டிருந்த வியாபாரக் கூட்டு முறிந்துவிட்டதாக ஒருநாள் செய்தி பரவிற்று. பணம் போட்டிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் அர்பத்நட் நிலையத்தைச் சுற்றிக் கதறிக் கண்ணீர் வடித்தனர். வேறொன்றுமின்றித் தங்கள் முழுச் சொத்தையும் இதில் போட்டுவிட்டுத் திக்கற்றுத் திகைத்தவர் பலர். அதனால் ஏக்கமுற்று உயிர் துறந்தவர்களுமுண்டு. பல அற நிலையங்கள் இது காரணமாக ஒழிந்தன. தன்னிடம் பணம் போட்ட மக்களை வஞ்சித்ததாகத் துரைத்தனத்தார் அவர்மேல் குற்றம் சாட்டி விசாரணை நடத்தினார்கள். குற்றவாளி எனக் கண்டு அவருக்குக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இத்தனை மக்களை வஞ்சித்த, இத்தனை குடும்பங்களை மட்டந்தட்டிய, இத்தனை உயிர்களை மடியச் செய்த, இத்தனை அற நிலையங்களில் மண் போட்ட, அவரைகடுங்காவல் காரணமாகச் செக்கிழுக்கவோ, கல் உடைக்கவோ, கயறு திரிக்கவோ, கட்டளையிடவில்லை. சிறைச் சாலையிலிருந்த அச்சாலையில் அச்சடித்த தாட்களை எண்ணவும் மடிக்கவும் வேலை யிட்டார்கள். காவல் காலம் முடிந்தவுடன் அவரைப் பத்திரமாகக் கப்பலேற்றி இங்கிலாந்துக்கு அனுப்பி விட்டார்கள். இம் மாபெரும் குற்றம் செய்த கைதி ஒருவருக்கு, அவருடைய முற் பழக்கத்தையும் உடல் நலத்தையும் எண்ணியே, தாள் மடிக்கும் வேலையைக் கொடுத்தார்கள் என்றால் பல தலைமுறையாக உள்ள பழக்கத்தில் சிக்குண்டு கொடுங்கோலுக்கு உதவியாயிருந்த ருஷிய பிரபுக்களுக்கு; நாட்டின் ஆட்சி மாறிய பின், நாட்டிலிருந்து, புதிய ஆட்சியுடன் ஒத்துழைக்க இணங்கிய பின், அவர்களால் நேர் முறையாகச் செய்யக் கூடிய வேலையைத் தான் அவர்களிடம் எதிர்பார்க்கக் கூடும் என்பது சொல்லாமலே விளங்கும். அர்பத் நட்டுக்கு வேறு கடின வேலை கொடுத்திருந்தால், அவரால் செய்திருக்கவும் முடியாது. ஒரு வேலையுமின்றிச் சிறைச்சாலைக்குப் பளுவாக, மருத்துவர் பார்வையில் தான் இருந்திருக்க நேரிட்டிருக்கும். அதுபோலவே, ருஷியாவில் பிரபுக்களாயிருந்தவர்களிடமும், அவர்களால் செய்யக் கூடிய உழைப்பை எதிர்பார்த்திராவிட்டால், அவர்களும் ஆட்சிக்குப் பளுவாகவே இருப்பார்களாகையால், அவ்வித இடையூறின்றியே புதிய ஆட்சியைக் காப்பாற்றியிருப்பார்கள்.

2. அறிவிலும் உடலிலும் ஏற்றத் தாழ்வு இருப்பதுபோல, வேலையிலும் ஏற்றததாழ்வு இருக்குமாகையால், ஊதியத்தில் ஏற்றத் தாழ்வு உண்டா, இல்லையானால் அறிவு வளர்ச்சிக்கு ஊக்கமுண்டா என்பது அடுத்த கேள்வி. அறிவில், உடலில், ஏற்றத் தாழ்வு உடைய இருவர், ஏற்றத் தாழ்வுக்குத் தக்கவாறு, கூடிய, குறைந்த வேலையைச் செய்வது தான் சமஉரிமை. இருவரும் தங்கள்

தொடர்ச்சி 14ம்-பக்கம் பார்க்க.

# மீண்டும் பார்ப்பனீயமா?

(நமது அரசியல் நிருபர்.)

மாகாணப் பார்ப்பனீயம் மீண்டும் அறைகூவி அழைக்கிறது. இதற்கு மாகாணப் பார்ப்பனரல்லாதார் அளிக்கப்போகும் பதில் யாது? இன்றைய மாகாணச் சர்க்கார் நமது பார்ப்பனர் அல்லாதார் கட்சியில் நடைபெற்று வருகிறது. சென்ற மாதத்திற்கு முன் மாகாணச் சட்டசபையில் இனாம்தார்களின் பார்ப்பனப் பணக்காரர்களின் குடிகளுக்கு நியாயம் வழங்க ஓர் சட்டம் நிறைவேறியது. இச் சட்டத்தால் இனாம்குடிகளுக்குப் பரிபூரண நன்மை எதுவும் ஏற்படாவிட்டாலும் ஓர் சாதாரண உரிமையை மட்டும் ஒப்புக்கொள்வதாகவே அச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதைக் கண்டு மாகாணப் பார்ப்பனீயம் ஒன்றுபட்டு எதிர்க்க முயற்சித்தது. முடிவில் மாகாணக் கவர்னர் பெருமானைப் பேட்டிகண்டு நிறைவேற்றப்பட்டுள்ள இனாம் குடிகள் சட்டத்திற்கு ஓர் திருத்தம் கொண்டுவரும்படி இன்றைய பிராமணீயம் செய்துவிட்டது. இதற்கு மாகாணப் பார்ப்பனரல்லாதார் கட்சி செய்யப்போகும் பரிகாரம் யாது என்பது தான் நமது கேள்வியாகும்.

அதிகாரத்தில் உள்ள சட்டசபையில் மெஜாரிட்டியாகவுள்ள ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் சர்க்கார் மெம்பர்களுடைய பரிபூரண ஒத்துழைப்பையும் பெற்று இச் சட்டத்தை நிறைவேற்றினார்கள். இச் சட்டத்தால் இனாம்தார்களுக்கு எத்தகைய கஷ்டமோ, நஷ்டமோ நேர்ந்துவிடவில்லை. ஆனால் இம் மாகாணப் பார்ப்பனீயத்திற்கு செல்வாக்கா? அல்லாதார்களிடத்திற்கு ஆதரவா? என்பதைப் பரீட்சிப்பதுபோலவே இச் சட்டம் எண்ணப்பட்டது. சட்டசபையில் எதிர்க்கட்சி மெம்பர்களில் பலரும் இதை ஆதரித்தார்கள். அப்படியிருந்தும் மாகாணப் பார்ப்பனர்கள் தங்களின் ஆதிக்கத்திற்குப் புது உயிர் கொடுக்க இச் சம்பவத்தை உபயோகித்துக்கொள்ள எண்ணியதால் அவர்கள் முழுச் சக்தியும் ஒன்று கூடி மேன்மைதங்கிய கவர்னர் பெருமான் அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெற்றுவிட்டது.

இந்த நெருக்கடியான நிலைமையில் நமது மாகாணச் சட்டசபையில் உள்ள ஜஸ்டிஸ் கட்சி, அதன் தலைவர்கள் இவர்கள் ஒன்றுபட்டு தங்களின் முந்திய செய்கையை மீண்டும் உறுதிப்படுத்தப்போகிறார்களா? அல்லது கவர்னர் பெருமான் திருத்தம் கொண்டுவர ஆசைப்படுவதால் நாம் மீண்டும் பழைய முறையை வற்புறுத்தினால் சர்க்கார் பெரிய மனிதர்களின் கோபம் வந்துவிடும் என்று பயந்து நாளைய நிலைமையைக் கைநழுவவிடப் போகிறார்களா? என்பது தெரிந்துவிடவேண்டும். தாங்கள் செய்த நியாயமான ஓர் சட்டம் நிறைவேற்றப்பட்டபின்புங்கூட, மாகாணப் பார்ப்பனர்கள் அத்தனைபேரும் எதிர்த்துத் தோற்கடிக்கச் செய்துவிட்டார்களே! என்ற ரோஷம் கடுகளவு நமது அல்லாதார் தலைவர்களுக்கு இருந்துவிட்டால் நாளை வரவிருக்கும் திருத்தமும் தோற்கடிக்கப்படப்போவது நிச்சயம். ஆனால் அவ்விதம் செய்வார்களா? மே. த. கவர்னர் பெருமான் அடுத்தமாதம் விலகப் போகிறவர். தன்னை வந்து கேட்டுக்கொண்ட பார்ப்பனப் பிரதிநிதிக் கூட்டத்தார்களின் வேண்டுகோளின்படி மீண்டும் ஓர் சான்ஸ் கொடுக்க தாம் சம்மதப்படுவதாக அவர் கூறிவிட்டது ஆச்சரியமல்ல. மே. த. கவர்னருக்குச் சட்டசபையிலுள்ள மெஜாரிட்டி மெம்பர்கள் இச் சட்டத்தை ஆதரிப்பதும், ஆதரித்ததும் நன்கு தெரியும். இச் சட்டம் நிறைவேற்றப்படுவதால் மாகாண க்ஷேமத்துக்கோ, இனாம்தார்கள் க்ஷேமத்துக்கோ, குடிகள் க்ஷேமத்துக்கோ பெரும் ஆபத்து வருமென்று மே. த. கவர்னர் நினைத்தால் முன்னமேயே வேறு நிலைமை ஏற்பட்டிருக்கும்; இதை அக்காலத்தில் சர்க்கார் மெம்பர்கள் ஆதரித்து இருக்கவுமாட்டார்கள். ஆனால் சட்ட பூரணமாக நிறைவேற்றப்பட்டபின்பு இம் மாகாணத்தில் ஏற்பட்ட புது நிலைமைதான் இன்று மாகாணச் சட்டசபையை மீண்டும் தன்னால் செய்யப்பட்ட சட்டத்திற்குத் திருத்தம் வரும்படியான நிலைமையை உண்டுபண்ணிக்கொள்ளச் செய்தது. ஆதலால் ஜஸ்டிஸ் கட்சிக்காரர் முதலில் கவர்னர் பெருமான் கோபித்துக்கொள்ளுவாரென்று பட்டிக்காட்டான் சொல்லவிருக்கும் சமாதானத்தைச் சொல்லித் தப்பிக்கமுடியாது. திருத்தம் வந்தால் தைரியமாக அதை எதிர்க்கச் சற்றும்தயங்கக்கூடாது. அப்படித் தயங்கினால் இவர்கள் இனாம்தார்களின் குடிகளிடம் பரிதாபப்படாமல் மகாணப் பார்ப்பனீயத்துக்கு விரோதமாக சூத்திரத்தின்மேல் செய்யப்பட்ட செய்கை என்று மே. த. கவர்னரிடம் பார்ப்பனப் பிரதிநிதிகள் கூறியது உண்மையாகிவிடும்.

கவர்னர் பெருமான் இவர்கள் செய்கையை பின்பு கேவலமாக எண்ண இடமேற்பட்டாலும் ஏற்படக் கூடுமாதலால் அதற்கு இஷ்டப்படமாட்டார்கள் என்று நம்புகிறோம். மாகாணச் சட்டசபையில் மைனாரிட்டியாகத் தனது கட்சி இருக்கும்போதும் தனது திறனால் ராஜதந்திரத்தால், சுயநலமின்மையினால், சட்டசபையில் மெஜாரிட்டி கொண்டு வரமுடியும் என்பது காலம் சென்ற பனகால் மன்னனின் முடிவாகும். அவ்விதம் கொண்டுவந்தும் அக்கால மந்திரி கட்சிகளைச் சிதர அடித்தும் இருக்கிறார் அத்துடன் மட்டுமல்ல, மாகாண எல்லையைத் தாண்டி மத்திய சர்க்காரின் செய்கையிலும் தலையிட்டுத் தனது சமூகமான பார்ப்பனரல்லாதார் சமூகத்திற்கு விரோதமாக இருந்த ஒருவரை சர். சி. பி. ராமசாமி ஐயர் அவர்களைச் சட்டமெம்பராக வர முடியாது செய்தார் என்று ஹிந்து பத்திரிகையே எழுதியிருக்கிறது. அக்கக்ஷியின் பின் தலைவர்கள் இன்று மத்திய சர்க்காரிடம் தங்கள் செல்வாக்கை உபயோகிக்கவேண்டாம். மாகாண சர்க்கார் பகிரங்கமாக எதிர்க்கும் ஓர் செய்கைக்கும் எதிராக நிற்கவேண்டாம். மாகாண மே. த. கவர்னராலும், சர்க்கார் மெம்பர்களாலும், ஒரே மனதாய் ஒப்புக்கொள்ளப்பட்டு, பெரும்பான்மையான ஓட்டுகளினால் மூன்று மாதத்திற்கு முன், நிறைவேற்றப்பட்ட சட்டத்தை காக்க, வழி இல்லை எனறால் இது மிக இழிவு போன்றதாகும்,

## ஜஸ்டிஸ் கட்சி தலைவர்களே!

ராஜா பனகால் இறந்ததும், நமது கட்சி சிதர ஆரம்பித்தது. ஹிந்து ஆசிரியர் எ. இரங்கசாமி ஐயங்கார் காலமானதும் மாகாண பார்ப்பனர்கள் ஒன்றுபட்டுவிட்டார்கள். இது உங்கள் கட்சிக்கு வெட்டப்பட்ட பெறும்பள்ளத்தில் மீண்டும் மண் தோண்டுவதாகும். சர். சி. பி. கட்சியும், ரைட் ஆனரபில் சாஸ்திரி கட்சியும், வெங்கட்டராம சாஸ்திரிகள் கட்சியுடன் ஒன்றுபட்டு விட்டது. இதை இவர்களின்விரோதிகளாய் இருந்த சீனிவாச ஐயங்கார் கட்சியும், எ. இரங்கசாமி கட்சியும், ஒன்றுபட்டு ஆதரிக்கிறது. இவர்கள் அத்தனை பேருக்கும் நேற்று வரையில் பரம விரோதியாக இருந்த குட்டி காந்தி தோழர் சக்கிரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் கட்சி ரிஜிஸ்டர் செய்த கட்சியாக ஒன்றாக்கி விட்டார். சுருங்கச் சொன்னால் தொழிலாளி போல் உள்ள பார்ப்பனத்தலைவர்கள், மதத்தின் பேரால் உள்ள வைதிகப் பார்ப்பன தலைவர்கள், அரசியலில் பல கட்சி போல தனித்தனி ராஜ்யம் நடத்திய பார்ப்பன தலைவர்கள் இவர்கள் அத்தனை பேரும் ஒன்றாகி விட்டார்கள். ஓட்டல் பார்ப்பானும் இனாம்தார் சட்டத்தை கண்டிக்கிறான், உத்தியோக பார்ப்பன தலைவரான அல்லாடி அய்யர்வாளும், இனாம்தார் சட்டத்தை கண்டிக்கிறார். இவைகளுக்கு அர்த்தம் இனாம்தார்கள் சட்டத்தால் சிதரி சிறழிந்துகிடந்த—ஐயர்—ஐயங்கார்—சாஸ்திரி—ஆச்சாரி—ஆகிய சகல ஆரியரும் ஒன்றாகி விட்டார்கள் என்பதே அர்த்தமாகும். இதை அகில இந்திய பார்ப்பன—தியாகி தாலைவராகவும்—சம்பந்தியாகவும் உள்ள—நமது காந்தி பாபுவும் ஆதரிக்கிறார். மயிலை ஐயங்கார்—வீட்டுக்கு—காந்தி விஜயம் இதைத்தான் காட்டுகிறது. மாகாண முழுவதும் உள்ள சகல பார்ப்பனரும் ஒன்றாக இருப்பதும், இம்மாகாணத்திலுள்ள நான்கு தினசரி ஆங்கில பத்திரிகைகளும், மூன்று தமிழ் தினசரி பத்திரிகைகளும், குட்டிப் பத்திரிகைகளும், மாகாண பார்ப்பனீயத்துக்கு ஆதரவு காட்டி எங்கும் இனாம்தார்களுக்கு ஆபத்து என்ற "கெங்காதரா மாண்டாயோ" எனும் கூச்சல் போடுவதும் மே- த- கவானருக்கு தெரியும். ஆதலால் அவர் திருத்தத்தை ஆதரித்தார். இதை

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

# ஆலை, சுரங்கம், முதலிய கூட்டுத் தொழிலாளர்கள் தங்கள் நிலைமையை மேம்படுத்த உறுதியான ஒரு வழி.

(தோழர் சே. தே. நாயகம்)

நம் நாட்டில் நூல் ஆலைகளிலும் நெசவு ஆலைகளிலும் பெரும்பான்மையான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். பொன் சுரங்கம், இரும்புச் சுரங்கம் நிலக்கரிசுரங்கம் இவைகளிலும் பெரும் மக்கள் வேலை பார்த்து வருகிறார்கள். இத் தொழிலாளர்களுடைய நன்மையைக் கோரி, அங்கங்கே சங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன. தொழிலாளர்களுடைய சம்பள விகிதத்தை உயர்த்துவதிலும், வேலை நேரத்தைக் குறைப்பதிலும், தங்கள் உடல் நலம், பொருள் நிலை, கல்வி, அறிவு முதலியவற்றைப் பெருக்குவதிலும் கண்ணுங் கருத்துமாக இருந்து அவைகள் வேலை செய்கின்றன. தங்களுடைய குறைகளை முதலாளிகளுக்கு எடுத்துச் சொல்லியும், அவர்கள் கேட்காதிருந்தால் வேலை நிறுத்தம் முதலியன செய்தும் தங்கள் விருப்பத்தை அடைய முயலுகிறார்கள். அப்படிச் செய்வதால் படிப்படியாகத் தங்கள் வெளி நிலைமை உயர்வடைந்து வருகிற தென்றே சொல்லலாம்.

2. தாங்களாகவும் தங்கள் தொழிற் சங்கங்கள் மூலமாகவும் செய்கிற முயற்சிகளால், தங்கள் சம்பளம் உடல் நலம் முதலியன உயர்தல் எவ்வளவு கிடைக்கிறதோ, அவ்வளவு தூரம் தங்கள் பொருள் நிலையில் உயர்கிறார்களா என்று பார்த்தால், இல்லை என்றே செல்லவேண்டும். தொழில் சங்கங்களும், சம்பள உயர்வு, நேரக் குறைவு, உடல் நலம், கல்வி, முதலியன பெறுவதில் செலுத்துகிற ஊக்கம் தொழிலாளர்களின் பொருள் நிலை உயர்வதில் செலுத்தவில்லை என்றே சொல்ல இடமிருக்கிறது. தன் முயற்சியால் உயர்ந்த சம்பளம் பெற்ற தொழிலாளி, அதை முழுவதையும் செலவழித்து விடுவானானால், அவனுடைய பொருள் நிலைமை எப்படி முன்னேற்றமடையும். வேலை போய்விட்டால் அவன் மறுபடியும் பழைய ஆண்டிதானே. செலவுக்குத் தக்கபடி வருவாய் தேட வேண்டியது முக்கியந்தான். அது தன்னுடைய முயற்சியால் மாத்திரம் நடப்பதல்ல. தன்னுள் அடங்காத பல வெளி உதவிகளைக்கொண்டு அடைய வேண்டியதாகும் அது. வரவுக்குள் செலவு செய்துகொள்ள வேண்டுமென்பது அப்படி அல்ல. அது ஒவ்வொருவரும் பிறரை எதிர்பாராமல் தானாகவே செய்துகொள்ளக் கூடிய எளியவழி. கடன் கொடுப்பாரும், பிச்சை கொடுப்பாரும் இல்லையானால், களவு செய்யக் கூடிய ஆற்றலும், தற்கொலை செய்ய எண்ணும் கோழை நெஞ்சமும் இல்லையானால், ஒவ்வொருவரும் கடைசியாகச் செய்கிற, செய்ய வேண்டிய வழி வருவாய்க்குள் செலவு செய்யும் எளிய வழிதான். அம் மாதிரி வெளிக்கட்டாயத்திற்கு ஆளாகாமல், தானே அவ் வழியைத் தேடிக்கொள்ள வேண்டும் என்பது தான் நான் இப்பொழுது வற்புறுத்துவது. அவ்வெளிய வழியில் அக்கம் பக்கம் திரும்பாமல் நேரே நடந்து செல்வதற்கு மன உறுதி ஒன்று தான் வேண்டும். அதிருப்பின் ஒவ்வொருவரும் வருவாய்க்குள் செலவு செய்துகொள்ளலாம். யார் முன்னும் தலை குனிந்து நிற்கக் கட்டாயப்படுத்தப் படமாட்டார்கள். எவருடனும் தலை நிமிர்ந்து பேசலாம். ஆகையால் தொழிலாளர் உறுதியாக மேம்பாடடைய வேண்டுமானால், வருவாய்க்குள் செலவு செய்ய ஒவ்வொருவரும் கட்டாயப் பாடமாகக் கற்றுக்கொள்ள வேண்டும். வரவுக்குத் தக்கபடி செலவைச் சுருக்குவதால் ஒருவித குறைவும் ஏற்படாது. செலவைப் பெருக்கிக்கொண்டு அதற்காகக் கடன் வாங்குவதும், பிச்சை எடுப்பதும், ஏமாற்றுவதும், திருடுவதுந்தான், இழி செயல்கள். கடன் இல்லாமல், திருடாமல் ஏமாற்றுமல், கந்தையோடிருப்பது இழிவல்ல. இம் மனப்பான்மையைத் தொழிற் சங்கங்கள் வற்புறுத்த வேண்டும். ஒவ்வொருவரும் வருவாய்க்குள் செலவு செய்து, வரும்படியில் மீதம் வைக்கிறார்களா, என்பதை நுணுக்கமாக அடிக்கடி ஆராய வேண்டும். சம்பள உயர்வுக்கும், நேரக் குறைவுக்கும் முதலாளிகளுடன் போராடுவதைவிட, அதிகமாக அல்லது அவ்வளவாவது, சம்பளத்தில் மீதம் வைக்கக் கட்டாயப் படுத்துவதில் முயல வேண்டும்.

3. அப்படி அவர்கள் மன உறுதி அடைந்தால் அது கை கூடுவதற்கு ஒரு எளிய உறுதியான வழிஉள்ளது. ஒவ்வொரு ஆலைக்கும் அல்லது தொழிற் கூட்டத்திற்கும் ஒரு கூட்டுறவு சங்கம் ஏற்படுத்திக் கொள்வது தான் அது. அக் கூட்டுறவு சங்கத்தில் ஒவ்வொரு தொழிலாளியையும் சேரச்செல்லி, அப்படிச் சேருவோர் ஒவ்வொருவரும், மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய்க்குக் குறையாமல் சேமித்து வைக்க வேண்டும்—என்று சங்க விதியிலும் அமைத்துக்கொள்ள வேண்டும். கூட்டுறவு சங்கத்தின் முக்கிய நோக்கம் கடன் கொடுப்பது மாத்திரமல்ல, அங்கத்தினர்களை அவரவர்கள் வருவாயில் மீதம் வைக்கச் செய்து அவர்களுக்குப் பொருள் திரட்டிக் கொடுப்பதும் ஒன்று, என்பதைத் ஒவ்வொரு தொழிலாளி மனதிலும் பதியப்பண்ண வேண்டும். சென்னையிலுள்ள பக்கிங்காம் கருநாடக ஆலைகளிலுள்ள கூட்டுறவு சங்கம், பல ஆண்டுகளாகக் கடன் கொடுத்து வாங்குவது என்ற முறையைக் கையாண்டு வந்ததோடு நில்லாமல், சென்ற ஆண்டு முதல் உறுப்பினர் ஒவ்வொருவரும் மாதந் தோறும் பணம் சேமிக்கவும் வேண்டும் என்பதையும் கையாண்டு வருகின்றது. இம் முறையைக் கையாளும்படி நான் அவர்களுக்கு எடுத்துச் சொன்ன பொழுது சிலர் அதை வெறுத்தனர். சிலர் ஏளனம் செய்தனர். முன்னுக்கு வரவேண்டு மென்ற எண்ணமுடைய ஒவ்வொருவரும் அதைக் களிப்புடன் வரவேற்றனர். ஆலை முதலாளிகளின் பிரதிநிதிகள் சேமிப்பை வற்புறுத்துவதை விதியாகச் செய்யத் தயங்கினார்கள். தொழிலாளர்கள் முதலில் ஒப்புக்கொண்ட போதிலும் பின்னால் வழிக்கு வரமாட்டார்கள் என்று அஞ்சினார்கள். ஒரு முறைக்கு இரு முறை, மும்முறை, தொழிலாளரைக் கூட்டிப் பேசினோம். அவர்கள் உறுதியாகவே இருந்தார்கள். முதலாளிகளின் பிரதிநிதிகள் தனியே யோசிக்க விரும்பினார்கள்- அப்படிச் சில நாள் கடந்தது. முதலாளிகளைக் கலக்க விரும்பினார்கள். இறுதியில் எல்லாரும் இணங்கினர். விதியும் மாற்றப்பட்டது. இப்பொழுது. எல்லாரும் கூட்டுறவு சங்கம் மூலமாகப் பணம் சேமித்து வருகின்றார்கள். சென்னையில் மண்ணெண்ணெய்த் தொழிலாளர் தங்களுக்கும் தங்களைப்போன்ற மற்றத் தொழிலாளர்களுக்கும் ஒரு கூட்டுறவு சங்கம் வைக்க விருப்பி விண்ணப்பித்த பொழுது, அவர்களும் இக் கட்டாயச் சேமிப்புக்கு இணங்க வேண்டும் என வற்புறுத்தினேன். முதலில் சற்று தயங்கினாலும், பன்முறை கூடிப்பேசி ஆராய்ந்து இவ் வேற்பாட்டிற்கு இணங்கினார்கள். அவ்வாறு அவர்களுக்குத் தனிச் சங்கம் பதிவு செய்யப் பட்டு அவர்களும் பணம் சேமித்து வருகிறார்கள். அப்படிச் சேமிக்கிற தொகைக்கு வட்டியும் உண்டு. இவ்வாறு ஒவ்வொரு ஆலையிலும், தொழிற்கூட்டத்திலும், கூட்டுறவு சங்கங்கள் ஏற்படுத்தி சேமிப்பைக் கட்டாயப் படுத்துவார்களானால், தொழிலாளர்கள உறுதியாக முன்னேற்றமடையச் சிறந்த வழி ஏற்படும். சென்னையிலிருப்பது போலவே, கோயம்புத்தூர் மதுரை, தூத்துக்குடி, பாபநாசம், முதலிய இடங்களிலும் ஏற்பாடு செய்வது எளிதாகும்.

4. பக்கிங்காம் கருநாடக ஆலைத் தொழிலாளர்களிடம் ஒரு நாள் இதைப்பற்றி நான் விளக்கிக்கொண்டிருந்தேன். கூட்டம் கலைந்த பொழுது ஒரு தொழிலாளர் என்னிடம் வந்து, "இப்படி நாங்கள் சேமித்துப்பெருக்குகிற தொகையை என்ன செய்ய?" என்று கேட்டார். அவர் கேட்டதிலிருந்து அவருடைய மனப்பான்மை தெளிவாயிற்று. தொழிலாளிகளிற் பலர் சம்பாதிப்பதும், செலவு செய்வதுந்தான் தங்கள் கடமை—சேமிப்பதும் பணம் திரட்டுவதும் தங்களுக்குப் புறம்பானது, என்று எண்ணியிருந்தது வெளியாயிற்று. அவர் கேட்ட கேள்விக்கு உடனே, "சேமித்துச் சேர்த்த தொகையிலிருந்து ஆலைப் பங்குகளை விலைக்கு வாங்கி முதலாளியாகுங்கள்" என்று கேட்டவரிடமும், பக்கத்தில் நின்றவரிடமும் விடை சொன்னேன். அதைத் தான் இப்பொழுது எல்லாத்தொழிலாளர்களிடமும், தொழிலாளர் முன்னேற்றத்தில் நாட்ட முடையவர்களிடமும், விவரித்துச் சொல்ல விரும்புகிறேன் ஒவ்வொரு ஆலையும், ஒவ்வொரு சுரங்கமும், பல லக்ஷக்கணக்கான முதல் வைத்து நடத்தப் படுவதாகும். அம் முதல் ஒருவர், இருவர், சிலருடையதல்ல. பல நூறு அல்லது பல்லாயிர மக்கள் ஆண்,பெண் அவரவர்கள்பிரியப்படி கொடுத்த சிறுமுதல்களைக் கூட்டாகச்சேர்த்து பெரு முதலாக்கி, அவைகளைநடத்துகிறார்கள். அப்படிப்பணம் போட்ட ஒவ்வொருவரும் ஆலை முதலாளியே, தனிமுதலாளிகள் இல்லையாயினும் அவர்கள் ஆலையின் பங்காளிகள். அப்பங்காளிகள் ஆண்டு தோறும் கூடி தங்களுக்குள் சிலரைப் பெரிய தனக்காரராக நியமித்து ஆலையை நடத்தி வருகிறார்கள். ஆலையில் ரூ. 1000, 500 சம்பளம் வாங்குகிறவர்கள் அப் பெரிய தனக்காரர்களின் கீழ் வேலை செய்யும் வேலைக்காரர்களே. ஆண்டு தோறும் பங்காளிகள் ஒவ்வொருவருக்கும், ஆலையின் வரவு செலவு கணக்குச் சுருக்கம் கொடுக்கப்படுகிறது. ஆண்டுதோறும் ஆலையில் வரும் இலாபமும் பங்காளிகளுக்குத் தங்கள் பங்கு வீதப்படி பிரித்துக் கொடுக்கப்படுகிறது. இந்தப் பங்குகள் முதலிற் பணம் போட்டவர்களிடமே எப்பொழுதும் இருப்பதில்லை. நிலங்களை ஒருவருக்கொருவர் விற்றுக்கொள்வது போல இந்தப் பங்குகளையும் விற்றுக்கொள்ள

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க

## அறிவிப்பு:

நமது இயக்க வளர்ச்சியையும் நமது பத்திரிகைகளின் அபிவிர்த்தியையும் கருதி, மலாய் நாட்டிற்கும், பர்மா நாட்டிற்கும், சிங்கள நாட்டிற்கும், நமது தோழர்களில் மூவர் போவதாகத் தீர்மானித்திருக்கிறபடியால், அடுத்த வாரம் யார் யார் எங்கு செல்லுகிறார்களென்றும், எப்பொழுது கிளம்புகிறார்களென்றும்தெரிவிக்கிறோம்.


# புரட்சி

ஈரோடு 1934- மார்ச்சு மீ 25-உ


# முதலாளிகள் ஆதிக்கம் உஷார்!

:0:

இந்திய நாட்டின் தொழிலாள வகுப்பார்கள் தங்கள் அடிமைச்சங்கிலிகளை அறவே தகர்த்தெறிய, பரிபூரணமாக இன்னும் முற்படவில்லை என்றாலும், ஓர் அளவிற்கு அவர்கள் சமீப காலத்தில் விழிப்படைந்திருக்கிறார்களென்பது மாத்திரம் மறுக்க முடியாத உண்மையாகும். தொழிலாளர்களுடைய விழிப்பிற்குக் காரணம், அவர்களுடைய சகிக்க முடியாத கொடிய துன்பங்களும், கஷ்டங்களுமேயாகும்.

தொழிலாளர்களுக்கு, முதலாளிகளாலோ, அல்லது அரசாங்கத்தாலோ இன்றையத்தினம் 'கிருபா கடாக்ஷம்' காட்டபபடுகிறதென்று சொன்னால், அது அந்த தொழிலாளிகளின் உழைப்பின் பயனாகவே, நியாயமாகக்கிடைக்க வேண்டிய வரும்படியிலிருந்து கொஞ்சம் கொடுத்து, தொழிலாளர்கள் வயிறு ஒட்டி, வாடி, வதங்கி சாகாமலிருக்கச் செய்து, மீண்டும் சாஸ்வதமாகத் தங்களுக்கே ஊழியம் செய்து கொண்டிருப்பதற்கே தவிர, மற்றப்படி நியாய புத்தியையோ, கருணைப் பிரவாகத்தையோ அல்லது பச்சாதாப இரக்க புத்தியையோ, கொண்டதல்லவென்று துணிந்து கூறுவோம்.

இன்றையத்தினம் முதலாளியானவன், ஒரு தொழிலாளியைப் பற்றி எப்பேர்க்கொத்த மனோநிலையைக் கொண்டிருக்கிறானென்று முடிவு கட்டுவதற்கு, அவனுடைய நடைமுறை வாழ்க்கையை பரிசீலனை செய்யுங்கள். ஒரு முதலாளிக்கு, அவனுடைய நாய்க்குட்டியோ, மைனாக்கிளியோ, எருமை மாடோ, செத்துப்போனால், அதை நஷ்டமாகக் கருதி துக்கப்படுகிறான். ஆனால், ஒரு தொழிலாளி செத்துப்போனால், அந்தப் படி கூட துக்கப்படுவதைக் காணோம். தொழிலாளர்களுடைய இந்த பரிதாப நிலைமைக்கு யார் என்ன சமாதானம் கூறக்கூடும்.

தொழிலாளர்கள் தங்களுடைய நியாயமான உரிமையைப் பாதுகாத்துக்கொள்ள, இன்னும் தக்க சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை என்றாலும், ஆங்காங்கே தொழிலாள சமூக விழிப்பின் காரணமாக, சில தொழிற் சங்க ஸ்தாபனங்களும், டிரேட் யூனியன் சங்கங்களும் ஸ்தாபிக்கப்பட்டு வந்திருக்கின்றன, வருகின்றன. இவற்றில் சில முதலாளி மார்களின் சூழ்ச்சிக்கு அடங்கியதும், தொழிலாளர்களை வஞ்சித்து துரோகம் செய்வதுமாகும். இதுபோன்ற ஸ்தாபனங்கள், நாட்டில் புதிய அரசியல் சீர்திருத்தங்கள் வழங்க உத்தேசிக்கப்படும் காலம் முதல், ஒரு சில சுயநலப் பித்தர்களால் உண்டாக்கப்படுவது சர்வ சாதாரணமாகும். இதைத் தக்கவாறு, தொழிலாள தோழர்கள் கவனித்து—பிறர் சூழ்ச்சிக்கு இடம் கொடுத்துவிடக் கூடாது. (தொழிலாளர்களாகிய) தங்களின் ஆதிக்கத்தையே பரப்பப்பெரிதும்கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டுகிறோம்.

முதலாளி வருப்பின் ஆதிக்கம் ஒழிந்தாலொழிய, தொழிலாளி விடுதலை பெற மார்க்கமில்லை என்பதை இன்றையத்தினம் யாரும் ஆட்சேபணையின்றி ஒப்புக்கொள்ளவர். அதோடு ஜாதி அபிமானத்தாலோ--மத அபிமானத்தாலோ, தேசாபிமானத்தாலோ, கடவுளபிமானத்தாலோ, தொழிலாளர்களுடைய முற்போக்கு கிஞ்சிற்றும் ஏற்படுவதற்கு வழியில்லை என்பதும், சமீப காலத்தில் நாம் அனுபவப் பூர்வமாகக்கூட கண்டறிந்த உண்மையாகும்.

உதாரணமாக இந்தத் தத்துவத்தை இரண்டு மாதங்களுக்கு முன்பு கூடிய அகில இந்திய டிரேட் யூனியன் காங்கிரசானது ஓர் அளவிற்கு நன்கு உணர்ந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. தொழிலாளர்களுடைய சரித்திரத்திலேயே மிகவும் சிலாகிக்கத் தக்க ஒரு விசேஷ சம்பவமும் இந்த மகாநாட்டில் நிறைவேறியது. அதாவது "மகாத்மா காந்தி உள்ளிட்ட மாபெரும் தேசியத் தலைவர்களெல்லாம்" நாட்டின் முற்போக்கிற்கு தீங்கு விளைக்கும் "தேசத் துரோகிகள்" என்று பகிரங்கமாகவும், வன்மையாகவும், ஆத்திரத்தோடும் எடுத்துக் காட்டப்பட்டுக் கண்டிக்கப் பட்டிருக்கிறார்கள்.

தொழிலாளர்களுடைய விழிப்பு நிலை ஒருவாறு இவ்விதமாக இருப்பதால், தொழிலாள தோழர்களுக்கு ஒரே ஒரு விஷயத்தை மட்டும் குறிப்பிட்டுவிட்டு இதனை முடித்துவிடுகின்றோம். அதாவது தொழிலாளியின் முன்னேற்றத்திற்கு தொழிலாளிகளையே நம்புங்களென்பதேயாகும்.

# ஜெர்மன் சர்வாதிகாரியும், வேலையில்லாத் திண்டாட்டமும்.

ஜெர்மனியில் வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணமாகப் பல லெக்ஷம் ஜனங்கள் தங்கள் வயிற்றுச் சோற்றுக்கே திண்டாட்டமாகி, இருப்பதா இறப்பதா என்ற ஆலோசனையில ஆழ்ந்து கிடந்தனர். அவர்களது வயிற்றுக்கு உணவு கிடைக்கவும், அவர்களுக்கு வேலை கிடைக்கவும், சில திட்டங்களை வகுத்துக் கோடிக் கணக்கான பொருளை அதற்கென ஜெர்மன் சர்வாதிகாரி ஹிட்லர் செலவழித்து வேலையில்லாது திண்டாடும் பெரும்பாலோருக்கு வேலை கொடுத்து வருவதாகவும், இது பெரும் மெச்சத் தகுந்த காரியமென்றும் பல முதலாளி அரசாங்கங்கள் பறைசாற்றுகின்றன.

ஆனால் நாம் இது முதலாளி ஆட்சியின் அழிவிற்கு முன்னால் செய்யப்படும் கடைசி முயற்சி என்று கருதுவதுடன், கண்டிப்பாய் இன்று இல்லாவிட்டாலும் இன்னும் பத்து வருடங்களிலாவது இம் முறை சமதர்மத்தில் தான் கொண்டு போய்விடும் என்று பரிபூரணமாக நம்புகிறோம். ஏனெனில் இன்று முதல் ஒரு ஐந்து வருடங்களுக்கோ, அல்லது பத்துவருடங்களுக்கோ, செய்யக்கூடிய பெரும வேலைத்திட்டத்தையும் அதற்குப் பொருளையும் ஹிட்லர் உண்டுபண்ணி வேலையற்றவர்களுக்கு வேலை கொடுத்து அவர்களது உயிர் பசியால் உடலை விட்டுப் பிரிய முடியாத அளவிற்கு ஆகாரம் கிடைக்கக் கூடிய சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தலாம். ஆயினும் எத்தனை காலத்திற்கு ரோட்டுகள் போடுவது, காடுகள் சீர்திருத்துவது, கட்டடங்கள் கட்டுவது போன்ற வேலைகள் இருக்கும். இவைகளைச் செய்து முடித்தபின் அந் நாட்டில் அவர்களுக்கு என்ன வேலை கிடைக்கும். அந்த நிலையில் அவர்களது கடைசி முயற்சி என்னவென்பதைவாசகர்களே யோசிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

## தொழில் கக்ஷி வெற்றி.

சமீபத்தில்இங்கிலாந்தில்நடந்த தேர்தல்களில் முக்கியமாக லண்டன் கௌன்டி கௌன்சில் தேர்தலில் தொழில் கக்ஷியார் பெற்றிருக்கும் பெரும் வெற்றியிலிருந்து தொழில் கக்ஷியார் இன்னும் சில காலத்திற்கு ஆக்ஷியிலிருப்பார்களெனத் தெரியவருகிறது.

## சர். கே. வி. ரெட்டி.

சமீபத்தில் ஸர். எம். கிருஷ்ணன்நாயர் அவர்கள் தமது சட்டமந்திரி பதவியிலிருந்து விலகிக்கொள்ளப்போவதாகவும் அந்த ஸ்தானத்திற்கு, ஸர். கூர்மா வெங்கிடரெட்டி நாயுடு அவர்கள் நியமிக்கப்படப் போவதாகவும் ஒரு செய்தி கிடைத்துள்ளது இது உண்மையானால்நாம்கொள்ளும் மகிழ்சிக்கு அளவில்லையென்று தான் சொல்லவேண்டும். ஸர் ரெட்டி அவர்கள் சென்ற முப்பது வருடங்களாக சமூக சீர்திருத்தம் அவசியம் என்பதையும், அதற்கு பார்ப்பனீயம் முட்டுக்கட்டையாகயிருந்து வருகிறதென்பதையும் உணர்ந்து பார்ப்பனரல்லாதார் முன்னேற்றம் பார்ப்பன மத ஆதிக்கத்தினின்று விடுபடுவது தான் என்பதை எழுத்திலும், பேச்சிலும், செய்கையிலும் காட்டிவரும் ஓர் சீர்திருத்தப்பிரியர். நிற்க நமது மாகாண பார்ப்பனரல்லாதார் கக்ஷியென வழங்கும் ஜஸ்டிஸ்கக்ஷி, ஸர். கே. வி. ரெட்டி நாயுடு அவர்களுக்கு பல துரோகங்களைச் செய்திருப்பினும், அவர் அதைப்பொருட்படுத்தாது பார்பனரல்லாதார் முன்னேற்றத்திற்கும் இயக்க வளர்ச்சிக்கும், பெரும் தொண்டாற்றியபுனிதர். ஸர். கே. வி. ரெட்டி நாயுடு அவர்களது திறமையை அறிந்த அவர்களது சகாக்கள் பொறாமையினால் அவரை ஒதுக்கி வைத்திருந்த போதிலும், அரசாங்கத்தார் அவரது திறமையை உணர்ந்து அவ்வப்போது அவருக்குரிய ஸ்தானத்தை அவருக்கு கொடுத்துவருவதை பாராட்டுகிறோம்.

# சுயமரியாதை மத்திய சங்க 3-மாதத் திட்டம்.

## காரியதரிசி அறிக்கை.

சுயமரியாதை இயக்கத்தை தீவிரமாய் வளர்க்கும் நோக்கத்துடன் மத்திய சபையார் "மூன்று மாதத்திட்டம்" ஒன்றை தயாரித்திருக்கின்றனர். அந்த திட்டத்தை நிறைவேற்றி வைப்பது இயக்க அன்பர்கள் கடமை.

சுயமரியாதை இயக்கம் பெருக வேண்டுமானால், சுயமரியாதைச் சங்கம் வலுப்பட்டு, ஒரு கட்டு திட்டத்திற்கு உட்பட்டு வேலை செய்து வர வேண்டும். சங்கத்தை வலுப்படுத்துவதற்கென மூன்று மாதத்திட்டத்தில் மூன்று அம்சங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன:—

(1) ஆள்பலம் சேகரித்தல்.
(2) பொருள் திரட்டல்.
(3) ஜனநாயக அமைப்பு.

முதலாவது அம்சம், சங்கத்திற்கு அங்கத்தினர் சேர்ப்பதாகும். ஒவ்வொரு ஜில்லாவுக்கும் 1000 அங்கத்தினர்களையாவது சேர்க்க வேண்டுமென்பது மத்திய சபையார் கோரிக்கை. சுயமரியாதை இயக்கத்தின் ஆதிக்கத்தை அளவிடுவதற்கு இதுவே தக்க சோதனையாகும். ஆனால் எண்ணிக்கையைப் பெருக்குவதற்காகக் கண்ட கண்ட பெயர்களையெல்லாம் சங்கத்தில் சேர்ப்பதில் நன்மையைவிட தீமையே விளையும். இயக்கக் கொள்கைகளை நிதானித்து அறிந்தவர்களாகவும், அக்கொள்கைகளை வளர்ப்பதற்கு தியாகஞ் செய்ய முற்படுகிறவர்களாகவுமே சேர்க்க வேண்டும். அப்படிப்பட்ட அங்கத்தினர் ஒவ்வொரு ஜில்லாவிலும் 1000-பேர் சேர்ப்பது பெரிதல்ல, தஞ்சை, கோவை போன்ற ஜில்லாக்களில் 1000-பேர் மேற்பட்ட தொகையினரைச் சேர்க்க இயலும். இத்திட்டத்தை நிறைவேற்ற உடனே ஒவ்வொரு ஊரிலுமுள்ள சுயமரியாதை இயக்க அன்பர்கள் ஒரு கூட்டம்கூடி, அந்தந்த ஊரிலும் எத்தனை அங்கத்தினர் சேர்க்க முடியுமென்று தீர்மானிக்க வேண்டும். அந்த தீர்மானத்தை நிறைவேற்றி வைக்க ஒரு தனி நபரையோ, அல்லது ஒருகமிட்டியையோ நியமிக்க வேண்டும். அப்படி நியமிக்கப்பட்டவர்கள் மத்திய சபை காரியதரிசிக்கு தீர்மான நகலை அனுப்பினால் அங்கத்தினர் சேர்ப்பதற்கு அச்சு பாரங்கள் அனுப்பப்படும். அச்சுபார விபரப்படி அங்கத்தினராய்ச் சேர விரும்புகிறவர்களிடம் கையெழுத்தும், சந்தாதொகையும் வசூலித்து, கூடுதலாகும் பணத்தை அப்போதைக்கப்போது சென்னை பிராட்வேயிலுள்ள திருவாங்கூர் நேஷனல் பாங்கிக்கு மணியாடர் செய்துவிட்டு, கையெழுத்தான பாரங்களை காரியதரிசிக்கு அனுப்ப வேண்டும். அங்கத்தினர் அத்தாக்ஷி பத்திரம், மத்திய சபை மேற்பார்வையில் ஒவ்வொரு ஊரிலும் சேரும் அங்கத்தினர் எண்ணிக்கை அப்போதைக்கப்போது பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

மூன்று மாதத்திட்டத்தின் இரண்டாவது அம்சம் சுயமரியாதை சங்கத்திற்கு பொருள் சேர்ப்பது. மேற்சொன்ன படி அங்கத்தினரை பெருக்குவது மூலம் அவர்களது சந்தாத்தொகை சங்கத்திற்கு மூலதனமாக சேருவது நிதரிசனம். மேலும் எற்கனவே நடைபெற்ற சுயமரியாதை மகாநாடுகளின் வரவேற்பு சபைகளிடம் தங்கியிருக்கும் பணங்களை வசூல் செய்ய முயற்சிக்கப் படுகிறது. சுயமரியாதை சங்கத்திற்கென வேறு வழிகளில் பணந்திரட்டவும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

மூன்று மாதத் திட்டத்தின் மூன்றுவது அம்சம் சுயமரியாதை இயக்கத்திற்கு ஜனநாயக அமைப்பு எற்படுத்துவது. மனித நன்மைக்கான எற்படும் எந்த இயக்கமும் நிர்மாணவிதிகளுக்கு உட்பட்டு காலக் கிரமப்படி தேர்தல்கள் மூலம் நிர்வாகிகளை நியமித்து ஒழுங்கு முறைப்படி நடவாவிட்டால் அதை ஒரு இயக்க மென சொல்ல தகுதியற்ற நிலைமைக்கு வந்துவிடும். ஆகவே விருது நகர் மகாநாட்டிற்குப்பிறகு மூன்று வருஷங்கழித்து திருச்சியில் கூடப்போகும் சுயமரியாதை மகாநாட்டை ஆர்வத்தோடுமாத்திரமல்லாமல், அமைப்பு வலுவோடும் கூட்டுவது அவசியமாகும். மகாநாட்டுக்குப் பிரதி நிதிகள் தேர்ந்தெடுக்கும் முறையை ஜூன் மாதத்தில் மத்திய சபையர் நிர்ணயிப்பார்கள். அதுவரையில் ஒவ்வொரு ஊரிலும் கிளைச்சங்கங்கள் எற்படுத்தவும் அந்தந்த ஊரிலுமுள்ள இயக்க அன்பர்கள் அனைவரையும் அங்கத்தினராய்ச் சேர்க்கவுமே தீவிர முயற்சி செய்யவேண்டும். இந்த வேலையை துரிதப் படுத்துவதற்காக மத்திய சபை அங்கத்தினரும் மற்றும் சுயமரியாதை இயக்கத்தொண்டர்களும் சுற்றுப் பிரயாணஞ் செய்வார்கள். மூன்று மாதத்திட்டத்தை வெற்றியுடன் நடத்துவதற்காக அந்தந்த ஊர்களிலும் செய்யப்படும் முயற்சிகளைப் பற்றிய முழு விவரங்களையும் எனக்கு அடிக்கடி தெரிவித்து வருமாறு இயக்க அன்பர்களை வேண்டுகிறேன்.

எஸ். ராமனுதன்.
காரியதரிசி.
தக்கர்ஸ்லேன், சென்னை.
23—3—34.

---

உலகத்தொழிலாளர் தினம்

# மே தினம்.

## அந்நாள் செய்யவேண்டிய வேலையும், அவசியமும்.

(காம்ரேட்)

தோழர்களே!

உலகத் தொழிலாளர்கள் பட்டுவரும் கஷ்ட நிஷ்டூரங்களையும், குறைகளையும், அவைகளுக்குப் பரிகாரங்களையும்பற்றி பேசுந்தினமாகவே 'மேதினம்' இந்நாள் கருதப்பட்டு வருகிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்கும், எமாற்றப்பட்டவர்களுக்கும் இந்நாள் ஒன்றே உவந்ததினம். சர்வதேசங்களிலும் இந்நாளில், கோடானகோடிமக்கள், தாங்கள் படும் கஷ்டங்களையும் நஷ்டங்களையும் குறைகளையும் தெரிவிப்பான் வேண்டி, ஆங்காங்கு, கூட்டங்கள் போடுவதும், ஊர்வலம் வருவதும், உபன்யாசங்கள் செய்வதும் வழக்கமாயிருந்துவருகிறது. சென்றவருஷத்தில் கூட, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜர்மனி, ரஷியா, இத்தாலி அமெரிக்கா, ஜப்பான், இந்தியா மற்றுமுள்ள தொழிலாளி முதலாளி தேசங்களில் மே 1-தேதி யன்று கோடான கோடி மக்கள் கூடி, தங்களின் குறைகளைத் தெரிவித்து, பரிகாரத்தைத் தேடியும் யோசித்தும் பலநல்ல தீர்மானங்களை நிறைவேற்றியிருப்பதை நாமறிவோம்.

### லட்சியமும், கடமையும்.

ஆண் பெண் அனைவரும் உழைப்பாளிகளாய் மிளிரும் சமதர்ம சமூகத்தை ஸ்தாபிப்பதே நமது லட்சியம் என்பதே வாலிப வீரர்களின் சிம்மகர்ஜனை. (Our ideal must be a Socialistic order of society in which every one is a worker and no one is a drone or a Parasite) எனவே, உழைப்பவரின் ஓய்வுக்கும் உரிமைக்கும் போராடி, தொழிலாளத் தோழர்களுக்கு உற்சாகமூட்ட வேண்டியது நமது கடமை. தொழிலாளர்க்குப் பாடுபடுவதில் நாம் எந்த சந்தர்ப்பத்தையும் இழந்துவிடக் கூடாது. ஒவ்வொரு சமதர்மியும் தன்னைத்தொழிலாளர்கள் நம்பும்படியாக நடந்துகொள்ளக் கடமைப்பட்டுள்ளான். சமதர்மி உழைப்பது, இடையராது பாடுபடுவது யாருக்கு? தொழிலாளிக்கென்பது சர்வ நிச்சயம். தொழிலாளிக்கு உழைக்க எப்பொழுது சந்தர்ப்பம் கிடைக்குமென்று ஒவ்வொரு சமதர்மியும் பருந்துப் பார்வையோடு அலைந்து திரியவேண்டும். தொழிலாளியின் உள்ளம் உலைக்கு உகந்த இரும்பு. தொழிலாளரிடையே ஓய்வொழிவின்றிக் கிளர்ச்சி நெருப்பை மூட்டின், அவர்கள் உள்ளம் சமதர்மத்தில் படியும். எனவே சமதர்மிகளாகிய சு. ம. தோழர்கள் அகிலதேசத் தொழிலாளர் தினமாகிய மேதினத்தை அலட்சியம் செய்ய மாட்டார்களென்று கூறுவது மிகை.

### தொழிலாளியும், முதலாளியும்.

சரீரத்தால் பாடுபடுகின்றவர்களே தொழிலாளிகளாவர். விவசாயி, நெசவுக்காரன், தச்சன், கருமான், தட்டான், கொத்தன், மில்களில், ரயில்களில் வேலை செய்பவன், ஆலையில்வேலை செய்பவன், குயவன், வண்ணான், அம்பட்டன், மருத்துவன், உபாத்தியாயன், வண்டியோட்டி, ரிக்ஷா ஓட்டி, மோட்டார் ஓட்டி, டிராம் ஓட்டி, கப்பல் ஓட்டி தோட்டி, சக்கிலி, மீன் பிடிப்பவன், சமையல்காரன், விறகு வெட்டுபவன், விளக்கேற்றுபவன், சித்திரவேலை செய்பவன், கல்தச்சன், வர்ணக்காரன், அன்றாடக் கூலிக்காரன் இன்னோரன்ன ஆண் பெண் உழைப்பாளிகளெல்லாம் தொழிலாளர்கூட்டம். இவர்கள் அடங்கலும் "சுயசிரம ஜீவிகள்" தொழிலாளிகளை அண்டிவுண்டி உறுஞ்சிப்பிழைக்கும் "பரசிரம ஜீவிகள்" தான் முதலாளிக்கூட்டம்.

தொழிலாளிகள், காலைச் சாப்பாட்டுக்கு என்ன செய்வது? வீட்டுவாடகைக்கு என்ன செய்வது? துணிக்கு என்ன செய்வது? குழந்தை பிறந்து விட்டதே அதற்கு வகையென்ன? அதற்குப்பால் எங்கே? படிப்பிற்குப் பணமெங்கே? அதை எப்படி வளர்ப்பது? வியாதி வந்துவிட்டதே! எப்படி மீள்வது? டாக்டருக்குப்பணம் எங்கே? என்று எண்ணுதெல்லாம் எண்ணி நெஞ்சம் புண்ணாகி, கவலைக்கடலில் விழுந்து தத்தளித்துத் திணறுவது அகோரக்கண்றாவி. பக்கத்தில் முதலாளிவர்க்க, வாழ்க்கைக்கு வேண்டியதுபோக மீதியிருப்பதை எப்படிப் பத்திரப்படுத்துவது? எப்படி ஒன்று, பத்து, [illegible]

மாக்கிப் பெருக்குவது? எவ்வாறு சகலசுகபோக போக்கியங்களிலும் புரண்டு அனுபவிப்பது? முதலிய கவலைகளில் ஆழ்ந்து கிடக்கும் காட்சி, உண்மையிலேயே உலகத்தில் ஓர் விநோதச்சித்திரந்தான்.

முதலாளிகள் தங்களுடைய வாழ்க்கையை நிரந்தரமாகச் சொகுசாகக்கழித்து வரும்பொருட்டு, அரசாங்கத்தைக் கைப்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். மத ஆதிக்கத்தை நிர்வகித்து வருகிறார்கள். சமூக அந்தஸ்தின் மேற்படியில் குந்தியிருக்கிறார்கள். பத்திரிகைகளை எல்லாம் பெரும்பாலும் காலடியில் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதெல்லாம் போதாவென்று, தொழிலாளர்களுக்காகப் பரிதாபப்படுகிறவர்கள் போல் வேஷம் போட்டுக்கொண்டு, தொழிலாளர் சங்கம், பொதுஜன சேவை சங்கம் என்று ஏற்படுத்தி அவைகளுக்குத் தாங்களே முழுநிர்வாகிகளாய் இருந்து தொழிலாளர்களுடைய கூலிக்காரத் தன்மையும், ஏழ்மைத் தன்மையும் நிரந்தரமாக இருக்கவும், தாங்கள் மேலும்மேலும் முதலாளிகளாய் நிரந்தரப்பிரபுக்களாய்த் திகழவுமான காரியங்களைச் செய்து தொழிலாளர்களை ஏமாற்றிக்கொண்டும் வருகிறார்கள். எனவே தொழிலாளிகள் எவ்வளவு கொடியசிக்கலில் அகப்பட்டுத் தவிக்கிறார்களென்பதைச் சமதர்மிகள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

தொழிலாளிக்கூட்டம் வரவரத் துன்பத்திற்கிரையாகிக் கொண்டுவருகிறது. முதலாளி வகுப்பார், புதிய வியாபாரச் சந்தைகளைக் கைப்பற்றி யுத்தத்திற்குத்தயார் செய்வதனாலும் தொழிலாளவர்க்கத் திடமிருந்து பலவகையில் கொள்ளையடிப்பதாலும், யந்திர உதவியினால் கூலி குறைப்புத் திட்டத்தைக் கையாடி அதிக உற்பத்தி செய்வதினாலும், ரத்தத்தை அதன்மூலமாக உறிஞ்சுவதனாலும், வேலையில்லாத் திண்டாட்டத்தினாலும் தொழிலாளர்கள் பெருத்த குழப்பத்திற்குள்ளாகி வருகிறார்கள்.

## மேதினம் அவசியம்.

இந்நிலைமையில், தொழிலாளிகளின் குறைப்பாடுகளை எடுத்துக்கூறவும், தொழிலாளிகளிடையே பெருத்த விழிப்பையும் பரபரப்பையும் உண்டாக்கவும் மேவிழா மிக அவசியமானதென்பதை சமதர்மிகள் நன்கு உணர்வரென்றே எனது தோழர்களுக்கு இதை வணக்கத்துடன், இந்த உடல் நலிவான வேளையிலுங்கூட ஞாபகமூட்ட முயற்சிக்கிறேன். தோழர்கள் ஏகோபித்து உழைத்தால் மேதினத்தைத் தமிழ்நாட்டில் சீரும் சிறப்பும், ஜெயமும் பெறச்செய்யலாமென்பதில் ஐயமில்லை மே 1உயன்று காலையிலும், மாலையிலும் அந்தந்தக் கிராமங்களிலும், பட்டணங்களிலும் சமதர்மிகள் ஊர்வலம், சமதர்ம சங்கீதங்களுடன் வந்து, ஆங்காங்கு வசதியான இடங்களில் கூட்டங்கள் கூடி சமதர்மம் இன்னதென்று தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் விளக்க வேண்டும். இவ்விதமாக, ஒழுங்காகவும், ஞாயமுறைப்படியும் கூட்டங்களையும், ஊர்வலங்களையும் நடத்த ச. ம. தோழர்களைக்கேட்டுக் கொள்கிறேன்.

# புதிய உலகு செய்வோம்.

(பாரதிதாஸன்)

புதியதோர் உலகம் செய்வோம்— கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம் (புதிய)

பொது உடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோ டதைஎங்கள் உயிரென்று காப்போம் (புதிய

இதயமெலாம் அன்பு நதியினில் நனைப்போம்
"இதுஎன தெ"ன்னுமோர் கொடுமையைத்தவிர்ப்போம். (புதிய)

உணர்வெனும் கனலிடை அயர்வினை எரிப்போம்
"ஒருபொருள் தனி"எனும் மனிதரைச் சிரிப்போம் (புதிய)

இயல்பொருள் பயன்தர மறுத்திடில் பசிப்போம்
சுவையுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம். (புதிய)

---

## செயற்கை இருதயம்.

மாஸ்கோ-:

ருஷியாவிலுள்ள பக்டோஸ்ரா வித்தியா சங்கத்தைச்சேர்ந்த டாக்டர்கள் செயற்கை இருதயம் செய்யும் முறையைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒரு மனிதனுடைய இருதயத்தில் கோளாறுகள் ஏற்பட்டபோது அதனைச் சிகிச்சை செய்வதற்காக வெளியில் எடுத்துவிட்டு அதே சமயத்தில் செயற்கை இருதயத்தை அம்மனிதன் உடம்பில்வைத்து உயிருடனிருக்கச் செய்யலாமென அவர்கள் கூறுகிறார்கள்.

அவர்கள்' இம்முறையை மிருகங்களிடத்தில் செய்துபார்த்து வெற்றியடைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. பிரஸ்தாப டாக்டர்கள் ஓர் நாயின் இருதயத்தை வெளியில் எடுத்து அதனை அநேக விடங்களில் ஆப்ரேஷன் செய்து 17 இடங்களில் தையல்போட்டு மறுபடியும் நாயின் தேகத்தினுள் வைத்துவிட்டார்கள் இதற்கு மத்தியில் செயற்கை இருதயத்தின் மூலமாகவே நாயின் தேகத்தினுள் இரத்தம் சுற்றிவந்தது.

## சேலம்.

### நிர்வாக சபை அமைப்புக் கூட்டங்கள்.

சேலம் அரிசிப்பாளையம் வரிசெலுத்துவோர் சங்கத்திற்கும், சமதர்ம வாலிபர் சங்கத்திற்கும் உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்க தோழர் கே. ஆர். சோமைய்யா அவர்கள் வீட்டில் 15-3-34 மாலை ஒரு பொதுக்கூட்டம் எஸ். ஆர். பொன்னுசாமைய்யா தலைமையில் நடந்தது. சமதர்ம வாலிபர் சங்கத்திற்கு தோழர் கே. ஆர். சோமைய்யா அவர்கள் தலைவராகவும், எஸ். ஆர். பொன்னுசாமைய்யா உபதலைவராகவும். தோழர் ஏ. என். பழனிசாமி காரியதரிசியாகவும், தோழர் சிவநாராயணன். ராமலிங்கம் உதவிக் காரியதரிசிகளாகவும், தோழர் எம். எஸ். சொக்கலிங்கம் பொக்கிஷதாரராகவும் நியமிக்கப்பட்டார்கள். பிறகு தோழர் ஆர். நடேசன் சிறிதுநேரம் சங்க நிர்வாகத்தைப்பற்றி-பேசி முடித்ததும் வரிசெலுத்துவோர் சங்கத்திற்கும் கீழ்க்கண்ட உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டார்கள். தோழர் எஸ். ஆர். பொன்னுசாமைய்யா தலைவர், தோழர் கே. எஸ். சிதாமணி உபதலைவர், தோழர் ஒ. வி. கோவிந்தராஜுலு காரியதரிசி, பி. கே. நஞ்சப்பன் உதவி காரியதரிசி, டி. என். சீதாராம செட்டியார் பொக்கிஷதார் ஆக தீர்மானித்தப்பிறகு சங்கக்கட்டிட விஷயமான தீர்மானத்தை அடுத்தக் கூட்டத்தில் ஆலோசிக்கவும், இலவச வாசகசாலை ஏற்படுத்துவதைப் பற்றியும் பேசிய பிறகு கூட்டம் சுமார் 9-மணிக்குக்கலைந்தது.

## சென்னை, மயிலாப்பூர் சுயமரியாதைச் சங்கம்.

ஷை சங்கத்தின் ஆதரவில் சென்ற 18-3-34-உ ஞாயிறுக்கிழமைமாலை 6மணிக்கு சென்னை மயிலாப்பூர் கடற்கரையில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. அக் கூட்டத்திற்கு நகரத்தின் பல பாகங்களிலிருந்தும் பெரும் பாலோர்வந்திருந்தனர். தோழர்கள் சி. டி. நாயகம் ஏகாம்பரம் (தஞ்சாவூர் சு-ம இயக்கத்தைச் சேர்ந்தவர்) குஞ்சிதம் பி. ஏ. எல். டி., எல். ராமசாமி, எதிராஜுலு, சுப்பிரமணியம் என். டி. பிள்ளை, ராஜவடிவேலு, அன்பர்களும் வந்திருந்தனர்.

கூட்டத்திற்கு தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல். அவர்கள் தலைமை வகித்தார்கள். தோழர் ரங்கநாதம் அவர்கள் "சுயமரியாதை இயக்கம்" என்பது பற்றியும், தோழர் எஸ். குருசாமி பி. ஏ. அவர்கள், 'பார்ப்பன புரட்டும், கதர் புரட்டும்' என்பதுபற்றியும் பேசினார்கள். பிறகு தோழர் அழகிரிசாமி அவர்கள் கடவுள், கோவில்களின் பெயரால் "ஆஸ்திகர்" செய்யும் அட்டூழியங்களை விளக்கியும், ஏழைகளின் பரிதாபகரமான வாழ்க்கையைப்பற்றியும், மூட பழக்க வழக்கங்களைப்பற்றியும் பல ஆதாரங்களோடு நெடுநேரம் பேசினார். தலைவர் முடிவுரை கூறிய பிறகு இரவு 8-30 மணிக்குக் கூட்டம் கலைந்தது என ஷை சங்கக்காரியதரிசி எழுதுகிறார்.

## சமதர்ம வாலிபர் சங்கம் அனுப்பபாளையம்.

19-3-34 திங்கட் கிழமை மாலை 5-மணிக்கு ஆபீஸ் ரூமில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தோழர் தா. மு. சின்னுசாமி அவர்கள் தலைமை வகித்தார், சமதர்ம வாலிபர் சங்கம் என்ற ஓர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. நோக்கங்களும், சட்டதிட்டங்களும் தயாரித்து வாசித்து ஏகோபித்து அங்கீகரிக்கப்பட்டது. கீழ்க்கண்ட தோழர் நிர்வாகஸ்தர்களாகநியமிக்கப்பட்டிருக்கிறார்கள்

தலைவர்:- தோழர் அ. ப ராயப்பன் அவர்கள்.

உபதலைவர்கள்:- தோழர்கள் ஈ. அருளப்பன், ஊ ந. மு. அப்புசாமி.

காரியதரிசிகள் தோழர்கள் ஊ. கொ. ஆறுமுகம், க. ந. சி. ந, வெங்கடாசலம்

பொக்கிஷதார்:- தோழர் தா. மு. சின்னுசாமி அவர்கள்.

பொக்கிஷ காரியதரிசி:- க. வி. ந. கு. இராமசாமி அவர்கள்.

ஆடிட்டர்:- தோழர் சு. இரா. மு. இராமநாதன்

விளம்பர அதிகாரி:- ரா. ப. கிருஷ்ணசாமி,

### நிர்வாகக் கமிட்டி மெம்பர்கள்.

தோழர்கள். கு. வெ. ரா. குட்டியப்பன், சி. ஆர் சுந்திரம், ரா. பெ. ரங்கசாமி, சி. கருத்தாசலம்,

இன்னும் மற்ற தீர்மானங்களும் செய்து தலைவர் முடிவுரை கூறினார்கள். தோழர் ஊ. ந. மு. அப்புசாமி அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு இனிது 10-மணிக்கு முடிவு பெற்றது.

## சேலம்

### போதுக்கூட்டம்.

14-3-34 தேதி மாலை 6 மணிக்கு சேலம் சுயமரியாதைச் சங்கப் பார்க்கில் தோழர் ராமசுப்ரமணியம், 'மத ஊழல்' என்ற விஷயத்தைப் பற்றியும் தோழர் நீலாவதி, பெண்களும் சுயமரியாதை இயக்கமும் என்ற பொருள் பற்றியும் தோழர் அ ராகவன், 'ரஷ்ய தேசமும், விஞ்ஞானமும், என்பதைக் குறித்தும் மிக உற்சாகத்தோடு பேசினார்கள். (நிருபர்)

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

லாம். ரூ. 10, 50, 100, 250 இவை போன்ற ஒவ்வொரு ஆலைக்கும் ஒவ்வொரு தாரணையில் பங்குகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சிலர் ஒரு பங்கு, சிலர் பத்து, சிலர் நூறு, இவ்விதமாக அவரவர்கள் பிரியப்படி பங்குகள் எடுத்திருப்பார்கள். பங்குகள் எல்லாவற்றையுமாவது, சில வற்றையுமாவது, எப்பொழுதும் விற்கலாம். வேண்டும் பொழுது புதுப்பங்குகள் வாங்கவும் செய்யலாம். இந்தப்பங்குகளை விற்கவும் வாங்கவும் தரகர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எழுதினால் எப்பொழுது வேண்டுமானாலும் பங்குகள் வாங்கித்தருவார்கள். வேண்டாத பொழுது விற்றுத்தருவார்கள். ஆலையில் ஆண்டுதோறும் வரும் இலாபத்தைப்பங்காளிகள் பிரித்துக் கொள்ளுமுன் இலாபத்தில் ஒரு பாகத்தை வேறாக ஒதுக்கிவைக்கிறார்கள். அப்படி ஒதுக்கி வைத்த பணத்திலும் அதன் வரும்படியிலும், பங்காளிகளுக்கு உரிமை உண்டு. தரிசாகக் கிடந்த நிலத்தை சொற்ப தொகைக்கு வாங்கி, அதில் ஒரு கிணறு கட்டின பிறகு நிலத்தின் விலை கூடுவது போல, ஆண்டு தோறும் ஒதுக்குகிற பணம் கூடக்கூடப், பங்கின் விலையும் கூடும். அதற்குத் தக்கவாறு இலாபமும் கூடும். தான் வேலை செய்கிற ஆலையிலுள்ள பங்குகளை ஒவ்வொரு தொழிலாளியும் தன் மிச்சப் தொகைக்குத்தக்கவாறு வாங்குவது, தனக்கும் ஆலைக்கும் நாட்டுக்கும் நல்லது. சில தொழிலாளிகள் தாங்கள் மிச்சம் பிடித்த பணத்தைக் கொண்டு, ஊரில் பயிர் நிலம் வாங்குகிறார்கள். அது நல்லதல்ல என்பது 11-3-34ல் வெளிவந்த "புரட்சி"யில் நான் எழுதிய கட்டுரையிலிருந்து தெளிவாகும். ஆலையில் வேலை பார்க்கிற பொழுது தன் சேமிப்பை ஆலைப்பங்குகளில் போட்டிருப்பது தான் சிறந்தது. ஆலைவேலையை விடுகிற பொழுது, தன் பங்கை விற்றுக் கொள்ளலாம் அதன் பின் பயிர்த் தொழில் செய்வதாயிருந்தால், அந்த பணத்திலிருந்து பயிர் நிலம் வாங்கிக்கொள்வது சரியாகும்.

(5) ஆலைத் தொழிலாளிகள் ஆலையில் பங்கு வாங்குவதால், அவர்கள் ஆலை முதலாளிகளுமாகி விடுகிறார்கள். முதலாளி தொழிலாளி என்ற வேற்றுமை எளிதாகத் தொலைய இடமாகிறது. தொழிலாளர் இயக்கத்தின் நோக்கம் அவ்வேற்றுமை தொலைவது தான் அல்லவா? வேலை நிறுத்தம் செய்யாமலும், கொந்தளிப்புச்செய்யாமலும், இந் நிலைமை தொழிலாளருக்குக்கிட்டுமானால், அது சிறந்த வழி அல்லவா? ஆலையைப் பறிமுதல் செய்து, தொழிலாளரிடம் ஒப்படைக்கும்படி துரைத்தன உதவியை நாடவேண்டியதில்லை. தொழிலாளர்கள் ஆலைப்பங்குகளை வாங்க வாங்க, ஆலை ஆட்சியில் தங்கள் ஆதிக்கம் பெருகும். சம்பளம் உயர்த்தவேண்டும் வேலை நேரத்தைக்குறைக்க வேண்டும். தொழிலாளர்களுக்கு வேறு வசதிகள் செய்யவேண்டுமென்றால் முதலாளிகளிடம் தூது போக வேண்டியதில்லை. வேலை நிறுத்தப் பயம் உண்டுபண்ணவேண்டியதில்லை. துரைத்தனத்தாரிடம் முறையிட வேண்டியதில்லை. ஆண்டு தோறும் கூடும் பங்காளிகள் கூட்டத்தில் அவசியமானால் இடையிட்ட காலத்திலும் பங்காளிகள் கூட்டம் கூட்டுவித்து அதில் இவைகளைப் பற்றிப்பேசி முடிவு செய்யலாம் மாதந்தோறும் அல்லது குறுகிய காலத்தில் கூடி, ஆலை வரவு செலவு முதலியவைகளை ஆட்சி செய்யும், பெரிய தனக்காரர்களுள், ஒருவரையோ, சிலரையோ பங்காளிகளாகிய தொழிலாளர்களிலிருந்து தெரிந்தெடுக்கச் செய்யலாம். ஆலைகளில் வேலை செய்கிற சிறு தொழிலாளர்கள் மாத்திரமல்ல பெரும் சம்பளம் வாங்கும் ஆலைக் கணக்கர்கள், எழுத்தாளர்கள், முதலியவர்களும் இம்மாதிரிப் பங்காளிகளாவது நல்லது தொழிலாளர்கள் சொல்லும் முறைப்பாடுகள் ஒப்புக் கொள்ளக்கூடியனவல்ல என முதலாளிகள் சொல்வது, உண்மையா என ஆராய்ந்து உணரவும் இடமாகும். தொழிலாளர்கள் பொறுப்பற்று மனம் போனபடி எல்லாம் பேசுகிறார்கள் என்று சொல்லும் மனப்பான்மை போய், தொழிலாளிகள் பொறுப்புடன்தான் பேசுகிறார்கள் என்று யாவரும் ஒப்புக்கொள்ளும் படியான நிலைமை வரும். மேலே கூறிய எல்லா நன்மையும் உடனே வராவிட்டாலும், நாளடைவில் வந்து தீரும் என்பது உறுதி. தொழிலாளிகள் பங்காளிகள் ஆதால், ஆக முயல்வதால், முதலாளிகளுக்கு, முதலாளிகளின் பிரதிநிதிகளுக்கு மனத்தாங்கல் உண்டாகுமோ என ஐயப்பாடு எழலாம். அப்படி மனத்தாங்கல் உண்டாவதற்கு நியாயமில்லை. இவ்வேற்பாடு புதிதாக இருப்பதால், சற்று தியக்கம் உண்டாகலம் நாளடைவில் இவ்வேற்பாட்டை அவர்களே ஊக்குவிப்பார்கள். "ஆலை நிலைமை எப்படியிருப்பினும் சரி, எனக்குள்ளதைக் கொடுத்து விடு" என்று கேட்பது போய் ஆலையின் நிலைமையை உயர்த்துவதில் தொழிலாளப் பங்காளிகளும் புதுப்பொறுப்புப் பெற்று ஊக்கங் காட்டுவார்கள் என அவர்களே இவ்வேற்பாட்டை விரும்புவார்கள். ஆலை மேம்பாடடைவதற்கு, வெறும் முதலாளிகளுக்குத் தென்படாத கருத்துகள் தொழிலாள முதலாளிகளுக்குத் தென்படுமாகையால், தொழிலாள முதலாளிகளின் இவ்விதக் கூட்டுறவை வெறும் முதலாளிகள் தாங்களாகவே நாடுவார்கள்.

(6) ஆலைத்தொழில் போலவே, சுரங்கம், புகைவண்டித் தொடர், மண்ணெண் ணெய்க்கிணறு, நெருப்புப்பெட்டி, சர்க்கரை, தேயிலைத் தோட்டம், இவைபோன்ற கூட்டுத் தொழில்களில் எல்லாம் தொழிலாளர் பங்கு வாங்கி முதலாளி ஆவதற்கு இடம் இருக்கிறது. அந்தப் பங்குகள் எல்லாம் நாள்தோறும் சென்னையிலும் பிற இடங்களிலும் விற்கவும் வாங்கவும் படுகின்றன. சென்னையில் ஹூஸன் டாட் அண்கோ (Huson Tod & Co,) மெக்கன்கி அண்கோ (Maconchle & Co) என்ற இரண்டு வெள்ளைக்காரக் கூட்டுத் தரகர்கள் இவ்வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு எழுதினால் எந்தப் பங்கு வேண்டுமானாலும் கிரயத்திற்கு வாங்கித் தருவார்கள். இருவர், மூவர், சிலர்—சேர்ந்துகூட கூட்டாக ஒரு பங்கு வாங்கலாம். ஆண்டுதோறும் வரும் இலாபத்தைத் தங்களுக்குள் பிரித்துக் கொள்ளலாம். தொழிலாளர்கள் தனித்தும் தொழிற் சங்கங்களும் இவ்வழியில் முயல விரும்புகின்றேன்.

## நாகப்பட்டினம்.

### சுயமரியாதைச் சங்கம்.

18-3-34ந்தேதி மாலை 6-30 மணிக்கு சங்க மெம்பர்கள் கூட்டம் சங்கத் தலைவர் தோழர் எஸ். பி. கிருஷ்ணன் தலைமையில் கூடியது. அது சமயம், சங்க ஜனவரி, பிப்ரவரி மாதங்களின் வரவு செலவு கணக்குகளை வாசித்து ஒப்புக்கொள்ளப்பட்டது. பின் வருஷாந்திர அறிக்கை தயாரிக்கவும், கணக்குகளை ஆடிட்செய்யவும் கமிட்டி ஒன்று தேர்ந்தெடுக்கப் பட்டபின் சுயமரியாதை சங்க மத்திய சபையின் கூட்ட முடிவைப் பற்றி ஆலோசனைக்கு எடுத்து கொண்டபோது தஞ்சை சுயமரியாதைச் சங்க காரியதரிசி தோழர் ஆளவந்தார் அவர்கள் ஜில்லா தாலூகா சங்கங்கள் சரியான முறைப்படி எங்கும் அமைக்கப்படாமலிருப்பதால் எல்லோரும் மாகாண சங்கத்திற்கு வருஷ சந்தா நான்கணா செலுத்தி பதிவு செய்துக்கொள்ள முடியாதென்றும், மத்திய சங்கத்தில் மெம்பர்களாயில்லாதவர்களுக்கு மாகாண மகாநாட்டில் ஓட்டு கொடுக்க உரிமை கிடையாதென்பதில் ஏதோ சூழ்ச்சியிருப்பதாகவும் கூறினர். அதை ஆதரித்து தோழர்கள் கே. எஸ். முஜிபுல்லா, வி. சாமிநாதன் ஆகியவர்கள் பேசினார்கள். மத்திய சங்கத்தார் இப்பொழுதாவது மாகாண மகாநாடு கூட்ட முன் வந்தது பற்றி பாராட்டுவதாகவும், கூடியவிரைவில் ஜில்லா சங்கத்தை ஏற்படுத்தி மத்திய சங்கத்தார் தீர்மானப்படி ஜில்லாவுக்கு 1000-அங்கத்தினர்களை யாவது சேர்க்க வேண்டுமென்ற தீர்மானத்தை தோழர் டீ. எஸ். மணி பிரரேபிக்க என். எம். சாமி ஆமோதிக்க மார்ஷல் ஆதரிக்க, ஓட்டுக்கு விடப்பட்டதும் சமத்துவமாக ஓட்டு இருந்ததால்தலைவரின் காஸ்டிங் ஓட்டால் மத்திய சங்கத்தாரின் தீர்மானத்தை ஆதரிக்கும் தீர்மானம் நிறைவேறியது. முடிவுரையோடு இரவு 11 மணிக்குக்கூட்டம்இனிதுகலைந்தது.

**பத்திராதிபர் குறிப்பு:—** விருதுநகரில் நடந்த 3-வது சுயமரியாதை மகாநாட்டில் அமைக்கப்பட்ட கமிட்டி சென்ற 11—3—34 சென்னையில் கூடியது; இவ்வளவு காலம் கழித்தாவது வேலை செய்யும் நோக்கத்தோடு கூடியதையும், கூடி இயக்க வளர்ச்சிக்காக செய்துள்ள தீர்மானத்தையும் பாராட்டுகிறோம்.

நிற்க நாகை சங்கத்தில் நடந்த விவாதத்தை நோக்கும்போது, அவர்களிடையே உண்டாகியுள்ள ஒரு சில சந்தேகங்களை நீக்க வேண்டி அடியில் கண்டுள்ள விஷயங்களை அவர்களது நினைவிற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறோம்.

1. செங்கற்பட்டில் கூடிய நமது முதலாவது மகாநாட்டில் அமைக்கப்பட்டுள்ள சங்க அமைப்பு விதிகளின் படி நமது இயக்கத்தில் ஒரு மத்திய சங்கமும் (மாகாண சங்கம் Central League) மற்ற எல்லா சங்கங்களும் கிளைசங்கங்களாகவும் தான் இருக்க முடியும். ஜில்லா தாலூக்கா கிராமம் முதலிய சங்கங்கள் கிடையாது.

2. அந்தந்த ஊரில் ஏற்படும் சங்கமும் சென்ட்ரல் லீக் என்னும் மாகாணச் சங்கத்திற்குத் தங்கள் சங்கத்தில் சேர்ந்துள்ள அங்கத்தினர் ஜாபிதாவையும் அவர்களின் சந்தாத் தொகை அணா நாலையும் அனுப்பவேண்டியதும் ஏற்கனவே உள்ள திட்டமேயொழிய புதிய திட்டமல்ல.

3. நான்காவது மகாநாடு கூடும் வரை வசூலாகும் சந்தாப் பணத்தை மாகாணக் கமிட்டிக்குச் செலவழிக்கக்கூடாதென தீர்மானித்திருப்பது ஒன்றுதான் புதிது. இந்ததீர்மானம் நமது தோழர்களுக்கு கமிட்டியிடம் நம்பிக்கை ஏற்படவேண்டியே செய்யப்பட்டிருப்பதாகக் கருதுகிறோம். ஆகவே மாகாணக் கமிட்டியின் திட்டத்தை நிறைவேற்ற எல்லா கிளைச் சங்கங்களும் முன்வர ஆசைப்படுகிறோம்.

## கோவை விளையாட்டு போட்டி.

கோயமுத்தூர் அத்தலேடிக் கிளப்பின் ஆதரவின் கீழ் இரண்டாவது ஆண்டு கால் பந்து போட்டி எப்ரல் மாத மூன்றாவது வாரத்திலும் வாலிபால் போட்டி மேமாதக் கடைசியிலும் நடைபெறும். டை போட்டியில் முடிவில் வெற்றி பெறுபவர்களுக்கு வெள்ளிக் கிண்ணங்களும், தோல்வி அடைபவர்களுக்கு வெள்ளிபதக்கங்களும் பரிசாக அளிக்கப்படும். மற்ற விபரங்கள் வேண்டுவோர் ஏ. பி. சதாசிவம், காரியதரிசி, கோயமுத்தூர் அத்தலேடிக் கிளப் என்ற விலாசத்திற்குஎழுதி தெரிந்து கொள்ளலாம்.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டு கலங்காது முன் சொன்ன பலத்தைவிட 100க்கு 97 பேர்களாக உள்ள மக்களின் எதிர்ப்பு இனி ஏற்படும் என்பதை ஜஸ்டிஸ் கட்சியார் இன்று சர்க்காருக்கு உணர்த்த வேண்டும். இவ்விதம் உணர்த்துவது சட்டவிரோதமல்ல.

ஜஸ்டிஸ் கட்சியாரால் கொண்டு வரப்பட்ட, நிறைவேற்றப்பட்ட ஓர் சட்டம், சில பார்ப்பன கனவான்களின் எதிர்ப்புக்கு பயந்து உடைத்து எறியப்படுமானால், அது இனி இம்மாகாணத்தில் பார்ப்பனீயத்தை எதிர்த்து எவனும் வாழ முடியாது என்பதைத்தான் காட்டும் நீங்கள் பார்ப்பனரல்லாதாருக்கு பெறும் நன்மை எதுவும் செய்யாவிட்டாலும், உங்களால் தீமை வராது இருக்கும்படியாகவாவது நீங்கள் நடந்து கொள்ளவேண்டும். நாளை வரும திருத்தம் பெறும் கட்டுப்பாடுடன் எதிர்க்கப்பட்டு, இம்மாகாணப் பார்ப்பனீயத்துக்கு சாவு மணி அடிக்கப்போகின்றீர்களா? அல்லது சிலர் சொலுகிறபடி திருத்தம் வரும்போது சண்டப்பிரசண்டமாகப் பேசி விட்டு ஓட்டு எடுக்கும் போது வெளியே சென்றுவிடப் போகிறீர்களா? என்று பார்ப்பனரல்லாத சமூகம் பார்த்துக்கொண்டிருக்கிறது. திருத்தத்தை எதிர்க்க முடியாவிட்டாலும், எப்படியும், திருத்தச்சட்ட சபையில் நிறைவேற்றப்படுமானால் ஜஸ்டிஸ் கட்சி அத்தனை பேரும் சட்டசபையை விட்டு, வீரர்களாக வெளிவர தயாருக இருக்கிறீர்களா? அப்படி இருப்பீர்கள் என்று தெரிந்திருந்தால், இந்நிலை ஏற்பட்டுகூடயிருக்காது. எப்படியோ ஏற்பட்டு விட்டது. இனியாவது உங்களை நம்பிய கோடானு கோடி மக்கள் பார்ப்பனர் முன் நிமிர்ந்து நடக்கும்படியாகச் செய்யத் தவரக்கூடாது.

நமது முதன் மந்திரி அவர்களுக்கு, கனம் அல்லாடி ஐயர் அவர்கள் இச்சட்டம் போன்றதுகள் வந்தால்—ரஷ்யாவின் பொதுவுடைமை உடனே வந்து விடும் என்று பொய்க்கதை கூறிஉங்களை பயமுறுத்தும்போது அதை ஆண்மையுடன் தாங்கள் மறுத்ததை மாகாணப் பார்ப்பனரல்லாதார் மறந்துவிடவில்லை. அத்துடன் மட்டுமல்ல. ரஷ்யாவில் ஏற்பட்ட கலகம் இங்கு உண்டாகாதிருக்க அதைத் தடுக்கும் பொருட்டு இந் நாட்டு ஏழைக் குடிகளுக்குப் பாதுகாப்பும் நம்பிக்கையும் உண்டாவதற்காகவே இச் சட்டம் கொண்டுவந்ததாகக் கூட தாங்கள் கெம்பீரமாகக் கூறியது இன்னும் கேட்டுக்கொண்டு இருக்கிறது. நாளை திருத்தம் தோற்கடிக்கப்படாமல் போனால் அது உங்கள் கட்சிக்குமட்டும் நஷ்டமென்பதல்ல. உங்கள் கட்சியின் பேர் எந்தக் கோடிக்கணக்கான மக்களின் பேரால் இருக்கிறதோ அவர்களுககு துரோகம் செய்ததாக ஆகும் என்பதையும் ஞாபகமூட்ட ஆசைப்படுவதுடன் இந்நிலை ஏற்பட ஜஸ்டிஸ் கட்சி இடம் கொடாது என்று சிறிது உள்ள நம்பிக்கையே இதைப்பற்றி வற்புறுத்தத் தூண்டியது.

நாளை சட்ட மெம்பராகவாவிருக்கும் கனம் சர். சே. வி. ரெட்டி நாயுடு அவர்கள் ஜஸ்டிஸ்கட்சி முயற்சியால் சிபார்சால் லாமெம்பராக வரவில்லை என்பது பார்ப்பனத் திண்ணைப் பிரசாரமாகும். சர். ரெட்டி நாயுடு அவர்களைவிட தகுந்த ஓர் கனவான் இம் மாகாணத்தில் இல்லை யென்பதைப் பார்ப்பனீயம் ஒப்புக்கொண்டாலும் லாமெம்பர் நியமனமானது பார்ப்பன சிபார்சால் வந்ததாக முழுப் பொய் பிரசாரத்தைச் செய்துவருகிறார்கள். இதற்குக் காரணம் ஓர் மாகாணத்தில் மேன்மை தங்கிய கவர்னரிலிருந்து சகல நிர்வாகக் கமிட்டி மெம்பர்களும் பார்ப்பனரல்லாதார் கட்சியாகவிருக்கும்போது இதில் ஓர் அய்யருக்கு இடம் கொடுக்கப்படல் நியாயம் என்பது அவர்கள் ஆசையும் முயற்சியுமாகும். அடுத்தகாலியாகும். இடத்துக்கு ஓர் அய்யர் பிரபு வருவதற்கு மாகாணப் பார்ப்பனர்கள் இன்றுவரை செய்துவரும் பிரயத்தனம் அளவிட முடியாதனவாகும். வகுப்புவாதத்தை வெறுப்புதாகக்கூறும் தினசரி ஆங்கில தமிழ் பார்ப்பனப் பத்திரிகைகள், அல்லாடி அய்யர்வாள் இருக்கவேண்டுவது அவசியமென்று பறையடிக்கிறது.

இனும்தார் மசோதாவுக்குத் திருத்தம் வந்து அது நிறைவேறி விடும்பட்சத்தில் அதன்பின் ஜஸ்டிஸ்கட்சி செய்யப்போவதுயாது? பார்ப்பனீயம் நிலைநாட்டப்படுமானால் அதன்பின் பார்ப்பனரல்லாதாருக்கு உண்டாக்கப்பட்ட நஷ்டத்துக்குப் பார்ப்பனரல்லாதார் கட்சி செய்யப்போகும் பரிகாரம் யாது? இம் மாகாணப் பார்ப்பனர் அல்லாதார் கட்சி செய்யப் போவதென்ன என்பதை நாம் பொருத்திருந்து பார்ப்போம்.

---

(7ம் பக்கத் தொடர்ச்சி)

தங்களாலான உச்ச அளவு வேலையைச் செய்தவர்களாவார்கள். இருவரும் ஒரே அளவான வேலையைச் செய்ய வேண்டுமென எதிர்பார்ப்பது சம உரிமை ஆகாது. ஒருவரைவிட மற்றவரிடத்தில் கூடின வேலையை வாங்கியதேயாகும்.

3. நெட்டைக்காலன் ஒருவனும் குட்டைக்காலன் ஒருவனும் குறிப்பிட்ட ஒரே தூரத்திற்குப் போக வேண்டுமென எதிர்பார்ப்பது இருவரிடமும் சமவேலை வாங்கியதாகாது. முந்தியவனை விடப் பிந்தியவனிடம் கூடின வேலையை வாங்கியதேயாகும். அவரவர்கள் வேலைத் திறமை, அளவே யொழிய, வேலைத் தொகுதி அளவல்ல. அதுவே நியாயமுமாகும். கடைக்குப்போய் வந்த மூத்த பிள்ளையும், வீட்டில் சிறு வேலை செய்த இளைய பிள்ளையும் தாயின் சம அன்பையே அடைவார்கள். மூத்த பிள்ளை இளைய பிள்ளை அளவே வேலை செய்வதாக முரண்டினால், வெறுப்புக்கும் பிறரின் நகைப்புக்கும் ஆளாவான். ஊதியம் பெறுவதும் அப்படியே. ஒரு பெரும் தீனிக்காரனுக்கும், இன்னொரு சிறு தீனிக்காரனுக்கும் ஒரே அளவு உணவளிப்பது சம உரிமை ஈந்ததாகாது. அவரவர்கள் வயிற்றுக்கேற்ப உண்ணச் சொல்வது தான் சம உரிமை கொடுத்ததாகும். பொதுவுடைமைக்கு எடுத்துக் காட்டாகச சொல்லக்கூடியபுகை வண்டித் தொடரில் இதைக் கண்கூடாகக் காணலாம். பருத்துக் கனத்த உடலுடைய ஒருவனும், மெலிந்து இலேசான உடலுடைய இன்னொருவனும் புகைவண்டியில் போகும் பொழுது, ஒரே கட்டணந்தான் செலுத்துகிறார்கள். முந்தியவனிடம் கூடிய கட்டணம் கேட்பதுமில்லை. பிந்தியவன் குறைந்த கட்டணம் கொடுத்தால் ஒப்புக் கொள்வதுமில்லை. ஒரே கட்டணம் கொடுத்து இருவரும் வண்டியில் ஏறிய பிறகு, மெலிந்தவன் உட்காருகிற அளவு இடத்திலேயே பருத்தவன் உடலைக் குறுக்கிக்கொண்டு உட்கார வேண்டுமென்றுவது, கனத்தவன் உட்காருகிற அளவு இடம் தனக்கும் உண்டென்றும் அதில் வேறொருவர் கைகால் நீட்டக் கூடாதென்றும், யாரும் சொல்லஉன்னுர்கள். சொன்னாலும் அதை யாரும் சிறுபொழுதும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். பொது உடமையில் இம்மாதிரியே அவரவர்களுக்கு வேண்டிய அளவு கொடுக்கப்படும். அவரவர்கள் உழைக்கக் கூடிய அளவு உழைக்கவேண்டும். அப்படி மக்கள் உழைப்பார்களா, உழைப்புக்குத் தக்க ஊதியம் இல்லையானால், உழைப்பதற்கு என்ன ஊக்கம் இருக்கிறது என்ற கேள்வி உடனே எழுகிறது. இளந்தளிர்க் காலத்துக்குயில் கூவுவதும் மாரிகாலத்து மயில் ஆடுவதும் உடல் நலம் பெற்றிருக்கும்பொழுது கால் நடைகள் ஓடுவதும் குதிப்பதும் மக்கள் பாடுவதும் ஆடுவதும் ஊதியத்தைக் கருதியல்ல. அச் செய்கைகள் உடலிலும்உள்ளத்திலுமுள்ளஎழுச்சியின் வெளிக் காட்டாகும். அவற்றை அடக்குவது முடியாததாகும். தாய் நாட்டிலும் வெளிநாட்டிலும் கணித வல்லுனர் எனப் பெயர் பெற்று இளமையில் உயிர் துறந்த ராமானுஜம் அப்படிப்பெயர் பெறும் முன் சென்னைப் பல் கலைக் கழகச் சோதனையில், பல முறை தவறி வயிற்றுக்கும் போதிய வரும்படி தாராத சிறு தொழில் செய்து வயிறு வளர்த்த காலத்திலும் தன் வயிற்றுத் தொழிலில் செலவிட்டு மீந்த நேரத்தில் வரும்படி தரும் வேறு தொழில் பாராமல் தனது கணித நுண்ணறிவை பெருக்கிக் காகிதத்தைஎண்களால் நிரப்பிக்கொண்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது.

(தொடரும்)

---

## நற்செய்தி.

நமது தோழர் உ. கந்தசாமி அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழர் லெட்சுமி அம்மாள் அவர்களுக்கு 16-3-34 வெள்ளிக்கிழமையன்று ஆண்மகவு பிரசவமாகி, தாயும் சேயும் சுகமாய்இருக்கும் விஷயம் நமது தோழர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்,

[நமது நிருபர்]

---

## சுயராஜ்யம் யாருக்கு?

(ஆசிரியர்:- தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல்)

சுயராஜ்யம் யாருக்கு என்ற புஸ்தகத்தின் மூன்றும் பாகம் அதாவது எது வேண்டும்? சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா? என்ற புஸ்தகம் அச்சாகி விட்டது. புஸ்தகம் வேண்டுமென்று ஏற்கனவே பணமும், ஸ்டாம்பும் அனுப்பியவர்களுக்கு, இவ்வாரத்திற்குள் புஸ்தகங்கள் அனுப்பப்படும். சொற்ப காப்பிகளே கைவசமிருப்பதால், புஸ்தகம் வேண்டுவோர் முந்திக்கொள்ள வேண்டும்.

சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா? என்ற புஸ்தகத்தில் அடங்கியுள்ள விஷயங்கள்:—

உலக முக்கிய பிரச்சினை, தேசியமும் மூட நம்பிக்கையும், சுயராஜ்யமும் தனி சொத்துரிமையும் சமதர்மலக்ஷயம், சமதர்மத்தில் குடும்பம், மதம், ஜாதி, தேசிய அரசுகள் இருக்கா, சமதர்ம ஆக்ஷிமுறை, ஜாதி மதம் ஒழிக்கும் வழி, தனிவுடமையின் கொடுமை, பொதுவுடமை விளக்கம், சமதர்மத்தில் பொருள்கள் விநியோகம் சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா?

இதன் விலை 0—3—0

கிடைக்குமிடம்:—

சமதர்மப் பிரசுராலயம்,
22, சவுத்பிச்ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

# தாழ்த்தப்பட்ட மக்கள்

## விடுதலையடைவது எப்பொழுது?

(ஈங்கூர் பி. மனுவேல்)

இந்நாட்டினில் பிறந்த எழு கோடி மக்களைத்தாழ்த்தி வைத்திருக்கும் பெருமை பெரிதும் உயர்ஜாதி இந்துக்களுக்கே உண்டாகும். இதை மறுப்பவர்கள் கிராமங்களில் (பட்டிக்காடுகளில்) வந்து குடியிருந்து கீழே சொல்லப்போகும் தொல்லைகளை அனுபவித்து சேரிகளில் குடியிருந்து பார்க்கட்டும். உண்மை விளங்கும்.

மக்களைத் தாழ்த்திவைப்பதும், உயர்த்திவைப்பதும், சேர்த்து வைப்பதும், பிரித்துவைப்பதும் சுயநலக்காரர்களின் சூழ்ச்சியே யல்லாமல் "ஊழ்வினையின் பயன் என்பதோ" "கடவுள் சித்தம்" என்பதோ ஒன்றும் ஒத்துக்கொள்ளக் கூடியதாகவில்லை. பல திறப்பட்ட மக்கள் வாழும் இந்நாட்டினில் ஒரு சிலரை வேண்டுமென்றே தாழ்த்திவைத்து; அவர்களுக்குக் குளிப்பு, துவைப்பு, குடியிருப்பு, ஊண் உடை, நடைபாவனை முதலிய எல்லாவித சவுகரியங்களும் கிடைக்கவொட்டாமல் தடுத்துவைத்து; அடி, உதை, வதை, சிதை முதலியவைகளால் துடிக்கவைத்து; அடிமை, கொடுமை, சிறுமை, வறுமை முதலியவைகளால் பதைக்கவைத்து; பேச்சு, வார்த்தை, திட்டு, வசவு முதலியவைகளைக் கேட்டுச்சகித்து இருக்கும்படியான அடக்குமுறைகளை அமுல் நடத்திய பெருமைகள் யாவும் பெரிதும் உயர்ஜாதி இந்துக்களையும் அவர்கள் மதம், கடவுள் முதலியவர்களையுமே சாரும்.

ஆதிதிராவிடர் முதலிய தாழ்த்தப்பட்ட மக்களின் பரிதாப நிலைமையைக்காதில் கேட்பதாலும், கண்ணில் பார்ப்பதாலும், பத்திரிகையில் படிப்பதாலுமே சுத்த இரத்தமும், சுயமரியாதையும், பகுத்தறிவுமுள்ள அறிஞர்கள் பரிதாபப்பட்டுப் பதறுகிறார்களென்றால்; அதிதீவிர சீர்திருத்தம் இம்மக்களுக்கு அவசியம் என்று கதறுகிறார்களென்றால்; மக்களை மக்களாகப் பாவிக்காத மதங்களும், மன்னர்களும், மனுமக்களும் "பகுத்தறிவின் உலகுக்கே" ஒரு சிறிதும் அருகதையாக மாட்டார்களென்னும் அதிர்வெடியை வெடிக்கிறார்களென்றால்; இப்பெரியோர்கள் யாவரும் உண்மையிலேயே ஊருக்கும்புறம்பே ஒதுக்கிவைக்கப் பட்டிருக்கும் சுகாதார வசதியற்ற நாற்றவாசனை நாலாப்பக்கங்களிலுமிருந்து வரும் சேரிகளில் பிறந்து, வளர்ந்து, குடியிருந்து, கட்டத்துணியும், குடிக்கக்கஞ்சியுமில்லாமல்; எழுந்தநாள் பொழுதெல்லாம் எஜமான்மார்களுக்குள் அடிமைப்பட்டுக் கொடுமைப்பட்டு "ஆம் என்றால் அடி" "இம் என்றால் இடி" "ஓடினால் உதை" "நின்றால் குத்து" இம்மாதிரியும் இன்னும் பல மாதிரியான அக்கிரம அகோர கஷ்ட நிஷ்டூரங்களை தம்பிள்ளை குட்டிகள் சகிதம் அனுபவித்து வந்தால் இவ்வறிவாளிப்பெரியோர்கள் வாயளவில், கையளவில், மேடையளவில் பதறிக் கதறிக் கொட்டிவிட்டு, "விடுதலை" நமக்குக் கிடைக்கிறபொழுது கிடைக்கட்டுமென்று காலத்தையும், நேரத்தையும் கடத்திக்கொண்டே, வேதாந்தம பேசிக்கொண்டே போவார்களா? அல்லது விடுதலை நமக்கு உடனே வேண்டும். அல்லது நாம் உங்களை (மதசமூகஅரசியல்உலகை) அடிஎடுத்துவைக்கவும் விடமாட்டோம் என்று வரிந்து கட்டிக்கொண்டு நிற்பார்களா? அல்லவா? என்றுதான் நாங்கள் கேட்பது.

தாழ்த்தப்பட்ட மக்கள் விடுதலைக்காக அறிவு, ஆற்றல் அநுபவம் முதிர்ந்த பெரியார்கள் யாவருவம் அரும் பெரும் போர்முனைந்து புரிந்து வந்திருக்கிறார்கள், வருகிறார்கள். அதற்காக நாங்கள் நன்றியுள்ளவர்களே. ஆனாலும் உண்மையான விடுதலை எப்பொழுது, கிடைக்குமோ வென்பதுதான் எங்கள் நாள்பட்ட கவலையாகும். தாழ்த்தப்பட்ட மக்கள் விடுதலை, முன்னேற்றம், சுதந்திரம் என்னும் சொற்கள் ஒருபுறம் (நகரங்களில்) முழங்குகின்றன. மறுபுறம் (பட்டிக்காடுகளில்) அடி, உதை, மிறட்டு, துறத்து என்னும் சொற்க்கள் "படீர்" "திடீர்" என்று வெடிக்கின்றன. இவ்வகோரவெடிகளை அல்லும் பகலும் அறுபது நாழிகையும் கேட்டு அவதிப்பட்டுக் கிடக்கும் மக்களுக்கு; பசியும், பட்டினியுமாகக் கிடக்கும் மக்களுக்கு; கிட்டவாராதே, தொடாதே, பார்க்காதே, கேட்காதே என்று சொல்லப்படும் மக்களுக்கு; வருஷம் முன்னூற்றறுபத்தைந்து நாட்களும் பண்ணைகளில் பெண்டுபிள்ளைகளுடன் குடும்பசகிதமாய் வெட்டி வேலைசெய்து, ஊற்றுகிற கஞ்சியைக்குடித்து, கொடுக்கிற தானியத்தைப்பெற்று "நாம் என்னசெய்வது எல்லாம் நமது தலைவிதி" என்று மெள்ளச்சொல்லி ஆறுதலடையும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விடுதலை என்பது (எம் மக்கள் அனுபவித்து வருகிற சகிக்கமுடியாத விபரிக்க முடியாத கஷ்டங்கள் நீங்கிச் சுகப்படுவது) எக்காலம் என்பதே! நாங்கள் ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் காலமாகும்.

தாழ்த்தப்பட்ட மக்களாகிய நாங்கள் வாடி, வதங்கி, ஒதுங்கி, பதுங்கி, கறுகிநிறம் குலைந்து; மறுகி மனம் கலைந்து, உருகி புலை அலைந்து, துன்பக்கடலில் வீழ்ந்து, துக்க சாகரத்தில் ஆழ்ந்து தலைமுறை தத்துவமாக செத்து மடிந்துகொண்டே வந்திருக்கிறோம்-வருகிறோம். இப்படித் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விடுதலை கொடாத இத்தேசத்திற்கு விடுதலை கிடைப்பதென்றால் அது இயற்கைக்கு மாறுபட்டதேயாகும். மனிதனை மனிதனுகப் பாவிக்காமல் நாயினும் கடையாக மதித்து, நடத்தி, அடக்கி, ஒடுக்கிக் கசக்கிச்சாராகப் பிழியும் இத்தேசத்திற்கு ஒருவேளை விடுதலை கிடைத்தாலும் அது மணலின்மீது கட்டின வீடுபோல் பெருவெள்ளம் (சமதர்மம்) வரும்பொழுது அடித்துக்கொண்டு போகப்படுமேயல்லாமல் ஒருநாளும் நிலைத்து நிற்கப் போவதில்லை. ஏனென்று கேட்டால் அதற்கு அஸ்திவாரம் பலமில்லை.

தேச விடுதலைக்காகச் சேவைசெய்யும் பெரியோர்களே! தேசியத்தலைவர்களே! வீரர்களே! மகான்களே! மகாத்மாக்களே! உங்கள் வேலைகள், கவலைகள் யாவையும் "முதலாவது தாழ்த்தப்பட்ட மக்களிடம் செலுத்துங்கள். அவர்கள் உரிமைகளை அவர்களடையும்படி செய்யுங்கள். அவர்களுக் கேற்பட்டிருக்குமிடையூறுகளனைத்தும் உங்களுக்கேற்பட்டதேபோல் கொள்ளுங்கள். உயர் ஜாதியினர்களாகிய உங்களால் எங்களுக்கிடப் பட்டிருக்கும் தடையுத்திரவுகளை யெல்லாம்ரத்துச்செய்யுங்கள்' அன்றுதானே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விடுதலை கிடைக்கும்."

"மனம் உண்டானால் இடமுண்டு"

---

## சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்.

ஷை மன்றத்தின் பொதுக்கூட்டம் ஒன்று 17-3-34 ந்தேதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு சென்னை கொண்டிதோப்பு சிவஞானம் பார்க்கில் தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் தோழர் கே. வி. அழகர்சாமி அவர்கள் "சுயமரியாதை" என்பது பற்றி பேசினர். இரவு 8 மணிக்குகூட்டம் முடிந்தது.

---

## தேவை.

பிராஞ்சு ஆபீஸ் இல்லாத ஊர்களில் பிராஞ்சு ஆபீஸ் ஏற்படுத்த தமிழ் தெரிந்தவர் மாதச்சம்பளம் ரூ. 20-ல் தேவை. டிப்பாஸிட் ரூ-25 கட்டுபவர் $1\frac{1}{4}$ அணு ஸ்டாம்புடன் மனுச்செய்யவும்.

ஜெகஜோதி பெனிபிட் ஸொஸைட்டி.
(தலைமைஆபீஸ்] தூத்துக்குடி.

---

## ரஷ்யப் பொதுவுடமைக் காரர்கள்.

—:O:—

ருஷியாவுக்கு வெளியில் இப்போது 8,60,000 பொதுவுடக்காரர்கள் இருந்து வருகின்றனர். சைத்தில் 4,16,000 பேரும், ஜெர்மனியில் 1,00,000 பேரும், ஜெக்கோஸ்லோவாக்கியாவில் 55,000 பேரும், பிரான்ஸில் 40,000 பேரும், போலத்தில் 30,000 பேரும், ஸ்பெயினில் 30,000 பேரும் பொதுவுடமைக்காரர்களாக இருந்து வருகின்றனர். சீனுவிலுள்ள பொதுவுடமைக் கட்சியினர் 7,00,000 சதுர கிலோமீட்டர் நிலப் பகுதியை ஆட்சிபுரிந்து வருகின்றனர். மேலும் ஆங்கு 3,50,000 ஆண்களுடைய சிவப்புப் படையொன்றினையும் 6,00,000 பேருடை நிரந்தரமாயில்லாத படையொன்றினையும் சீனப் பொதுவுடமைக்காரர்கள் ஏற்படுத்தி வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஜப்பானில் கடந்த 9 மாதங்களில் 8,000 பேர் பொதுவுடமைக்காரர்களெனக் கைது செய்யப்பட்டதனால், ஸோல்ஜர்களுக்குள்ளும், க[illegible] பற்படையினருக்குள்ளும், இந்தப்[illegible] சாரம் தீவிரமாய்ப் பரவி விட்[illegible] எனவே, ஜப்பானில் உற்சாகம்மி[illegible] பொதுவுடமைக் கட்சி தீவிரம[illegible] வேலை செய்துகொண்டு வருகிற[illegible] ஜெர்மனியிலும் இதர ஐரோப்[illegible] நாடுகளிலும் பொதுவுடமைக்கா[illegible] களைக் கைது செய்து சிறை வா[illegible] படுத்தியும் கொடுமைப் படுத்தி[illegible] அடக்குவதானது மேலும் இக்க[illegible] வலுப் படுவதின்றி, கட்சியில் தி[illegible] மான உறுதியும் திடமும் நம்பிக்[illegible] யும் உடையவர்களும் கட்சி[illegible] பற்றி அனுதாபங் கொள்பவர்க[illegible] நிறைந்து விடுகின்றனர் எ[illegible] மாஸ்கோவில் நடைபெற்ற க[illegible] ரல் மகாநாட்டில் டாக்டர் மானு[illegible] ஸ்கி என்பார் கூறினர். ஆ[illegible] இந்தியாவைப் பற்றி மட்டும் [illegible] குறிப்பிடவேயில்லை.

---

[6-ம் பக்கத்தொடர்ச்சி]

த்துறந்தி, காந்தி பகவானை [illegible] செய்திருக்கிறார்கள். இன்னும் [illegible] ப்போல் அனேக சாமிகளுக்கு [illegible] வாறு காந்தியை ஆக்கி[illegible] டார்கள். இதினின்று என்ன[illegible] றது, என்பதை வாசகர்களே [illegible] ப்பார்களாக.

எனவே காந்தியார் வரு[illegible] நூற்றாண்டிற்குள் மாபெரும் இ[illegible] கடவுள்களிலே இவரும்ஒரு க[illegible] கடவுளாக விளங்குவார் [illegible] என்ன சந்தேகமிருக்கிறது[illegible]

தோழர்களே! [illegible] அவ்வறிவை பகுத்தறிந்து [illegible] சொல்வதைஆராய்ந்தறிந்து [illegible] எதுவென அறிகிறோமோ, அ[illegible] நடக்க முன்வருவோமாக.

# ருஷியச் செய்திகள்.

நிலம் வைத்துக்கொள்வது சம்பந்தமாக சோவியத் சர்க்கார் சில சட்டங்களை இயற்றியுள்ளார்கள். அச்சட்டத்தின் கீழ் ஒவ்வொருவரும் இவ்வளவு தான் நிலம் வைத்துக்கொள்ளலாமென்று திட்டம் செய்யப்பட்டிருக்கின்றது. இந்த குறிப்பிட்ட அளவு நிலம் குடும்பத்தின் விஸ்தாரத்திற்குத் தகுந்தபடி அதிகரிக்கப்படலாம். ஆனால் எவனாவது ஒருவன் தொழில் செய்யாது (ணக்காரனை வாழ நினைப்பானானால் அவனை இந்த சட்டம் பாதியாது. அதாவது அவனுக்கு நிலத்தைச்சொந்தமாக வைத்துக் கொள்ள உரிமையில்லை.

கிருஷிகர்களை தொகை தொகையாகச் சேர்க்கும் இயக்கமொன்று தலையெடுத்துள்ளது. இவ்வியக்கத்தின் கீழ் பலதொழிலாளர் (விவசாய) குடும்பங்கள் ஒன்றுயிணைகின்றன. அத்தகைய கூட்டுக் கிருஷி முறைக்கு சோவியத் பாஷையில் சோல்கோஸ் என்று பெயர். இவ்வாறு ஓர் கோல்கோஸில் எத்தனை பேர்கள் எவ்வளவு நாள் சேர்ந்திருக்கின்றார்களோ அத்தனை பேர்க்கும் அவ்வளவு நாளும் அக் கூட்டு நிலத்திற்குச்சொந்தமான பூமி மிருகங்கள், இதர உடமைகள் எல்லாம் சொந்தமானவைகள்.

## மேஷின் டிராக்டர் விருத்தி.

மேற்சொன்ன கூட்டுக் கிருஷி முறைக்கு வேண்டிய மெஷின்கள், டிராக்டர்கள் (அறுவடை செய்வதற்கும், உழுவதற்கும் செப்பனிடுவதற்குமான இயந்திரங்கள்) முதலியவற்றை அமைப்பதற்கான வசதிகளை சர்க்கார் செய்து உதவுகின்றார்கள்.

அறுவடையான பின் கோல்கோஸ்கள் விளைவில் ஒருசத விகிதத்தை அரசாங்கத்திற்கு வரியாக செலுத்துகின்றன. அரசாங்கத்தார் அதிலிருந்து ஒரு பகுதியை இயந்திர விடுதிகள் உதவி செய்திருந்தால் அவற்றிற்குக் கொடுக்கிறார்கள். மீதமிருக்கும் பணத்திலிருந்து அடுத்த பயிருக்கு வேண்டிய விதைகட்காகக் கொஞ்சம் ஒதுக்கி வைக்கிறார்கள். மற்றொரு பகுதி கூட்டுக் கிருஷி கழகத்தில் நோயுற்றிருப்பவர்களின் போஷணைக்காக இன்ஷூர் நிதியில் போட்டு வைக்கிறார்கள். எஞ்சியதை அதே கழகத்தில் வேலை செய்த பிறருக்கு வேலை நாட்களுக்கொத்த வண்ணம் பகுந்து கொடுக்கிறார்கள். இவ்வாறுசெய்யும்எந்தவிஷயத்திலும் ஒவ்வொரு குடும்பத்தினுடையவும் ஆள் எண்ணிக்கை கருதப்படுகிறது.

இப்போது சோவியத் ருஷ்யா முழுதும் சேர்ந்து லட்சம் கோல்கோசுகளிருக்கின்றன. அதாவது தொழிலாளர் ஜனத்தொகையில் 65 சத விகிதம் பேர் கூட்டுக்கிருஷி முறையிலீடுபட்டிருக்கின்றனர். நாளடைவில் இயந்திர நிலையங்களை (உழுபடை நிலையங்களை) தொகையில் அதிகரிக்க அதிகரிக்க கோல்கோஸ்களின் வருமானமும் அதிகரிக்கும். 1920ல் இவ்வித கோல்கோஸ்கள் தொடங்கப்பட்டபோது உழவர்களில் பெரும்பாலார் வெறுப்புகொண்டு கூட்டுறவு என்றால் நஞ்சாகக் கருதினார்கள்; இப்போது பெரிதும் அம் முறையை தழுவுகின்றனர். கோல்கோஸ்களின் சராசரித் தொகை 1931ல் 93 ஆக விருந்தது. 1933ல் 286 ஆகப் பெருகியிருக்கிறது. இதன் பொருள் அந்த ஸ்தாபனங்களுடைய வருமானம் தினேதினேபெருகின்றதென்பதாம். இந்த வருடம் ஒவ்வொரு கூட்டுக் கிருஷி உழவனும் 1000 முதல் 2500 ராத்தல் வரையிலும் தானியத்தைப் பெற்றிருக்கிறான். அதோடு 1000 முதல் 3000 வரை ரூபில்களும் (ருஷிய நாணயம்) சம்பாதித்திருக்கிறான். ஒரு விவசாயின் வருமானம் அவன் பயிர் செய்யும் நிலத்தினுடையவும்-கிருஷி செய்யும் தகுதிக் கொத்த வண்ணமும், இயந்திர வசதிகட் கேற்றவண்ணமும் அமைகின்றது.

## சர்க்கார் வயல்கள்.

மற்றொரு வித பயிர் முறை கோல்கோசஸ்களால் அமைவதாகும. கோல் கோஸ் என்றால் சர்க்கார் நிலங்கள் என்பது பொருள். இந் நிலங்கள் பழைய சர்க்காருக்குச் சொந்தமானவைகளும் தேவாலயங்கள், பிரபுக்கள் முதலியோருக்கு சொந்தமானவைகளுமாகும். இவற்றில் பெரும்பாலானவை பயிர் செய்யப்படாமலே இருந்தன. இப்போது இத்தகைய சர்க்கார் நிலங்கள் தேசம் முழுதும் 550 இடங்களிலிருக்கின்றன. அவற்றின் மொத்த அளவு 2லட்சம் ஹெக்டர்களிருக்கலாம்

இந்த நிலங்கள் சாதாரணமாக தானிய சாலைகள் என்று அழைக்கப்படுகின்றன. அவற்றில் மிக நவீனமான உழுபடைகள் எல்லாம் அமைந்திருக்கின்றன. அதோடு அவற்றிற்குச் சொந்தமான டிராக்டர்கள் (இயந்திரக் கலப்பை) அறுவடை மிஷீன் முதலியனவும் முண்டு. இந்த தானிய சாலைகளின் செலவு முழுதும் சர்க்காராலேயே ஏற்றுக்கொள்ளப்படுகிறது. சர்க்காரே மேற்பார்த்துக் கொள்ளவும் செய்கின்றனர். இவற்றில் வேலை பார்ப்பவர்கட்குப் பணமாகவோ விளை பொருளாகவோ சம்பளம் கொடுக்கப்படுகிறது.

1932ம் வருஷத்தில் சோவியத் ஐக்கிய ஆட்சியில் மொத்தம் 2446 இயந்திர நிலையங்கள் (உழுபடை சாலைகள்) இருந்தன. அவை புதுப் புது இயந்திரங்கள் தருவிக்கப்படுவதற்குத் தகுந்த வண்ணம தொகையில் அதிகரிக்கப்படுகின்றன. போன வருடத்தில் இயந்திரங்களின் தொகை 4லட்சத்து 15 ஆயிரமாக பெருகியிருக்கிறது. ஆகவே இவ்வருடம் 4நிலையங்கள் அதிகப்படியாகச் சேர்ந்தன. இவை 1937ம் வருஷத்தில் 6000 ஆகப் பெருகுமென்று யூகிக்கப்படுகிறது.

## விளைவில் அபிவிருத்தி

மேற் குறித்தவாறு பயிர்முறை நவீனப் படுவதால் விளைவு அதிகரித்துக் கொண்டே வருகிறது. யுத்தத்திற்கு முன்பு அதாவது 1913ம் வருடத்தில் ருஷியாவில் மொத்தம் விளைந்ததானியம்80கோடி 1லட்சம் செண்ட்னர்கள். இது 1927ல் 82 கோடி 30 லட்சமாக அதிகரித்து. 1930ல் 83கோடி 50 லட்சமாயிற்று. 1933 லோ 89 கோடி 69 லட்சத்தை எட்டிற்று.

## விவசாய அபிவிருத்தி.

ருஷியா சோவியத் ஆட்சியை அடையு முன்பு அதாவது 1913ம் வருஷத்தில் பயிர் செய்யப்பட்ட நிலத்தின் அளவு 9கோடி 40 லட்சம் ஹெக்டர்கள் 1930ல் பயிரானவிடத்தின் விஸ்தீரணம் 10 கோடி 18 லட்சம் ஹெக்டர்கள். 1934 ஆகிய இவ்வருடம் 13கோடி 1லட்சம் ஹெக்டர்களாகப் பெருகுமென்று தெரிகிறது.

1933ல் 3 கோடி 32 லட்சம் ஹெக்டர்களில் பயிர் செய்யப்பட்டது. இதில் இதேபோல் பருத்தி விளைவிலும் அதிகரிக்கக் காணப்படுகிறது 1932ல் 2கோடி 37 லட்சம் புட்ஸ் (ஒரு ராத்தல் 40 புட்ஸ்) பயிராகி வந்தது. 1933ல் கிடைத்த மொத்த பருத்தி 25 கோடி 50 லட்சம் புட்ஸுகள்.

## விவசாயத்திற்கு விமானம்.

ரஷியாவில் விவசாயத்திற்கு விமானங்களையே ஏராளமாக உபயோகித்து வருகிறார்கள். வயல்களில் கோதுமைகளை விதைப்பதற்கு விமானங்களை உபயோகிக்கின்றனர். இதனால் அதிக விஸ்தீரண முள்ள பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை வெகு துரிதத்தில் விதைத்து விட முடிகிறது. இத்துடன் அந்த வயல்களிலுள்ள பூச்சி புழுக்களையும், பயிர்களை நாசஞ்செய்யும் வெட்டுக் கிளிகளை அளிப்பதற்கும் பொதுவாக விமானங்களையே உபயோகித்து வருகிறார்கள். ருஷியாவில் இப்பொழுது பல ஆயிரக்கணக்கான ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலங்களைப் புதிதாக சாகுபடி செய்கிறார்கள். இன்னும் சொற்பகாலத்தில் அதாவது 1934-ம் வருடத்திற்குள் தற்போது சாகுபடி செய்து வரும் நிலங்களைப்போல 7மடங்கு அதிக விஸ்தீரணமுள்ள நிலங்களை சீர்திருத்தஞ் செய்து சாகுபடி செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள். இதனால் ரஷியாவில் இனி மேல் அதிகமான விமானங்களை விவசாயத்திற்கு உபயோகிப்பார்களெனத்தெரிகிறது.

## விண்ணை அளக்கும் முயற்சி

இதற்குமுன் 3 ருஷியர்கள் பலூனில் ஏறி 12-80 மைல் உயரச்சென்று இறங்கி வருகையில்மரணமடைந்த செய்தி வாசகர்கள் அறிவார்கள். தற்போது ஆகாயவிமான இலாக்காத்தலைவர் புரொபெஸர் மால்கானவ், இந்த மாதமுடிவிற்குள் இன்னமொருபலூன் தையாரித்து, அதில் இயந்திர மூளையை அமைத்து விண்ணை அளந்து அவ்வகண்டாகாரத்தை ஆராய்ச்சி புரிய முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார். இந்த புதிய பலூன் தானாகவே இயங்கக்கூடியதாய் மனித உதவியின்றி மேலே பறக்குமாம். இதனைபரீட்சைசெய்து பார்த்ததில் 12 மைலுக்கு அப்பால் சென்றவுடன் அங்குள்ள நிலைமையை ரேடியோ சமிக்ஞைகள் மூலம் தெரிவித்ததாம்.

ஃ ஃ

ரஷியாவில் சோவியத் பிரசாரஞ் செய்ய ஒரு பெரிய விமானமொன்றைச செய்திருக்கிறார்கள். ஆகாயத்தில் பறந்து செல்லும்போதே ஏராளமான துண்டுப்பிரசுரங்களை அந்த விமானத்தின் மூலம் வழங்கி வருகிறார்கள். அதே விமானத்திலேயே துண்டுப்பிரசுரங்களை அச்சடிக்க ஒரு சிறு அச்சுக்கூடமுமிருக்கிறது. ஆகாயத்திலிருந்தபடியே பேசுவதற்கு ரேடியோ டெலிபோன்கள ஏற்பாடு செய்திருக்கிறார்கள். விமானத்திலேயே சோவியத் கட்சி பிரசாரத்திற்கான சினிமா ஒன்றும் தயாராக இருந்து கொண்டிருக்கிறது.

---

# இந்தியா முழுதும் விதவா விவாகங்கள்.

## ஒரு மாதத்தில் 527 விவாகம்

1933 டிசம்பரில் லாகூர் விதவா விவாக சகாய சபாவின் கிளைகள் பலவற்றிலுமாக 527 விதவைகளின் கல்யாணம்நடைபெற்றிருக்கின்றன. 1933 ஜனவரி 1-ந் தேதி முதல் டிசம்பர் 3-ந் தேதிவரையிலும் நடைபெற்ற மொத்தவிதவைகளின் கல்யாணம் அவற்றின் விவரமாவது:—

ஜாதிவாரியாக

| | |
|---|---|
| பிராமணர் | 666 |
| காத்ரீ | 657 |
| அகர்வால் | 670 |
| அரோரு | 698 |
| கெய்விீத் | 540 |
| ராஜபுத்திரர் | 403 |
| சீக்கியர் | 501 |
| வேறுபல ஜாதிகள் | 527 |

மாகாண வாரியாக

| | |
|---|---|
| பஞ்சாப், வடமேற்கு எல்லைப்புரம் டில்லி, சிந்து ஆகியவற்றில் | 2353 |
| ஐக்கிய மாகாணங்கள் | 928 |
| மத்திய மாகாணங்கள் | 423 |
| வங்காளம் | 825 |

பீஹார், ஒரிஸா, ஆஸாம் ஆகியவற்றில 163, பம்பாய் 175, ராஜபுதனம் 302, சென்னை 43.

# மதம் மனிதனுக்கு அவசியமா?

## ஒரு சம்பாஷணை.

(சென்னை தோழர் கே. எஸ். நாதன் 'மிதவாதி'யிலிருந்து மொழிபெயர்த்தது)

மதநம்பிக்கையாளன்:—மனிதனின்றும் மத நம்பிக்கையை ஒழிப்பதினால் என்ன பயன் ஏற்படப்போகின்றது? மத நம்பிக்கை புறக்கணித்த சமூகத்தினர்களையும், பாமர மக்களையும் சன்மார்க்க ஒழுக்கத்திலீடுபடச் செய்யாதா?

மத நம்பிக்கையற்றவன்:— தங்களுடைய அபிப்பிராயம் சரியானதாகத் தோன்றவில்லை. உலகில் இன்று ஏற்பட்டிருக்கும் சகல சண்டை சச்சரவுகளுக்கும், குழப்பங்களுக்கும் மதமே காரண கர்த்தாவாக இருக்கின்றது. உலக சரிதத்தை ஊன்றி படிப்பின் மதத்தின் பெயரால் அனேக இரத்த ஆறுகள் பெருகியிருப்பதை காண்கிறோம். தற்போது அனுஷ்டானத்திலிருக்கும் ஜாதி வித்தியாசமும், அனுசார மூட நம்பிக்கைகளும் மதத்தினின்றே தோன்றினவைகளாகும். இதைமதங்களே காப்பாற்றிக்கொண்டு வருகின்றன. எல்லா மதப் புரோகிதர்களும் எளிய மக்களை ஏமாற்றி, இரத்த வியர்வை விட்டு உழைத்து சம்பாதிக்கும் சிறு பொருளை கவர்ந்துக்கொள்ளுவது பிரசித்தி பெற்ற விஷயமாகும் இப்படி மக்களுக்கு தீமை விளைவிக்கும மதத்தை அழிப்பது ஒரு பெரும் உபகாரமாகும். சன்மார்க்கத்தில் மனிதனை ஈடுபடச் செய்வது மதமல்ல. ஆனால் பகுத்தறிவு தன்மையினால் ஆராய்ந்து நடப்பதாகும்.

நம்பிக்கையாளன்:— சத்தியத்துடனும், வெகு மதியுடனும், இன்பத்துடனும் ஜீவிதத்தை நடத்த வேண்டுமானால் ஒருவனுக்கு மதம் அவசியமில்லையா?

நம்பிக்கையற்றவன்: — ஒருக்காலுமில்லை. சத்தியமாகவும், மரியாதையுடனும் ஜீவிப்பதற்கு மத நம்பிக்கை அவசியமில்லை. அதற்கு ஒவ்வொருவனுடைய அறிவையும் சரியான முறையில் நடத்தினால் போதும். உலகப் பிரசித்தி பெற்ற சார்லஸ் பிராட்லா, இங்கர்சால், ஹக்ஸிலி, டார்வின் போன்றோர் மிக பிரசித்தியுடன், பொதுஜனங்களின் நன்மதிப்பை பெற்று உண்மையுடனேயே வாழ்ந்து வந்தனர்.

நம்பிக்கையாளன்:— வேத புத்தகங்களிலும், பைபிலிலும், குரானிலும் நம்பிக்கை கொள்வது மனிதனை சன்மார்க்கத்திலீடுபடச் செய்யும் என்பதை தாங்கள் மறுக்கின்றீரா?

நம்பிக்கையற்றவன்:— தங்களுடைய அபிப்பிராயம் அப்படியானால் இன்று உலகில் நடக்கும் பெருத்த கொடூர கொலைகளுக்கும், களவுகளுக்கும், காரணமென்ன? வேதத்தையும், பகவத்கீதையையும், குரானையும் பைபிலையும் சதா ஒப்பித்து உருப்போட்டுக்கொண்டு பிறர் சமூகத்தில் கத்தியை வைக்கின்றவர்களை தாங்கள் என்னென்றழைக்கின்றீர்?

நம்பிக்கையாளன்:— அது மிகக் குறைவாகும். பொதுவாக மதநூற்களிலுள்ள தத்துவங்களை மக்களுக்கு நன்மை பயப்பதாகும்.

நம்பிக்கையற்றவன்:— தாங்கள் கூறுவது சரியல்ல. சன்மார்க்கத்தை போதிக்கின்ற நம்பிக்கை மனிதனுக்கு இருக்கிறதென்றால் அது உலகில் பொதுவாக நன்மை பயக்க வேண்டியது தான். ஆனால் தற்போது நம் நாட்டில் எல்லா திருடர்களும், கொலையாளிகளும், அக்கிரமக்காரர்களும் கொடுங்கோன்மையாளர்களும் மதத்தில் நம்பிக்கை உடையவர்களாகவே காணப்படுகின்றனர்.

நம்பிக்கையாளன்:— தங்களுக்கு மத நம்பிக்கையோடு உலகிற்கு செய்யும் நன்மை, மத நம்பிக்கையில்லாமல் செய்வதைவிட பதின் மடங்கு அதிகரித்ததாகும் என்பது தான் எமது அபிப்பிராயம். மத நம்பிக்கை இல்லாதவன் எனக் கூறுமாயின் தங்களை யாரும் அனுகூலிக்கவோ, அல்லது தங்களுடைய அபிப்பிராயங்களை எவரும் கௌரவிக்கவோ மாட்டார்கள்.

நம்பிக்கையற்றவன்:— பொதுஜன அபிபபிராயத்திற்காக எமது மனதிற்கு எதிராக, எமது அறிவிற்கு பொருந்தாத எக் காரியத்தையும் செய்ய துணியவே மாட்டேன். பொதுஜன பெரு வெள்ளத்தில்ஒழுக நான் என்னை அனுமதிக்கவில்லை. எமக்கு சரியான தென்றும், நியாயமான தென்றும் தோன்றுவதை நான் செய்வேன். அதை பிறருக்கும்கூறுவேன். அது அநீதியென பிறர் கூறின் அதை பகுத்தறிவால் ஆராய்ந்து ஒப்புக்கொள்ள ஒருக்காலும் பின் வாங்கமாட்டேன்.

நம்பிக்கையாளன்:— தாங்கள் ஒரு மத நம்பிக்கை இழந்தவனெனக் கூறி மற்ற பொதுக்காரியங்களில் ஈடுபடினும் மக்கள் அதை ஆதரிக்கமாட்டார்கள்.

மத நம்பிக்கையற்றவன்:— இது ஒரு பெருந்தவறு பொது நன்மை பயக்கின்ற எல்லா காரியங்களுக்கும் எல்லா மத நம்பிக்கையாளர்களும் மத நம்பிக்கை இழந்தவர்களும் ஒன்று சேர்ந்து பிரயாசைப்படுவதில் என்ன தவறு. மகம்மதியர்களும், இந்துக்களும் பீகார் பூகம்பத்திற்காக பணத்தை சேகரிக்கக் கூடாதா? மது ஒழிப்பைக் குறித்து பிரசங்கிக்கக் கூடாதா?

நம்பிக்கையாளன்:— ஆமாம்! தங்களுக்கு மத நம்பிக்கை இல்லையே!

நம்பிக்கையற்றவன்:— மத பாகுபாடுகளை முன் நிறுத்தி மண்டையை உடைத்துக்கொள்ளும் கொடிய மதம் எனக்கு வேண்டவே வேண்டாம்.

நம்பிக்கையாளன்:— மதம் அவசியமில்லாதவர்களுக்கு தாங்கள் வேறு எதை அளிக்கின்றீர்

நம்பிக்கையற்றவன்:— மனித வாழ்க்கையில் அனுசாரங்களுடனும், மூட நம்பிக்கைகளுடனும் பகிரங்க போர் தொடுத்து ஜெயிப்பதற்குரிய "பகுத்தறிவு."

---

## ஈரோடு தாலூகா ஹரிஜனக்கமிட்டியும், ஒரு பார்ப்பனக் குட்டிச்சாத்தான் வேலையும்.

மார்ச்சுமாதம் 1-ம் தேதி தோழர் எம். ஏ. ஈஸ்வரர் விடுதலையாகி ஈரோட்டிற்கு வந்தவுடன், ஈரோடு ஹரிஜன மகாநாட்டைப் பற்றி தோழர் கிருத்திவாஸன் கையாளாகிய, வேலுசாமி. தோழர் ஆர். சி. காவேரி அவர்களுடன் ஈஸ்வரரிடத்தில் "பழைய கமிட்டியில், தோழர் கேசவலால் தான் சர்வாதிகாரி" என்று போட்டுக்கொண்டு சரியாக வேலை செய்யவில்லை என்றும், சரியான ஒரு கமிட்டி இந்த மகாநாட்டில் ஏற்படுத்தி வேலை செய்வதற்காகத்தான் இந்த மகாநாடு கூட்டப்பட்டிருக்கிறது என்று சொன்னார்.

மார்ச்சுமாதம் 4-ம் தேதி இவ்வூரில் ஈரோடு தாலூகா ஹரிஜன மகாநாடு ஒன்று நடந்து அதில், இந்தத் தாலூகாவில் வேலைசெய்ய, தோழர்கள். எம். ஏ. ஈஸ்வரர் தலைவராகவும், தோழர்கள் ஆர். சி காவேரி கே. எம். மருடபதி, காரியதரிசிகளாகவும், தோழர்கள் கேசவலால் காளிதாஸ், ராமலிங்கம், வட்டக்கல்வலசு எஸ். என். பி. சுப்பராயன் ஜில்லா போர்டு அங்கத்தினர், ஈரோடு தாலூகா போர்டு அங்கத்தினர் கருப்பன், அப்பிச்சிமார்மடம் பூசாரி, எம். ஏ. ஆண்டமுத்துக் கவுண்டர், ஈரோடு தாலூகா போர்டு அக்கிராசனர், விருமாண்டம்பாளையம் ராஜாக் கவுண்டர் ஆகியவர்கள் அங்கத்தினர்களாகச் சேர்க்கப்பட்டு ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. மார்ச்சு மாதம் 4-ம் தேதி மகாநாட்டன்று தோழர் ஏ. ஈஸ்வரரும், ஆர். சி. காவேரி, கேசவலால் அவர்களைக் கலந்தபிறகு தான் கமிட்டி ஏற்படுத்தப் பட்டது.

பழைய கமிட்டியில் தோழர் கேசவலால், கிருதிவாஸ் பார்பனரை கவனிக்கவில்லை என்றதற்காகப்புதியகமிட்டி ஏற்படுத்தி அதில்தான் ஆதிக்கம் பெறவேண்டும் என்பதற்காகத்தான் பழைய கமிட்டி ஒன்றிருக்க புதிய கமிட்டி ஏற்படுத்த கிருதிவாஸ் பார்பனர் சூழ்ச்சி செய்தார். புதிய கமிட்டி ஏற்படுத்தினவுடன், அதிலும் தனக்கு ஆதிக்கம் இல்லை என்று தெரிந்தவுடன் அந்தப் புதிய கமிட்டி நியாயமற்ற தென்றும், ஒழுங்கற்ற தென்றும், புதியகமிட்டி ஏற்படுத்தினதானது பழைய கமிட்டியாரை அவமானப்படுத்தின மாதிரி ஆகிறதென சொல்லி, இம்மாதம் 16-ம் தேதி வட்டக்கல்வலசில், பழையகமிட்டி என்று ஒரு கமிட்டி கூட்டி, அதில் தன்னை ஒருஅங்கத்தினராகசேர்த்துக் கொள்ள மேற்சொன்ன காரணங்களைச்சொல்லி ஏற்பாடு செய்துகொண்டு, அந்தக்கமிட்டியில் தோழர் ஆர். சி. காவேரி, தோழர் எம். ஏ. ஈஸ்வரர், சேரப்பிரியமிருந்தால் சேர்த்துக்கொள்வதென்று தானே ஒரு தீர்மானம் தயார் செய்து நிறைவேற்றியிருக்கிறார். ஊரை இரண்டாக்குவதில் வெற்றி பெற்றுவிட்டார். இது தான் ஹரிஜனவேலை. ஒரு பார்ப்பனர் தான் ஆதிக்கம் பெறவேண்டுவதற்காகச்செய்த சூழ்சியைத்தவிர வேறென்ன? மகாநாட்டன்று பழைய கமிட்டியும், புதிய கமிட்டியும் மெம்பர்களும் சேர்ந்து வேலைசெய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் தான் ஒரு கமிட்டி மகாநாட்டன்று ஏற்படுத்தப்பட்டது. இந்த கிருதிவாஸ் பார்ப்பனருக்குக் கமிட்டியில் ஆதிக்கம் இல்லை என்றதற்காக தான் சூழ்ச்சிசெய்து கலகத்தை உண்டாக்கியிருக்கிறார் இன்னும் என்ன ஆகிறதென்று பார்ப்போம்.

(ஒரு நிருபர்)

---

## சேலம் ஜில்லா சுயமரியாதைச்சங்க அமைப்பு.

டவுன், தாலூகா, கிராமங்களில் உள்ள சுயமரியாதை சமதர்ம சங்கங்களுக்கு தலைமை சங்கமாக சேலம் ஜில்லா சங்கமொன்று அமைத்து, இயக்க முன்னேற்ற வேலைகளும் கட்டுப்பாடான பிரசாரமும் செயய விரைவில் சேலத்தில் ஒரு கூட்டம் நடைபெறும். ஜில்லாவிலுள்ள எல்லாச்சுயமரியாதைத் தோழர்களும் ஒவ்வொரு கிளைச்சங்கத்திலிருந்து பிரதிநிதிகளும் வந்து ஜில்லா சங்கத்தை அமைப்பதற்கு உதவியாய் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

ஆர். நடேசன்.

ஏ. எம். பாலசாமி.

அமைப்பாளர்கள்.

[3-ம்பக்கத்தொடர்ச்சி]

ருந்து புதிய மெஷின்கள் மூலம் விவசாயம் செய்யத் தூண்ட பல விதமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்த கூட்டுறவு விவசாயம் மூன்று முறையாக பிரிக்கக்கூடும். முதலாவது [Kolhozi] கோலாஸி அல்லது கூட்டுறவு முறை. இம்முறையில் கிராமவாசிகள் ஒன்று சேர்ந்து மெஷின்களை வாங்கி சேர்ந்தார்போல் விவசாயம் செய்து பின்பு பிரித்துக்கொள்ளுதல். இரண்டாவது [Sovohzi] சோவேஸி முறையில் கவர்ன்மெண்டு விவசாயிகளுக்கு சம்பளம் கொடுத்து விவசாயப் பண்ணை போல் நடத்துவது. மூன்றாவது முறையில் கிராமவாசிகள் சேர்ந்து மெஷின் ஸ்டேஷனுக்கு கூலி கொடுத்து உழச்சொல்லுவது மட்டும்தான்.

1928ல் இந்த பல கூட்டுறவு முறைகளில் 100க்கு சுமார் 3 பாகமே உழப்பட்டது. 1932ல் 100க்கு 68 பாகம் உழப்பட்டது. சோவோஸி முறையில் உழப்பட்ட பிரதேசம் 1928ல் 4,684,500 ஏக்கர்களாயிருந்தது. 1932ல் 36,450,000 ஏக்கர்கள் 1928ல் விவசாயததில் 26,733 ட்ராக்டர்கள்தான் உபயோகப்படுத்தப்பட்டன. 1932ல 148,480 ட்ராக்டர்கள் உபயோகப்படுத்தப்பட்டன.

மற்ற தேசங்களில் பொருளாதார சுணக்கம் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில் ருஷ்யாவில் விரைவாக உற்பத்தி அதிகரித்தது. தவிரவும் இச்சாமான்களெல்லாம் உபயோகிக்கப்படுத்தப்பட்டன. சாமான்கள் அட்டவணைப்படி செய்யப்பட்டதால் அவை வந்தவுடன் உபயோகப்படுத்தவோ, ஏற்றுமதி செய்யவோ, அல்லது சேர்த்துவைக்கப்பட்டு புதிய சாமான்கள் உற்பத்தி செய்யவோ தவக்கமில்லாமல் உபயோகப்பட்டன.

பால்வின்டர்டன்ருஷ்யாதான் பிரயத்தனப்பட்ட காரியத்தைச் சாதித்து விட்டதென்று கருதுகிருர். இரண்டாவது ஐந்து வருட அட்டவணையைப்பற்றித் தற்பொழுது ஒன்றும் கூற முடியாதென்றும், பொது ஜனங்கள் குதூகலமாக இருக்கிருர்களென்றும் நம்புகிருர்.

---

(5- பக்கத் தொடர்ச்சி.)

யோர் பாதாள லபியில் கிடந்துழலுவதைக் கண்டு கடவுள் ஆனந்திப்பதால் கடவுளுக்கு என்ன லாபம்? அவருடைய சிருஷ்டி விநோதம் மனிதனுல் கண்டு பிடிக்க இயலவில்லை என்ருல் மனிதனது அறிவுக்கெட்டாமல் புதைந்துகிடக்கும் கடவுள் ரகசியங்களினுல் மனிதனுக்கு ஆகவேண்டியதுதான் என்ன? மனிதனது பகுத்தறிவின் ஜோதிக்குப் புலப்படாமல் அந்தகாரத்தில் வெளிவராமல் நின்றிருக்கும் கடவுளைப்பற்றித்தான் நாம் ஏன் கவலைகொள்ளவேண்டும்?

இறுதியாக ஏழை படும்பாடு, அவன் அநுபவிக்கும் துயர் மனிதனது மனதை உருகச் செய்கிறது. முதலாளியின் கொடுமையினுலும், அவனது நிழலில் தங்கி நின்று உலகத்தை அவன் பொருட்டு "நீதி, ஒழுககம்" என்னும் ஜாலமந்திரத்தால் மயக்கும் படித்த கூட்டத்தாரின் சூழ்ச்சியினுலும் மனிதனின் மனம் மறுபடியும் இறுகிவிடுகிறது. ஏழை அநாதையாகிருன். அவன் முன் நிற்கும் பெரிய கோட்டை சுவர் இடிந்து வீழ்ந்து, பெரிய உலகை அவன் என்று கடாட்சித்து அவனது உண்மைப் பகுத்தறிவின் கண் திறக்கிறதோ, அன்று உலகில் துன்பங் கலவாத தனி இன்பம நிலவும். முதலாளி என்னும் பக்தி தொழிலாளியின் உள்ளத்தைவிட்டு அகன்று, தனது மேலான உழைப்பால் முதலாளியின் சுகம் பெருக்கெடுத்தோடுகிறது என்ற உண்மைத் தத்துவமறந்து தன் நிலையை என்று தொழிலாளி உணருகிருனே அன்று உலகம் சமதர்மம் உற்றுப் பெருக்கெடுத்தோடும்! முதலாளியும் தன் அடிமைப்பட்ட துயர் இனிப் போதும் என்று தனது கருணைக் கண்ணைத் திறந்து, தான் அதுவரை சாய்ந்திருந்த பொற்பீடத்தைக் காலால் உதறித் தள்ளி தொழிலாளி ஏதேனும் ஒரு சகாவாகச் சேர்ந்து உழைப்பில் பங்கெடுத்து என்று தோழமை ஸ்தானம் பெறுகிருனே அன்றே இவ்வுலகம் சமதர்ம நிலவிலே ஜொலித்து பிரபல்லியமாய்ப் பிரகாசிக்கும்!

---

## திருச்சியில் சமதர்ம ஓட்டல்.

### 300 பங்குகள்.

### 150-பங்குகள் சேர்ந்துவிட்டன.

திருச்சி ஸ்ரீரங்கம் சமதர்மத் தோழர்களின் பெரு விருப்பத்திற்கிணங்க திருச்சி டவுனில் குறைந்த செலவில் உணவு கிடைக்குமாறு நவீன முறையில் ஓர் சமதர்ம உண்டிச்சாலை ஸ்தாபிக்கத் தீவிரமான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அதன் நிர்வாகத்திற்குப் பங்கு ஒன்றுக்கு ரூ. 10-0-0 வீதம் இதுவரை 150-பங்குகள் சேர்ந்துவிட்டன. எஞ்சிய 150-பங்குகளில் பெரும் பகுதி வெளியூர் தோழர்களுக்கு ஒதுக்கி வைககப்பெற்றிருக்கின்றன. ஒருவர் இரண்டு பங்குகளுக்குமேல் எடுத்துக்கொள்ள இயலாது. பங்கு தேவையானவர்கள் தங்கள் விலாசம் தெரிவித்தால் மனுப் பாரம் அனுப்பி வைக்கப்பெறும்.

ஆர்கனைசர்,
ராம சுப்பிரமணியம்,
41-திப்ரான் தொட்டி தெரு,
திருச்சினுப்பள்ளி.

---


வெளிவந்துவிட்டது!
வெளிவந்துவிட்டது!!


## சமயமும் விஞ்ஞான சாஸ்திரமும்.

ஆக்கியோன்:
கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி.

தமிழில் இதுவரையிலும் வெளிவராத அரிய நூல். ஒவ்வொரு பகுத்தறிவுவாதியும் படிக்கவேண்டிய ஆராய்ச்சி நூல்.

விலை அணு 3.

பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட்,
ஈரோடு.





## 'சுந்தரி ஸ்னே.'

ஒரு சுந்தரிஸ்னே வாங்குவோருக்கு ஒரு கைகுட்டை இனும்.

சுந்தரி ஸ்னே தோலைப் பட்டுப்போல் மிருதுவாகவும், அழகாகவும், பிரகாசயாகவும் செய்வதோடு முகததில் உண்டாகும் வேர்வைக்கட்டி, பரு, மரு முதலிய தோல்வியாதிகளையும் போக்கி தோலுக்குப் புத்துயிர் அளிக்கிறது. நறுமணம் கமள்வது. விலை மலிந்தது.

ஏஜண்ட்:- A. V. R. A.
அடைக்கப்ப செட்டியார்,
52-பந்தர் தெரு, சென்னை.




## "பானியால் டூத் பேஸ்ட்"

பல்லுக்கு உறுதியளிக்கவல்லதென பல நூற்றுண்டுகளாக ஆன்றேர்களால் போற்றப்படும் ஆலம் விழுதின் சத்திஞல் தயார்செய்யப்படுவது, வாயை சுத்தம் செய்து, ஈறுகளைக் கெட்டிப்படுத்தி, பற்களுக்கு உறுதியளித்து, பற்களை முத்துப்போல் பிரகாசிக்கச் செய்கிறது.

ஸ்டாக்கிஸ்ட்
A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்,
52, பந்தர் தெரு, சென்னை.

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

## இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பாரஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. B. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவும் ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும்.
விலை அணா 8.

## லெனினும் மதமும்.

இது பொதுவுடமைக் கொள்கை வீரராகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும், விலை அணா 4.

## பொதுவுடமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை வற்புறுத்தும் மிகச் சிறந்த நூல்.
விலை அணா 3.

## கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட நாஸ்திகம் நிறைம்பிய நூல். விலை அணா 4.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யத்தால் எழுதப்பட்டது.
விலை அணா 8.

## இராமாயண ஆராய்ச்சி.

இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் இதில் கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. பாலகாண்டம் அணா 4.
அயோத்திகாண்டம் அணா 8.

## ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் மிகக் கொடிய ஆபாசங்கள் விளக்கிக் காட்டும் பெரிய புத்தகம். விலை அணா 4.

## தர்ம பரீக்ஷை.

இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்ட புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். விலை அணா 3.

## மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ள இந்திய நாட்டின் நிலைமையை விளக்கும் நூல்.
விலை அணா 3.

## பங்கஜம்.

பார்ப்பனப் புரட்டை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணா 4.

**குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

# பகுத்தறிவு வெளியீடுகள்.

## பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணா 5.

## முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 5.

## நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பெர்ட்டிரண்ட் ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், மதத்தைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணா 3.

## மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L, அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.
விலை அணா 2.

## கடவுள்.

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுளின் தன்மையும் உலகத்தோற்றத்திற்குக் காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய ரேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது 100 பக்கங்கள் கொண்டது. விலை அணா 4.

## மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன!

இந்நூல் Hon. பெர்ட்டிரண்ட் ரசல் M. A. F. R. C S. அவர்களின் சொற்பொழிவு. தோழர் C. K. மருதாச்சலம் B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது. விலை அணா 3.

## நான் சந்தேகவாதி ஆனதேன்!

இந்நூல் ராபர்ட் ஜி. இங்கர்சாலின் சொற்பொழிவு. இதில், தான் கடவுளைப்பற்றிக் கவலைப்படாத வனானதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணா 3.

புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.**

டிக்கட் 1க்கு விலை

ரூ.

4—0—0

டிக்கட்டிற்கு பணம்பெற
முடிவு தேதி 15-5-34



முதல் பரிசு பெற்றவர்.

மியூட்சுவல் கிளப்

# டெர்பி

6—6—34.

எல்லா இடங்களிலும் எமது சார்பாக டிக்கட்டுகள் விற்க ஏஜண்டுகள் தேவை.

அதிகாரம் பெற்ற மியூட்சுவல் கிளப் ஏஜண்டு:—

**S. K. வரதராஜலு, திருச்செங்கோடு, சேலம் ஜில்லா S. I.**



வெளிவந்து விட்டது! நமது புதிய பிரசுரங்கள் !!

## சோஷியலிசம்.

உலகானுபவப் பேரறிஞர் ஜியார்ஜ் பர்னட்ஷா எழுதிய "Intellegint womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் படித்துப் பார்க்கவேண்டிய நூல், புஸ்தக விலை அணா 3.

## சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் பாஷானை சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம், புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. தனிப்பிரதி வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பவும்.
50 காப்பிகள் 1—4—0. 100 காப்பிகள் 2—0—0. 500 காப்பிகள் 8—0—0. தபால் செலவு வேறு.

## போல்ஷ்விக் முறை.

விலை அணா 1. தனிப்பிரதி வேண்டுவோர் $1\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

விலாசம்:— மானேஜர்,

**குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**



உத்திரவாதமுள்ளது.
கியாரண்டி கொடுக்கப்படும்.

எவ்வித மருந்து சாப்பிட்டும் தீராத வியாதிகள், குஷ்டம், க்ஷயம், நீரழிவு, குன்மம், இருந்தால் இதில் அவசியம் குணமாகும். இதரவியாதிகளுக்கு எல்லா ஒளஷதங்களும் கிடைக்கும்.

தாம்பர பஸ்பம் அனுபானத்துடன் ½ மண்டலம் ரூ. 25. ஏழைகளுக்கு ரூ. 12-8-0.

தாளக பஸ்பம் அனுபானத்துடன் ½ மண்டலம் ரூ. 25. ஏழைகளுக்கு ரூ. 12-8-0.

ஆர். எம். நாராயணசாமி,
தன் மந்திரி வைத்தியசாலை, பழனி.



**The Right of Temple Entry.**
By.
*P. Chidambaram* **B.A., B.L.M.L.A.**
**Price Re. 1. Only.**

*Copies can be had of:-*
"Kudi Arasu" Publishing House, Erode.
R. B. P. Society Ltd., Erode.


உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்களால் வெளியிடப்பட்டது.